Regd. No. M. [illegible]. 1937 November. ஈசுவர ௵ கார்த்திகை ௴

ஆனந்தபோதினி

ANANDA BODHINI

Vol. 23. பொருளடக்கம். No. 5.

		பக்கம்
1.	கடவுள் வணக்கம் ...	321
2.	தன்னலமற்ற தொண்டு ...	323
3.	" நிட்காமன் " ...	328
4.	மதுவரக்கன் மரணம் (பாட்டு)	334
5.	பாலர்கள் பக்கம் ...	335
6.	மலர் வீரர்களும் வண்டுப் பாடகர்களும் ...	337
7.	முனிவனும் வேந்தனும் ...	341
8.	தியாகம் ...	345
9.	பண்டைத் தமிழர் மணமுறை	348
10.	பட்டாசு விற்கும் பையன் ...	350
11.	அவசர புத்தி, மது வண்டு	353, 357
12.	வைத்தியம் ...	358
13.	நமது வாணாளில், உற்ற யாக்கையின் உறுபயன் என்?	361, 362
14.	சுதந்திர வாழ்க்கையே சுக வாழ்க்கை ...	368
15.	புலால் உணவு அவசியமா? ...	371

"ஆனந்தபோதினி"

சந்தா விவரம்

வருடம் 1-க்கு தபாற்கூலி யுள்பட	இந்தியா, ஸிலோன்	1—0—0
	பர்மா, பினங், ஸிங்கப்பூர் தென் ஆப்ரிக்கா, பசரா, மெசபொடேமியா முதலிய வெளி நாடுகளுக்கு	2—0—0
நடந்துகொண்டிருக்கிற வருடத்திய தனிச் சஞ்சிகை விலை		0—2—0
சென்ற வருடங்களின் தனிச் சஞ்சிகை விலை		0—3—0

ஒரு வருடத்திற்குக் குறைந்த சந்தா கிடையாது.

(1) சந்தாதாரராய்ச் சேருகிறவர்கள் பூரணமாகப் பெயரை எழுதி யனுப்பவேண்டும்.

(2) சந்தாத் தொகையை முன்னுடிச் செலுத்தியாவது அல்லது வி. பி. யில் பணம் கட்டியாவது பத்திரிகை பெற்றுக்கொள்ள வேண்டும். எப்போது சேர்ந்தாலும் அவ்வருட ஆடிமாட முதல்தான் கணக்கு வைக்கப்பட்டு ஆடிமாத சஞ்சிகை முதல், பத்திரிகை அனுப்பப்படும்.

☞ (3) சஞ்சிகையை வி. பி. யில் வரவழைப்போர் ரிஜிஸ்டர் சார்ஜ் 8-அணுவோடு (18-4-1921 முதல் மணியார்டர் கமிஷன் 10-ரூபா வரையில் 2-அணு வாகையால்) அந்தக் கமிஷன் 2-அணு, வி. பி. க்குத் தபால் சார்ஜ் 0-0-6. ஆக 0-5-6-அதாவது 6-அணு சேர்த்து ரூபா 1-6-0 கட்டி வி. பி. யைப் பெறவேண்டும். மணியார்டர் அனுப்பினால் 1-2-0 மட்டுமே யாகும். ஆதலால் முன்னுடி மணியார்டர் அனுப்பிப் பத்திரிகை பெற்றுக்கொள்வதே நலம், இதைக் கவனிக்கவும்

(4) யாருக்கேனும் சஞ்சிகை சேராவிட்டால் அவர்கள் அம் மாதம் 15-ம் தேதி வரையில் பார்த்து அதற்குமேல் அதே தமிழ்மாத முடிவுக்குள் அவ்விவரத்தைத் தெரிவித்தால்தான் மறுபடி யனுப்பக்கூடும். பிறகு தெரிவிப்போர் கிரைய மனுப்பிப் பெறவேண்டும்.

(5) இடம் மாறும் சந்தாதாரர்கள் அடுத்த சஞ்சிகை தங்களுக்குப் புது விலாசத்திற்கு வந்து சேரும் வண்ணம் தபாலாபீஸோடு ஏற்பாடு செய்துகொண்டு நமக்குப் புது விலாசத்தை யறிவிக்கவேண்டும். இன்றேல் அடுத்த சஞ்சிகை பெரும்பாலும் பழைய விலாசத்திற்கே போய்விடும். அதற்கு நாம் பொறுப்பாளியல்ல.

(6) சந்தா நம்பரைக் குறிக்காமல் எழுதும் கடிதங்கள் கவனிக்கப்பட மாட்டா. அத்தகைய கடிதங்களால் நேரிடும் தவறுதல்களுக்கு நாம் பொறுப்பாளி யல்ல. பதிலை விரும்புவோர் ரிப்ளை கார்டாவது தபாற் பில்லையாவது அனுப்பினாலன்றி விடை யளிக்கப்பட மாட்டாது.

(7) வியாசங்களை எழுதுவோர் சுத்தமாக இலக்கணப் பிழையின்றித் தங்கள் உண்மைப் பெயருடன், மத தூஷணை, பிறர் தூஷணை, துரைத்தன விரோதம் முதலியவையின்றியும், பொது ஜனங்கள் விரும்பக்கூடியனவாகவும் எழுதவேண்டும்.

Life Subscripion ஜீவிய சந்தா	இந்தியா, சிலோன்	ரூபா	15—0—0
	பர்மா, முதலிய வெளிநாடுகளுக்கு	,,	25—0—0

ஸ்ரீ ராமகிருஷ்ண பரம ஹம்சருடைய

சரித்திரமும், உபதேசங்களும்.

நான்காம் பதிப்பு.

(ஸ்ரீ ராமகிருஷ்ணர், அவர் மனைவியாராகிய சாரதாமணி தேவி [illegible] ஸ்ரீ விவேகானந்தர் ஆகிய மூவரின் உருவப்படங்களோடு கூடியது; உயர்ந்த கிளேஸ் கடிதத்தில் அச்சிடப்பட்டது.)

சாரதாமணி தேவியார் சரித்திரமும் சேர்க்கப்பட்டது. உயர்ந்த சிலைகாலிகோ பைண்டுள்ளது.

இதன் விலை ரூ. 1—12—0.

சில வருஷங்களுக்கு முன்னர் கல்கத்தாவிலே ஞானமே திரண்டு ஓர் உருவெடுத்தாற் போன்று தோன்றி, சகல வேதாந்த சாஸ்திரக் கருத்துக்களையும் ஓதா துணர்ந்து, அறியாப் பருவத்திலேயே உலகப் பற்றுக்களைத் துறந்து, அரிய அற்புதங்களை யெல்லாம் செய்து பேரின்பத்தை யடைந்த மகாத்மாவாகிய ஸ்ரீ. ராமகிருஷ்ண பரமஹம்சரை உலகத்தில் பெரும்பான்மையும் எல்லோரு மறிவர். அமெரிக்கா, ஐரோப்பா முதலிய அன்னிய நாடுகளுக்கும் சென்று, ஆங்காங்கே, 'இந்துமதமே அழிவற்ற மதம்' என்று அனைவரும் பிரமிக்கப் பிரசங்கங்கள் புரிந்து, இந்து மதக் கொள்கைகளை யெல்லாம் ஆங்காங்குள்ள பலர் மனதிலும் புகுவித்து, அவர்களிற் பலரை இந்து மதத்தில் சேர்த்து, திக்கு விஜயஞ் செய்து வந்த ஞான சிம்ஹமாகிய ஸ்ரீ விவேகானந்த சுவாமிகளுக்கு இந்த இராமகிருஷ்ணரே ஞானாசிரியர். இங்ஙனம் அவர்க்கும் அவர் குருவாயிருந்தனரென்றால் இவருடைய மகிமை அளவிடற்கரிதா மென்பதைப் பற்றிக் கூறவும் வேண்டுமோ? இவருடைய துறவைப்பற்றிய சரித்திரமோ மிகவும் அற்புதமானது. இவருக்குத் தெரியாமல், இவருடைய தேகத்திலே ஒரு நாணயத்தைக் கொண்டு எவரேனும் தொட்டால் அந்தப் பண விஷயத்தில் அருவருப்புக்கொண்டு இவர் உடம்பு அப்பொழுதே துடிக்குமாம். இஃதொன்றினாலேயே இவரது மனத் தூய்மையை நன்குணரலாம். இன்னும் இவர் செய்த அற்புதச் செயல்கள் எத்தனையோ உண்டு. இவர் நன்றாக எழுதப் படிக்கத் தெரியாதவரா யிருந்தும் உயர்ந்த ஞானமார்க்கத்தை யுணர்ந்து தாம் அனுஷ்டித்ததோடு தம் சிஷ்யர்களுக்கும் எளிதில் விளங்கும்படி தக்க உதாரணங்களோடு அதனைப் பற்பல விதமாக உபதேசித் திருக்கின்றார். அவை யெல்லாம் பக்தி, ஞானம் மோக்ஷம் முதலிய பெரிய விஷயங்களை யெல்லாம் சுலபமாக விளக்கிக் காட்டக் கூடியவைகள். அவற்றைப் பார்ப்போரும் கேட்போரும் அறிவற்ற பேதைகளா யிருந்தாலும், நாஸ்திகரா யிருந்தாலும் தங்கள் மடமை நீங்கி உடனே ஞானமார்க்கத்திற் பிரவேசித்து நற்கதி யடைவார்க ளென்பதில் சந்தேகமே யில்லை. மேல்நாட்டு ஜடநாகரீகமானது வளர்ந்து எங்கும் பரவி ஜனங்கள் பக்தியும், ஞானமும் குறைந்துவரும் இக் கொடிய கலிகாலத்தில் இத்தகைய ஓர் அவதார புருஷர் தோன்றி, பிரபஞ்ச மயக்கம் அதிகரிப்பதற் கனுகூலமாகப் பெருகிவரும் பற்பல ஜாதன வஸ்துக்களிலும், விஷயங்களிலும் சித்தை செலுத்தாது, சர்வ சங்க பரித்தியாகஞ் செய்து ஞான வொளியை எங்கும் பரப்பியது மகா[illegible] எவருமறிவர்.

ஆனந்தபோதினி ஆபீ[illegible]தாஸ்.

காதலருக்கு இன்பந்தரும் நூதன நூல்

இன்பவாழ்க்கையின் இரகசியங்கள்

அழகிய சீமை கலிகோ பைண்டு செய்யப்பட்டு கண்ணைக் கவரத்தக்க அநேக ஆப்டோன் படங்களுடன் 400 பக்கங்களுக்கு மேல் அழகிய பேதர்வேயிட் பேபரில் சுத்தமான எழுத்தில் அச்சிடப்பட்டது.

(நான்காம் பதிப்பு) இதன் விலை ரூபா 2.

ஆனந்தபோதினி சந்தாதாரர்களுக்கு விலை ரூபா 1—8—0.

இது காதலர்க்கு இன்பந்தரும் நூதன நூல்; போகானந்தத்தை விரும்பும் பூமான்கள் ஆவலுடன் எதிர்பார்த்திருந்த ஆனந்த இரகசிய சாஸ்திரம்.

இது காதல் இன்பத்தை உள்ளவாறுணர்ந்து அனுபவித்து, இல்வாழ்க்கையை நல்வாழ்கையாக நடத்திப் பேரானந்தக் கடலில் மூழ்கி நற்சந்ததிகளைப்பெற்று, மறுமைப் பயனையும் அடைதற் கேதுவாயிருக்கும்படி பற்பல இன்பமார்க்கங்கள் நிறைந்த இந்நூல் இப்போது இனிய தமிழ்நடையில் வெளியிடப் பெற்றிருக்கிறது. இதில் நமது பூர்வீக கொக்கோக சாஸ்திரத்தின் சாராம்சங்களும், அகப்பொருள் நூல்களின் கருத்துகளும், தேக தத்துவ சாஸ்திரங்கள், வைத்திய சாஸ்திரங்கள் முதலியவற்றிற் கூறப்பட்டிருக்கும் பல அரிய விஷயங்களும், நாகரம். தெலுங்கு, கன்னடம், மராட்டி, அரபி, இந்துஸ்தானி, இங்கிலீஷ், பிரென்ச் முதலிய பாஷைகளிலுள்ள இன்பரச நூல்களின் கொள்கைகளும், இன்ப வாழ்க்கையின் இரகசிய முறைகளும், அவற்றிற்குப் பொருத்தமான மனத்தையும் கண்ணையும் கவரும் ஆப்டோன் படங்களும், லயன் பிளாக்குகளும், இன்னும் இல்வாழ்க்கைக்கு இன்றியமையாதனவாகிய அநேகம் விஷயங்களும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இதனை வாங்கிப்படிப்போர் உண்மைக் காதல் என்பது இன்னதென்பதையும், இன்னவிதமானவர்களை மணம் புரிந்தால் தான் இன்பம் ஏற்படுமென்பதையும், இல்வாழ்க்கையில் இன்னவித மணக்கிரமங்களை அனுசரித்தால்தான் அளவற்ற ஆனந்தமுற்று அழகிய சந்ததிகளைப் பெற்று ஜீவித்திருககலா மென்பதையும் உணர்ந்து இவ்வுலகத்தில் அடைய வேண்டிய இன்பத்தையும், வறுமை இன்பத்தையும் அடைவார்கள். இதனை ஒவ்வொரு குடும்பத்தினரும் வாங்கி வாசிக்கலாம்.

ஷெ தெலுங்கு பதிப்பு விலை ரூபா 2.

இல்லற இன்ப விஜயம்

"இது எங்கே யிருக்கிறது? என்ன ரூபமுடையது? இதை எப்படி உபயோகித்து ஆண் மக்களும் பெண் மக்களும் உலக இன்பத்தை அனுசரிக்க வேண்டும்?" என்று பலர் இக் கேள்விகளைக் கேட்கலாம்.

உண்மைக் காதல் ரசத்தை விரும்பும் உத்தமர்களே! சுகானந்தத்தை விரும்பும் சகோதர சகோதரிகளே! "இல்லற இன்ப விஜயம்" என்னும் சிற்றின்பரச பொக்கிஷம், ஆனந்தக் களஞ்சியம் சென்னை 'ஆனந்தபோதினி' ஆபீசில் தமிழ்நாட்டுச் சுகவாசிகளின் அதிர்ஷ்ட வசத்தால் விற்பனைக்குத் தயாரித்து வைக்கப்பட்டிருக்கிறது; இஃதோர் அருமையான தமிழ்ப் புத்தகம், இதைப் படித்து ஆண் பெண்கள் அனுபவிக்கத் தக்க இன்ப வகைகள் ச தனையும் பிரத்தியக்ஷமாகக்கண்டு பேரானந்தத்தை அடையலாம்.

இதன் விலை ரூபா 1—8—0

ஆனந்தபோதினி சந்தாதாரர்களுக்கு விலை ரூபா 1.

ஞானகாந்தி

கற்பின் ஜோதியாக விளங்கும் ஜானகாந்தி என்னும் இக்கதா நாயகியின் பதிபக்தி, அறிவு, ஆற்றல், பொறுமை, தன்னடக்கம், பிறர் துயரங் கண்டிரங்கல், பரோபகாரம் முதலியவை பல அத்தாட்சிகளோடு அனைவரும் படித்து ஆனந்திக்குமாறு வரையப்பட்டிருக்கின்றன. இதற்கு எல்லா விதத்திலும் நேர்மாறான நடத்தையுள்ள அம்புஜம் என்னும் ஸ்திரீயின் போக்கு மிகவும் கேவலமாயிருந்தும், கடைசியில் நல்லுணர்வுபெற்று சீர்திருந்தி சாந்தமடைவது எல்லோருக்கும் சிறந்த நீதியைப் போதிக்கும். எளிய இனிய நடையில் எழுதப்பட்டது. அநேக நீதிகளடங்கியது; அறிவு விருத்திக்கு நிகரற்ற ஓர் பொக்கிஷம் என்றே இதைச் சொல்லவேண்டும். புதிய பதிப்பு விலை ரூபா 1—6—0.

ஆனந்தபோதினி சந்தாதாருக்கு விலை ரூபா 1.

விலாசம்:— ஆனந்தபோதினி ஆபீஸ்,
தபால்பெட்டி நெ. 167 மதராஸ்

127534

ஜாதகாமிருத பலவிமர்சம் என்னும்

ஜாதக கணித சாகரம்.

இது வேத புருஷனுடைய அங்கங்கள் ஆறினுள் நேத்திர அங்கமாகிய. சோதிட சாஸ்திரமானது நம்மவர் எளிதிலறியும் வண்ணம் ஆரம்ப சோதிடர் முதல் பஞ்சாங்க கணித ஆராய்ச்சிவரையில் தார்பிக்ஷகால முண்டாகும் விபரம், சர்வதேச அக்ஷாம்சம் செய்யும் முறை, சாஸ்திர உபயாதிகள். வர்கோத்தமம். தசவர்க்கம் பிரிக்குமடைவு வக்கிர. ரிஜு அஸ்தமனமறிதல். துவாதசாம்ச சக்கிர நிர்ணயம், உச்சாதி கிரகசங்கியை, கேந்திர திரிகோணாதிஸ்தானங்கள், பார்வைஸ்தான பலம், திரியிரண சக்கிரமறியும் விதம், மற்றும் ஜாதக கணிதத்திற்காயவேண்டிய லக்னஸ்புடம்—நக்ஷத்திரஸ்புடம், பாவகஸ்புடம், கிரகங்களில் ஆக்ஷி, உச்சநட்பு நீச்சமபகை முதலியனவும்; மண்டல சமயசார பருவம், மனையை யளந்து ஆயம் சொல்லும் மார்க்கம்; ஆரூடபாவம், விஷயத்தை யறிந்தபிறகு முடியும் முடியாதெனக் கூறும் வகை; காலசக்கிரம், அஷ்டக வர்க்கம்; கோசாரம்; லக்னபாவம்; சகோதரபாவம்; மாதுருபாவம்; புத்திர்பாவம்; ரோக பாவம்; களத்திரபாவம்; ஆயுள்பாவம்; பிதுர் பாவம்; தொழில், லாபம், விரய முதலியவைகளும்; ருதுகால பலாபலன்களை விளக்கும் மார்க்கமும் பலன் முதலியவைகளையும் செவ்வனே விளக்கி சோதிட வித்வசிகாமணிகளின் வேண்டுகோளால், சாஸ்திர சம்பந்தமான குதர்க்க வார்த்தைகளாடுபவருடன் சாஸ்திரசம்பந்தமான உண்மையைத் தெள்ளிய நடையினாலெடுத்துக் காட்டும் புராதனகணிதசாஸ்திர மூலமாய் ஒவ்வோர் விஷயங்களுக்கும் சந்தேக நிவர்த்தியாக, போதுமான காரணங்களுடன் எடுத்துக்காட்டி, ஜாதகாமிருத பலவிமர்சம் என்னும் ஜாதக கணிதசாகரம் என்னும் புதுப்பெயர் சூட்டி உல பரோபகாரமாக குறைந்த விலையில் தயார் செய்திருக்கிறோம். இப் புத்தகத்தைக் கையாள்வோர் பெரிதும் பயன்படுவாரென்பதற்கு சிறிதேனு மையமில்லை.

இதன் விலை ரூபா 1—8—0

நிமித்தியகுறி சாஸ்திரம் இதன் விலை அணா 2.

ஸ்திரி புருஷ ஜாதகத் திறவுகோல்

ஜோதிடரை விரும்பாமலே ஒவ்வொருவரும் தாம் தாமே ஜாதக கணிதம் பண்ணவும், 9 கிரகங்களை 12 இராசிகளில் அடைத்து ஆட்சி யுச்சம் இவைகளைக்கண்டு பலாபலன் சொல்லவும், இராசியில் 7 கிரகங்கள் ஒன்றாகக் கூடி யிருப்பினும், இரண்டு மூன்று கிரகங்கள் சேர்ந்திருப்பினும் வேறு விதமாக மாறி மாறியிருப்பினும் அவைகட்கு அனுபவமாகப் பலன் தெரிந்து சொல்லவும் இதனால் தெரிந்து கொள்ளலாம். இதன் விலை அணா 8.

ஆனந்தபோதினி சுத்த திருக்கணித பஞ்சாங்க ஆசிரியர்
C. G. ராஜன் B. A., அவர்களால் எழுதிய ஜோதி நூல்கள்.

“ஜாதக சிரோன்மணி” என்னும் “பிருஹத் ஜாதகம்” விலை ரூபா 2.

“ஜாதக கணிதம்” என்னும்
ஜோதிட கிரகசட்பலம் ஆயுள் கணிதம் விலை ரூபா 2—4—0.

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

ஔவையார் அருளிச்செய்த

பெட்டகம்.

புதிதாய் அச்சிடப்பட்டு வெளிவந்துவிட்டது. விலை அணா 2.

கற்கோட்டை

ஸ்ரீமான் ஆரணி குப்புசாமி முதலியாரவர்களால் வரையப்பட்டது.

இந்த அற்புதமான நாவல் ஏற்கனவே நமது சஞ்சிகையில் தொடர்ச்சியாய் பிரசுரிக்கப்பட்டு வந்ததாகும். இதன் விசேஷத்தை யறிந்து நமது சந்தாநேயர்களில் அநேகர் இதைப் புத்தகமாய் முடித்துத் தர வேண்டுமென்று பன்முறை கேட்டுக் கொண்டபடியால் இது வெளியிடப் பட்டது. ஸ்ரீமான் முதலியா ரவர்களுடைய நாவல்களை வாசித்துள்ள நம் தமிழ் நாட்டார்க்கு இந்நாவலின் சுவையையும் அழகிய கதைப் போக்கையும் நாம் எடுத்துக் காட்டவேண்டியது அநாவசியம் என்றே நினைக்கின்றோம். அவர் எழுதிய நாவல்களுள் இதுவே தலை சிறந்ததாகும். இதன் விசேஷ அம்சங்களைச் சுருக்கமாய்க் கீழே குறிப்பிடுகின்றோம்.

இந்த நாவல் ஆரம்பத்திலேயே வாசிப்போர் மனத்தைப் பூரணமாய்க் கவர்ந்து கொள்வதோடு முடியுமட்டும் அக்கவர்ச்சி நீங்காது. இது சரித்திர சம்பந்தமான நாவல் எனலாம். இதில் தேசப்ரஷ்ட மடைந்த சில உயர்குல மகுட வர்த்தனர்கள் தலை மறைந்து வசிக்கும்போது, நெஞ்சு திடுக்கிடும் பிராணாபத்துகளில் சிக்கிக் கொள்வதும், அவற்றினின்றும் தப்பித்துக் கொள்ள அவர்கள் செய்யும் வீரதீர சாமர்த்தியச் செயல்களும் சொல்லொணா வியப்பையும் சோகத்தையும் வீராசத்தையும் ஊட்டும், சில ஸ்திரீகளின் அற்புத நடவடிக்கைகளும் துணிகரமான தீரச் செயல்களும், தம் காதலிடத்தில் மெய்க்காதல் கொண்ட உத்தம ஸ்திரீகள் தம் காதலர் பொருட்டாய் எவ்வளவு வரையில் ஆடவருக்குச் சமமாய் நடந்து கொள்ளச் சக்தியுடையவர்களா யிருக்கிறார்களென்பதை நன்கு விளங்கும். இக் கதையிலுள்ள முக்கிய விசேடமாவது, இதிலுள்ள கதா பாத்திரங்களில் ஒவ்வொருவருடைய நடக்கைகளும் அவற்றின் பயன்களும் மானிடர்க்கு இன்றியமையாததான ஒவ்வொரு நீதியை அத்தாட்சியோடு புகட்டுகின்றன.

இது தெளிவான இனிய நடையில், ஆங்காங்கு நாம் உணரவேண்டிய முக்கிய விஷயங்களை யெல்லாம் விளக்கிக் காட்டி எழுதப்பட்டிருக்கிறது. இதில் நூலாசிரியர் திருவுருவப் படமும் அமைக்கப்பட்டிருக்கிறது.

இதன் விலை ரூபா 2.

“ஆனந்தபோதினி” சந்தாதாரர்களுக்கு

விலை ரூபா 1 8 0.

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால் பெட்டி நெ. 167, மதராஸ்.

கைவல்ய நவநீத வசனம்.

ஸ்ரீமான் ஆரணி-குப்புசாமி முதலியார் அவர்கள் எழுதியது.

ஆன்மாக்கள், மாயையினின்றும் விடுபட்டு மோக்ஷசாதனத்தை அடையும் பொருட்டுக் கருணாநிதியாகிய கடவுள் அருளிய வேதத்தின் உட்பொருள்களைத் தழுவிப் பல மகான்கள் பல நூற்களை இயற்றியிருக்கின்றனர். அவற்றுள் தாண்டவராய சுவாமிகள் இயற்றிய கைவல்ய நவநீதமும் ஒன்று. இதன் நடை செய்யுளாகவும் மிகவும் கடினமாயிருப்பதால் எவரும் எளிதில் வாசித்துணரும்படி இதை வசனமாக எழுதி வெளியிடப்பட்டிருக்கிறது. இதனால் முத்தி மார்க்கத்தை எவரும் நன்குணரலாம்.

இதன் விலை ரூபா 1—8—0.

6300 வருஷ ஸ்புடம். நவக்கிரக ஸ்புட கணனம் இராஜ ஜோதிட கணிதம் என்னும் சித்தாந்த இராஜ சிரோன்மணி (கிரக கரணம்) இங்கிலீஷில் விலை ரூபா. 5. தமிழில் ரூபா. 5.

சற்குணவல்லி என்னும்

சித்தூர் இளைய ஜமீன்தாரணி

(ஸ்ரீ. எஸ். எஸ். அருணகிரிநாதர் எழுதியது)

இதில் தர்மசீலன் என்னும் கதாநாயகன் முதலில் ஆனந்தசுந்தரி என்னும் மாதை மணக்கிறான். இவளோ கணவனை மதியாத மாபாதகி, சிற்றின்ப ஆனந்தத்தையே மதித்து அன்னிய ஆடவருடன் அடிக்கடி உறவாடி கொடு நீலியாகி கொண்டவனை விட்டு கண்டவனுடன் திடீரென்று மறைந்து விட்டாள். தர்மசீலன் மிகவும் யோக்கியன். பிறகு அவன் மேல் காதல் கொண்ட கோடீஸ்வரி சற்குணவல்லி என்னும் சித்தூர் இளைய ஜமீன்தாரணி அவனை உள்ளன்புடன் மணக்கிறாள். இவளோ கற்பின் அணிகலம், பொற்பின் பொற்கொடி, பொறுமையின் பொக்கிஷம், நிறையுடைமை நங்கை, வீரத் தெய்வம். கணவனைக் கடவுளென மதித்தவள். தர்மசீலன் முதல் மனைவியைக் கொன்றுவிட்டு மறு மணம் செய்துகொண்டான் என்னும் அபாண்டமான பழி, சந்தர்ப்ப சாக்ஷியங்களால் அவனைப் பலவித பரிசோதனைகளுக்கும், ஆபத்துகளுக்கும் உட்படுத்திற்று. இருந்தாலும் சற்குணவல்லி அவன்மீது வைத்த பிரியம் மாறவில்லை. கடைசியில் ஆனந்தசுந்தரி திடீரென்று ஒரு நாள் தோன்றி தன் நடக்கைக்குத் தக்க தண்டனையைத் தானே ஏற்று தன் கணவன் மீது சுமத்தப்பட்ட வீண் பழியை விளக்கி, ஆவி நீத்தாள். இதில் இருவித மாதர் நடத்தை விளக்கப்பட்டிருப்பதோடு பலவித நீதிமதிகள் தெள்ளிய எளிய இனிய நடையில் படிப்போர் மனதைப் பரவசப்படுத்தும்படி எழுதப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு ஆடவரும் பெண்டிரும் இதை வாசித்து இருமைப் பயனைத் தேடி இன்புறுவார்களாக.

இதன் விலை ரூபா 1—8—0.

ஆனந்தபோதினி ஆபீஸ்,
தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

தமிழ் மெட்டீரியா மெடிகா

என்னும்

அருமையான வைத்திய நூல்.

MATERIA MEDICA.

நீங்கள் எதிர்பார்த்திருந்த 3-ம் பதிப்பு



இவ்வரிய பெரிய வைத்திய புஸ்தகமானது ஆங்கில மருந்து கலப்பு விவர முறைகளைத தமிழில் விளக்கமாக உள்ளங்கை நெல்லிக்கனிபோல் நன்கு விளக்குவது. இன்னின்ன நோய்க்கு இன்னின்ன விதமாக மருந்துகளைச் சேர்த்து மிக்சர் (Mixture) முதலானவை செய்து சாப்பிட வேண்டுமென்பதை இந்நூல் நன்றாகக் கூறுகின்றமையால் இதை ஓர் 'ஆபத்துக் குதவும் தோழன்' என்று அனைவரும் நம்பலாம். இது வைத்திய அனுபவம் மிகப் பெரிதும் உடைய ஒருவரால் எழுதப்பட்டது. ஒவ்வொருவரும் தங்களுக்குத் தாங்களே கூடிய வரையில் நோய்களுக்குப் பரிகாரம் செய்து கொள்ளவும் இந்நூல் மிகவும் உபயோகப்படும். இது டபிள் கிரௌன் 1 × 16 பக்க அளவில் 470 பக்கங்களுக்குமேல் கிளேஸ் காகிதத்தில் அச்சிடப்பட்டு முழு காலிகோ பைண்டு செய்தது.

இதன் விலை ரூபா 3.

ஸம்ஸ்கிருத முதற் புத்தகம்.

(துரைத்தனத்தாரால் அங்கீகரிக்கப்பட்டது.)

சம்ஸ்கிருத மொழியைக் கற்க விரும்புவோர்க்கு இப் புத்தகம் பேருதவியாயிருக்கும். ஆசிரியரின்றியே இப்புத்தக வாயிலாக சம்ஸ்கிருதத்தைக் கற்றுணரலாம். பாடபுத்தகக் கமிட்டியாரால் அங்கீகரிக்கப்பட்ட இப் புத்தகம் முதற் பதிப்பை இவ்விரண்டாம் பதிப்பில் பல திருத்தங்கள் பெற்றிருக்கின்றன. பேரறிஞர் பண்டார்கர் சம்ஸ்கிருத இலக்கணத்தைத் தழுவி இப் புத்தகம் அப்பியாச மொழிபெயர்ப்போடு எழுதப்பட்டிருக்கிறது.

இது டபிள் கிரௌன் 1 × 16 பக்க அளவில் 246.பக்கங்கொண்டது. இதன் விலை அணா 8-தான். சொற்ப பிரதிகளே கைவசம் இருக்கின்றன. உடனே ஆர்டருக்கு முந்துங்கள்.

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால்பெட்டி 167, மதராஸ்.

ஆசிரியரின் ஆங்கிலந் தெரிந்து கொள்ளும் ஆனந்த

ஆங்கில பாஷா போதினி.

(நான்காம் பதிப்பு) விலை ரூபா 2.

ஆனந்தபோதினி சந்தாதாரர்களுக்கு விலை ரூ. 1—8—0.

எம். ஏ., எல். டி. பட்டம் பெற்ற ஆங்கில போதகாசிரியராகிய திருவாளர் எம். ஷண்முகசுந்தர முதலியாரவர்களால் இயற்றப்பெற்ற உயர்ந்த திருத்தங்களோடும், சிறந்த அமைப்புகளோடும், நிறைந்த போதனைகளோடும் இப்பதிப்பு வெளிவந்திருக்கிறது.

800-பக்கங்களுக்குமேல் திக்கு காகிதத்தில் அச்சிடப்பட்டு சீமை காலிகோ பைண்டு செய்யப்பட்டது

பற்பல கதைகளும், பாரதக் கதைகளும், ஸ்ரீ கிருஷ்ணர் சரித்திர சுருக்கமும் அடங்கியது. அவற்றிற்குப் பொருத்தமான அழகிற் சிறந்த 16-ஆப்டோன் படங்களுடன் கூடியது.

இக் காலத்தில் இங்கிலீஷ் இராஜ பாஷையாயிருப்பதால் அதை எல்லோரும் கற்றுக்கொள்ள வேண்டியது அவசியமா யிருக்கின்றது. அப்படிப் படிக்காத சிலர், பல சங்கடங்களை அடைகின்றனர். ஆதலின், அத்தகையினர் கற்றுக் கொள்வதற் குதவியா யிருக்கும்படி ஆங்கில பாஷையைத் தமிழ் மக்களுககு எளிதில் போதிக்கும் அரிய போதனு முறை நூலாகிய இது பலர் வேண்டுகோளுக் கிணங்க வெளியிடப் பெற்றிருக்கிறது.

இதனைச் சிரத்தையுடன் படிப்பவர் பணச் செலவில்லாமலும், வேறெவ்விதக் கஷ்டமில்லாமலும் மிக எளிதில் இங்கிலீஷ் பேசவும் படிக்கவும் எழுதவும் கற்றுக் கொள்ளலாம். ஆயிரக்கணக்கான பணச் செலவு செய்து 10 வருஷம் படிப்பதனால் எவ்வளவு ஆங்கில தேர்ச்சி யுண்டாகுமோ அவ்வளவு தேர்ச்சியை ஒரு மாதம் அல்லது 40-நாளில் இப் புத்தகத்தின் உதவியைக் கொண்டு அடைந்து, ஆங்கிலத்தை அதி விரைவில் படித்துக் கொள்ளலாம் இதில் சுலபமாக இங்கிலீஷ் கற்றுக்கொள்ளத்தக்க மார்க்கங்கள் விளக்கப்பெற்றிருக்கின்றன.

இதில் இதுவரை வெளிவராத நூதன பாட முறைகளெல்லாம் வெளியிடப்பட்டிருக்கின்றன. இன்னும் ஒரு ரூபா முதல் 10 ஆயிரம் ரூபாவரை சம்பளப்பட்டிக் கணக்கு, வட்டிக் கணக்கு, ஒவ்வொரு தேசத்திலும் எற்படும் மணி வித்தியாசம், அன்னிய தேச நாணய மதிப்பு முதலியன வெல்லாம் தெளிவாக விளக்கிக் காட்டப்பட்டிருக்கிறது.

மேற்படி தெலுங்கு பதிப்பு விலை ரூபா 2.

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால் பெட்டி நெ. 167 மதராஸ்.

உ
ஓம்
பரப்பிரஹ்மணே நம :

ஆனந்தபோதினி

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"—திருவள்ளுவர்.

(ALL RIGHTS RESERVED.)

தொகுதி 23	ஈசுவர ௵ கார்த்திகை மீ ௧௨ 1937 ௵ நவம்பர் மீ 16உ	பகுதி 5

கடவுள் வணக்கம்.

வெள்ளந்தாழ் விரிசடையாய் விடையாய் விண்ணோர்
பெருமானே யெனக்கேட்டு வேட்ட நெஞ்சாய்ப்
பள்ளந்தாழ் உறுபுனலிற் கீழ்மே லாகப்
பதைத்துஉருகும் அவர்நிற்க என்னை ஆண்டாய்க்கு
உள்ளந்தாள் நின்றுஉச்சி யளவு நெஞ்சா
உருகாதால் உடம்பெல்லாங் கண்ணாய் அண்ணா
வெள்ளந்தான் பாயாதால் நெஞ்சங் கல்லாம்
கண்ணிணையும் மரமாந்தீ வினையி னேற்கே. (1)

வினையிலே கிடந்தேனைப் புகுந்து நின்று
போதுநான் வினைக்கேடன் என்பாய்போல
இனையன்நான் என்றுஉன்னை யறிவித்து என்னை
ஆட்கொண்டு எம்பிரானானாய்க்கு இரும்பின்பாவை
அனையநான் பாடேன்நின்று ஆடேன் அந்தோ
அலறிடேன் உலறிடேன் ஆவி சோரேன்
முனைவனே முறையோநான் ஆன வாறு
முடிவுஅறியேன் முதல்அந்தம் ஆயினானே. (2)

ஆயநான் மறையவனு(ம்) நீயே யாதல்
அறிந்துயான் யாவரினுங் கடைய னாய
நாயினேன் ஆதலையு(ம்) நோக்கிக் கண்டு
நாதனே நான்உனக்குஓர் அன்பன் என்பேன்
ஆயினேன் ஆதலால் ஆண்டு கொண்டாய்
அடியார்தாம் இல்லையே யன்றி மற்றோர்
பேயனேன் இதுதான்நின் பெருமை யன்றே
எம்பெருமான் என்சொல்லிப் பேசுகேனே. (3)

அரும்பொருள் விளக்கம்

(இ-ள்.) கங்காநதி தங்கிய விரிந்த சடாதாரனே! ரிஷபவூர்தியே! தேவர்தலைவனே! எனத் துதிக்கக் கேட்டு, விரும்பிய திருவுள்ளமுடைய பெருமானே! பள்ளத்தில் பாய்கிற நீரைப்போல் கீழும் மேலுமாய் பதைத்து மனமுருகும் அந்த மெய்யடியார்கள் இருக்கும்போது, அடியேனை ஆட்கொண்டு அருளினாய்; அத்தகைய உன் பொருட்டு, உள்ளங்காலிலிருந்து தலையுச்சி வரை நெஞ்சாகி உருகாததாலும, தேக முழுவதும் கண்ணாகி, அண்ணலே! விழிநீரைப் பெருக்காததாலும், தீவினையுடைய எனக்கு மனங் கல்லாகவும், இரு கண்களும் மரமாகவும் ஆய் விட்டன. (எ-று.)

பரம பக்தர்களெல்லாம் இறைவனை யடைய தவஞ்செய்து கொண்டிருக்க, ஒன்றுக்கும் பற்றாத அடியேனை வலிய ஆட்கொண்டும், அதற்கு நன்றி யறிதலைச் செலுத்து முறையில் நெஞ்சமுருகிக் கண்ணீர் பெருக்கி வந்திக்காதது சடத்தன்மையையே காட்டுகிறது என்பது இச் செய்யுளின் கருத்து. (1)

(இ-ள்) ஆதியும் அந்தமுமில்லா அருட்பெருஞ் சோதியே! கன்மத்தில் கிடந்துழலும் அடியேனிடத்தில் புகுந்து, 'நீ பாசமற்றவன்; வா' என்று கூறுவதுபோல், 'நான் இத் தகுதியுடையவன்' என்று உன்னை அறிவித்து அடியேனை ஆட்கொண்டதன் வாயிலாக, எனது தலைவனான உன்பொருட்டு இரும்புப் பதுமையை யொத்த உன் பெருமையைப் பாடவில்லை; களிப்பு மிகுதியால் உன் எதிரில் நின்று ஆடவில்லை; எனது இழிதகைமையையும், உனது பெருந் தன்மையையும் கருதி நன்றியறிதலோடு வாய்விட்டு அலறவில்லை; கதறவில்லை; என் ஆருயிரை உனது நன்றிக்குக் கைம்மாறாகப் பலியிடவில்லை; முழுமுதற் பெருமானே! நான் இவ்விதமிருப்பது சிறிதாயினும் முறையோ! இதன் முடிவு என்னாகுமோ அறியேன். (எ-று)

மாணிக்கவாசகப் பெருந்தகையார், இப்பாட்டிலும் நம்மனோர்க்குப் புத்தி புகட்டு முறையில், ஆண்டவனது அருட்டன்மையை விளக்கியுள்ளார். (2)

(இ-ள்) ஆராயப்பட்ட நால் வேதங்களுக்குந் தலைவன் நீயே என்பது அறிந்து, அடியேன் மக்களனைவரிலும் கடையவனாகிய நாயேன் ஆனதையும் நோக்கிப் பார்த்து, நாதனே! நான் தேவரீருக்கு ஒரு மெய்யன்பன் என்று எப்படியோ ஆய்விட்டேன். ஆதலால், என்னை ஆட்கொண்டு அருளினாய்; பேயனாகிய என்னைவிட வேறு அடியார்கள் இல்லையா? இதுதான் உனது பெருந்தன்மையோ! எம்பெருமானே! உனது செயலை என்னென்று விவரித்து நான் பேசுவது? (எ-று.)

கருணையே திருவுருவாகவுடைய முழு முதற்கடவுள் ஆட்பாலவர்க்கு அருளும்வண்ணம் இன்னதென எளிதில் உணர முடியவில்லை யென்பார், ஆய நான் மறையவனும் நீயேயாதல் அறிந்து யான் யாவரினும் கடையவனாய நாயினேன் ஆதலையும் நோக்கிக் கண்டு நாதனே நான் உனக்கு ஓர் அன்பன் என்பேன் ஆயினேன். ஆதலால் ஆண்டுகொண்டாய்.........எம் பெருமான் என்சொல்லிப் பேசுகேனே' என்று அருளினார். (3)

ஆனந்தபோதினி

தன்னலமற்ற தொண்டு

இவ்வுலகில் வாழும் ஒவ்வொரு மனிதனும் தன்னை யறிந்தோ அறியாமலோ, தனக்கு நன்மை செய்து கொள்வதைக் காட்டிலும், பிறருக்கே அதிகமாகப் பாடுபட்டு உதவி புரிகிறான். அதாவது ஒவ்வொருவரும் தன் பெற்றோருக்கோ, மனைவி மக்களுக்கோ அல்லது குடும்பத்திற்கோ அல்லது தன் சமூகத்திற்கோ அல்லது தான் பிறந்த நாட்டிற்கோ சேவை செய்து வருகின்றனர். இவ்விதம் செய்யாதவரை உலகில் காண்பது மிக அரிது. ஜனநாயக ஆட்சி நிலவியுள்ள தேசத்திலுஞ்சரி; சர்வாதிகார ஆட்சி ஏற்பட்டுள்ள தேசத்திலுஞ் சரி; மக்கள் தங்கள் தேசத்துக்காக வாயினும் பாடுபடுவதைக் காண்கிறோம். தங்கள் நாட்டுக்குக் கெடுதி அல்லது அகௌரவ மேற்பட்டு விடப் போகிற தென்று கருதி, அவ்விதம் எதுவும் நோதவாறு காப்பதற்குத் தங்கள் உயிர்களையும் தியாகஞ் செய்ய முன் வருகிறார்கள். இவ்விதம் ஏதோ ஒரு வகையில் உலகிலுள்ள மக்கள் தன்னலமற்ற தொண்டைச் செய்து கொண்டு வருகிறார்கள். தன் குடும்பத்திற்கோ சமூகத்திற்கோ, அல்லது நாட்டுக்கோ சேவை செய்யாது, தனது சுக சௌக்கியங்களையே கருதி அல்லும் பகலும் பாடுபட்டு தனக்கு வேண்டிய தேவைகளைப் பெருக்கிப் பூர்த்தி செய்து கொண்டுவரும் மனிதர்களும் இருக்கிறார்களே யென்றால், அவர்கள் மக்கள் உருவங்களைக் கொண்டிருந்தாலும் உண்மையான மக்கள் அல்லர்; மனித உருவந்தாங்கிய மிருகங்கள்; மிருகங்களிலும் கேவலமானவர்களாவர். அத்தகையோர் ஜனசமூகத்தினிடை வாழ்வதற்கே தகுதியற்றவர்களென்று நாம் துணிந்து கூறுவோம்.

மக்கள் அனைவரும் தன்னலமற்ற தொண்டை மேற்கொண்டிருக்கும், ஜன சமூகத்தில் கலகங்களும், சண்டைகளும், கொலை முதலிய கொடுமைகளும் நிகழ்வானேன்? உலகில் ஒரு தேசத்தோடு மற்றொரு தேசம் யுத்தம் செய்வானேன்? என்ற கேள்வி எழுவது இயற்கையே. இதற்கு நாம் ஒன்றுதான் கூற முடியும். இதுவரை கூறி வந்த தன்னலமற்ற தொண்டில் உள்ள குறைபாடே மேற்குறித்த

அனர்த்தங்களுக்கெல்லாம் காரணமாகும். ஒரு மனிதன் தன் நன்மை, தன் சுகசௌக்யங்களை மட்டுங் கவனிப்பதோ டல்லாது தன்னைச் சேர்ந்தவர்களுக்கும் உதவி புரிகிறான்; ஆயினும், அதுவும் தன்னலமேயாகும். 'அது எப்படி தன்னலமென்று கூறலாம்; ஒருவன் தன் சுகசௌக்கியங்களைக் கூட துறந்துவிட்டு குடும்பத்திற்காகப் பாடுபடுகிறானே! தன் பெற்றோர்க்கு ஏதேனும் நேர்ந்து விட்டதென்றால், அவன் எவ்வளவு துடி துடிக்கிறான்? தன் மனைவிக்கோ, மக்களுக்கோ ஒன்று உற்று விட்டதென்றால் அதை நிவர்த்திக்கும் வரை ஊண் உறக்கத்தையும் தவிர்த்துப் பாடுபடுகிறானே! அவர்கள் பட்டினி பசியோடு இருக்கக்கூடாது என்றும், அவர்கள் சிறிதும் கஷ்டமின்றிச் சுகமாக வாழ வேண்டுமென்றும் அவன் நெற்றி வியர்வை நிலத்தில் விழப் பாடுபட்டும், தான் பட்டினியாகவுங் கிடந்துங்கூட பொருள் சேகரித்து வைத்துக் காப்பாற்றுகிறானே! தன் சமூக முன்னேற்றத்துக்காகவும், தன் நாட்டின் வளர்ச்சிக்காகவும் அல்லும் பகலும் பாடுபடுகிறானே! சமயம் நேர்ந்தால் உயிரைக் கூடத் தியாகஞ் செய்கிறானே' என்று சிலர் கேட்கலாம்.

அம் மனிதன் எந்நோக்கத்தோடு தன் குடும்பம், சமூகம், நாடு முதலியவைகளுக்காக உழைக்கிறான் என்று ஆராய்ந்து பாருங்கள். தன் பெற்றோர், தன் மனைவி மக்கள், தன் குடும்பம், தன் சமூகம், தன் நாடு என்ற ஒருவிதப் பற்றுடனேயே அவன் உழைக்கிறான். 'இவர்கள் தன்னைச் சேர்ந்தவர்கள்; அதனால் அவர்களுக்கு உதவி புரிய வேண்டும்; இது தான் பிறந்த சமூகம்; இதுதான் பிறந்தநாடு; அதனால் இவற்றின் வளர்ச்சிக்காகப் பாடுபடவேண்டும்' என்று குறுகிய நோக்கத்தோடு சேவை செய்கிறான். ஆதலால், அவன் தன் சொந்த நலத்தைக் கவனியாது பாடுபட்டாலும் தன்னலமேயாகும்; சுயநலம் என்ற தன்மையைத்தான் அடையும். ஆகவே, தன்னை மறந்து பிறருக்கு உழைப்பதைத் தன்னலமற்ற தொண்டு என்று நாம் முதலில் கூறினோமாயினும், அது உண்மையான தன்னலமற்ற தொண்டாகாது. தன்னலமற்ற தொண்டு என்பதற்கு இதைக் கட்டிலும் உயர்ந்த லட்சியம் ஒன்று இருக்கிறது. அது என்ன? யான் எனது என்ற பற்றை—அதாவது தன்னலப் பற்றை—முதலில் அறுக்கவேண்டும். தனக்கு மட்டுமல்ல; உலகில் வாழும் எல்லா மக்களுக்கும் தன்னாலான சேவையைச் செய்யவேண்டும். இவ்வித பரந்த நோக்கத்தோடு செய்யப்படும் சேவையே உண்மையான தன்னலமற்ற சேவையாகும்.

இவ்வித தன்னலமற்ற சேவையுணர்ச்சிக்குச் சமய (மத) அறிவு அத்தியாவசியமாகும். சமய அறிவு இல்லாவிடில், மக்களுக்கு எளிதில் சேவை யுணர்ச்சியே யுண்டாகாது. ஒரு சிலர் இவ் வுண்மையை ஒப்புக் கொள்வதில்லை. அவர்கள் சமயத்தை அல்லது மதத்தை ஒரு வெறுங் கொள்கையாகவும், நம்பிக்கையாகவுமே கருதுகிறார்கள். மனி

தனின் அறியாமையின் விளைவே மதமென்றும், வெறும் மாயையிலிருந்து பிறந்ததே மதமென்றும் எல்லாம் அவர்கள் சொல்லுகிறார்கள். இவ்விதங் கூறுவது அவர்களது அறியாமையையே விளக்குகிறது. இக் கோஷ்டியார் சமயத்தைப்பற்றி தீவிரமாகச் சிந்தித்துப் பார்ப்பதில்லை; மேலெழுந்தவாரியாக வெறும் அறிவைக் கொண்டு மாத்திரம் தான் மதத்தைப்பற்றி அறிய முயல்கிறார்கள். இதுவே அவர்கள் சமயத்தைப் பற்றிய தடுமாற்றத்துக்குக் காரணமாகும். இத்தகையவர்களால் தன்னலமற்ற சேவையைச் செய்ய ஒரு நாளும் இயலாது

சமய அறிவே மனிதனின் அகக் கண்ணைத் திறக்கிறது. சமயம் உலக மக்களுக்கு என்ன போதிக்கிறதென்று நோக்குங்கள். உலகில் பலவித சமயங்கள் வழங்குகின்றனவாயினும், அவை ஒன்றோடொன்று முரண்பட்ட பல்வேறு கொள்கைகளை யுடையனவாயினும், அவைகளின் அடிப்படையான தத்துவம் என்னவென்பதையே இங்கு ஆராய்ந்து பார்க்க வேண்டுகிறோம். எல்லா சமயங்களும், 'கடவுள் ஒருவன் உண்டு; உலகிலுள்ள ஜீவராசிகளெல்லாம் அவனது மக்களே; அந்த ஜீவராசிகளெல்லாம் ஒன்றோடொன்று சகோதர நேயம் பூண்டே வாழவேண்டும். ஒவ்வொரு ஜீவனும் தனக்காகவன்றி, பிறவுயிர்களுக்கு உதவி புரியவே பிறந்திருக்கின்றன. இதுவே பிறவியின் நோக்கம். இந் நோக்கத்தின்படி நடவாத உயிர்கள் இறைவன் அருளைப் பெற முடியாது' என்றே போதிக்கின்றன. எனவே, ஜீவகாருண்யத்தையும், மக்களிடையே ஐக்கியத்தையும், சகோதர பாவத்தையும் உண்டு பண்ணுவது சமய உணர்ச்சியே என்று ஏற்படுகிறதல்லவா! இத்தகைய சமய உணர்ச்சி கைவரப் பெற்றவன், சமயத்தின் தத்துவத்தை நன்குணர்ந்தவன், 'இது என் ஜாதி! இது என் சமூகம்! இது என்நாடு! இவர் என் உறவு' என்றெல்லாம் தன்னலப்பற்றோடு—குறுகிய மனப்பான்மையோடு கூறுவானா? என்று யோசித்துப் பாருங்கள் வாசகர்களே! 'உலகிலுள்ள எல்லா நாடுகளும் என் தேசம்; எல்லா மக்களும் என் சகோதரர்கள்; அவர்களுக்கு என்னாலான உதவிபுரிய நான் கடமைப்பட்டவன்; மனித சமூகத்துக்கு மட்டுமல்ல; சகல ஜீவராசிகளுக்குஞ் சேவை புரியவே நான் பிறந்தேன்' என்று அல்லவோ எண்ணித் தன்னலமற்ற தொண்டு செய்து வருவான். ஆகவே, மனிதனின் தன்னல மனப்பான்மையை—மிருகப் பிராய உணர்ச்சியை—முற்றும் மாற்றும் ஒரு மகாசக்தி சமயத்துக்கு உண்டு என்பதை, பகுத்தறிவாளர்கள் என்று தங்களைக் கூறிக்கொள்ளும் மேற்படி கோஷ்டியார் அறியாமையாலேயே, அவர்கள் சமயத்தைப்பற்றித் தங்கள் மனம் போனவாறு கூறுகின்றனர். அவர்கள் பேச்சை நாம் பொருட்படுத்தக் கூடாது என்று கேட்டுக்கொள்ளுகிறோம்.

தன்னலமற்ற தொண்டு இன்னதென அறிவுறுத்திச் சென்ற பெரியார் பலர் நம் இந்தியாவில் இருந்திருக்கின்றனர். அவர்களது வாழ்க்கை வரலாறுகளை நாம் படித்துப் பார்த்தோமானால், உண்மை உணரலாம். நம்மிடையே இன்று ஒரு பெரியார் இருக்கிறார். அவர் தன்னலத் தியாகி; அவர் நமக்கெல்லாம் தன்னலமற்ற தொண்டு இன்னவிதமான அறிவுறுத்தி வருகிறார்; நடத்திக் காட்டி வருகிறார். மனித ஜீவாபிமானத்தோடு உலக மக்களுக்கெல்லாம் உண்மையான சேவை செய்து வருகிறார். அவர் யார் என்று இந்நேரம் அறிந்திருப்பீர்கள் அல்லது அறிய ஆவலுற்றிருப்பீர்கள். அப் பெரியார்தான் மகாத்மாகாந்தி. அவர் நம் இந்தியாவில் பிறந்தவராயினும், உலக முழுதும் போற்றக்கூடிய உத்தம புருஷராய் இருந்து வருகிறார்.

ஒரு சமயம், மகாத்மாகாந்தியை ஒருவர், "இந்தியாவின் அரசியல் விடுதலையை அடைவதற்காக, பலாத்காரத்தையும், இரத்தப் புரட்சியையும் கைக்கொள்வது நியாயமா?" என்று கேட்டாராம்.

அதற்கு மகாத்மா, "அதைப்பற்றிச் சரித்திரம் உங்களுக்கு பதில் சொல்லும். ஆனால், சாத்வீக முறைகளால் ராஜ்ய விடுதலையைப் பெறுவது சாத்திய மானதாகும்" என்று பதிலளித்தாராம்.

"சாத்வீக முறைகளால் ஒருவேளை முடியாதென்றால்..........?" என்று கேட்கப்பட்டது.

உடனே காந்தியடிகள், "இந்தியா பாதாளத்தில் வீழட்டும்; இந்திய விடுதலைக்காக நான் பலாத்கார முறையோ இரத்த புரட்சியோ கைக்கொள்ளும்படி ஒருகாலும் சொல்லமாட்டேன்" என்று கூறினாராம்.

சமீபத்தில் புரொபஸர்-ஸர். ராதாகிருஷ்ணன் சென்னை கன்னிமரா ஹோட்டலில் ரோட்டரி கிளப் சார்பில் நடைபெற்ற கூட்டத்தில் "அறிவாளிகளின் தோல்வி" என்னும் விஷயமாகப் பேசியபோது, மேற்படி சம்பவத்தைக் குறிப்பிட்டு 'இவர்தான் சரியான அறிவாளி; லட்சியங்களுக்காகச் சேவை புரிய தமது வாழ்நாளை அர்ப்பணஞ் செய்தவர். இவரது லட்சியங்கள் குறுகிய நோக்க முடையன வல்ல; ஒரு வகுப்பிற்கோ அல்லது ஒரு குறிப்பிட்ட தேசத்திற்கோ மட்டும் சொந்தமானதல்ல; இத்தகைய சேவையை இவரால் எவ்விதஞ் செய்ய முடிகிறது? இவர் எல்லாவிதமான தன்னலப்பற்றையும் உதறி எறிந்திருப்பதால்தான். தன்னலமற்ற சேவையே குறிக்கோளாகக்கொண்டு இவர் சேவை புரிகிறார். மனித சமூக முழுவதுக்கும் சேவை புரிவதே உத்தமமான மார்க்கம்" என்று மகாத்மாவைப் பாராட்டி யிருக்கிறார்.

மகாத்மாகாந்தி மாபெரும் அரசியல் நிபுணராயும் தலைவராயுமிருந்தும், பாரதநாட்டு விடுதலைக்காகப் பலாத்காரமோ, இரத்தப் புரட்சியோ கூடாதென்று ஏன் கூறுகிறார்? அஹிம்சா தர்மம், சத்தியாக்கிரக முறை என்று அடிக்கடி ஏன் கூறுகிறார்? உலகிலுள்ள அரசியல் நிபுணர்களெல்லாம் தங்கள் நாட்டு முன்னேற்றத்துக்குப் பலாத்கார முறைகளையும், புரட்சிகளையும் கையாண்டு வருவதை நாம் கண்டு வருகிறோம். ஜர்மன் சர்வாதிகாரி ஹிட்லரும், இத்தாலி சர்வாதிகாரி சினர் முஸோலினியும் தங்கள் நாட்டு முன்னேற்ற விஷயமாகப் பலாத்கார முறைகளையும் இரத்தப் புரட்சியையும் செய்து வருவதையும், தங்கள் நாட்டு வளர்ச்சிக்காக, பிறநாடுகள் மீது படையெடுத்தும், போர் புரிந்தும் ஹிம்சை செய்து வருவதோடு, தங்கள் நாட்டில் அவர்களுக்கும் எதிராக வேலை செய்யும் தங்கள் நாட்டு மக்களையுங் கூட சித்திரவதை செய்தும், கொலை புரிந்தும் வருவதையும் பத்திரிகைகளில் படித்து வருகிறோம். அவ்விதமிருக்க, மகாத்மாகாந்தி இந்திய விடுதலைக்குப் பலாத்கார முறையைக் கைக் கொள்ளாது அஹிம்சா தர்மத்தை யடிப்படையாகக் கொண்டு, சத்தியாக்கிரக வழியில் போராட்டத்தை நடத்தி வருவதேன்? மகாத்மாகாந்தி சமயத்தின் உண்மைத் தத்துவத்தையும், தன்னலமற்ற சேவையின் தத்துவத்தையும் நன்கு உணர்ந்திருக்கிறார். ஹிட்லர் முஸோலினி போன்ற மேனாட்டு அரசியல் தலைவர்களோ மேற்படி தத்துவங்களை யுணரவில்லை. இதுவே இவ் விருதிறத்தாருக்கும் உள்ள வேற்றுமையாகும்.

ஆகவே, உலகம் க்ஷேமமுற வேண்டுமெனின், உலக மக்கள் ஐக்கியத் தன்மையையும், சகோதரத்துவத்தையும் பெற வேண்டுமெனின், கொடூர சம்பவங்களும், யுத்தங்களும் ஒழிந்து சமாதானம் எங்ஙனும் நிலவ வேண்டுமெனின் தன்னலமற்ற தியாக உணர்வு மக்களிடையே பரவவேண்டும்; வேரூன்ற வேண்டும். அத்தகைய தன்னலமற்ற தியாக உணர்வு ஏற்படுவதற்குச் சமய அறிவு அத்தியாவசியம். இன்று மனித சமூகத்துக்கு அத்தியாவசியமான தேவைகளுக்குப் பொருத்தமான ஒரு சமயத்தை வளர்க்க வேண்டியது அறிஞர் கடமை. சத்தியத்தையும் அன்பையும் அடிப்படையாகக் கொண்ட சமயந்தான் சிதறுண்டு கிடக்கும் இவ் வுலகத்திற்குப் புத்துயிரூட்ட முடியும். எனவே மக்கள், சமய, தத்துவம் இவற்றின் மகத்தான சக்திகளையும் உபதேசங்களையும் பின்பற்றிச் செல்ல முற்பட வேண்டும். அப்பொழுது தான் உலகம் தனது பாரமார்த்திகப் பிரபுத்துவத்தை அடைய முடியும்.

ஓம் ஸத் ஸத்:

“நிட்காமன்”

(“ராஜாராம்”)

இந்தியாவின் பெருமை இமயமலையே. நம் கதை வெகு காலத்துக்கு முன் அங்கு நிகழ்ந்தது.

“மானஸ ஸரோவம்” என்பது கங்கை உற்பத்தி ஸ்தானத்துக்கு சமீபம் உள்ள ஓர் ஏரியாகும், புராணங்கள் சத்தியலோகத்திலிருப்பதாக கூறுகின்றன.

அங்குள்ள தாமரையில் அமர்ந்துள்ள அன்னப் பறவைகள், நிஷ்டையிலிருக்கும் முனிபுங்கவர்களை ஞாபகப்படுத்தும்.

மந்த மாருதம் மலரிலுள்ள மகரந்தங்களை வாரி இறைத்து, தேகத்திலுள்ள இயற்கை நாற்றங்களை மாற்றும்.

சாதுக்களோடு பல்காலம் பழகினும், உண்மை நெறியறியாத மூடரைப் போல, மண்டூகங்கள், தாமரையில் கட்டவிழ்ந்தோடும் மதுவை யுண்ணவறியாதிருக்க, கானத்திருந்து ரீங்கார மிட்டுவரும் வண்டினங்கள், நறவம் மாந்தி நனி களிப்பது, ஒருநாள் பழகினும் உண்மை நெறியறியும் விவேகியை குறித்தது.

வானத்தை யளாவும் வடவால விருக்ஷங்களில் புள்ளினங்களின் விதவிதமான இனிய கானங்கள், சாத்திர ஆராய்ச்சி செய்யும் சாதுக்களோவென ஐயுறச் செய்தன.

பூக்களை நாடிச் செல்லும் வண்டினங்களின் ரீங்காரம், பகவானை நாடிச் செல்லும் பக்தர்களின் நாமகோஷத்தை ஒத்தது.

மது உண்டு மகிழ்ந்துள்ள வண்டுகளோ! ஆத்மாநுபோத மது உண்டு அக நாட்டத்துள் ஆழ்ந்து ஆனந்திக்கும் நிட்களங்கரை நினைப்பூட்டின.

இத்தகைய இயற்கை வனப்பு கொண்ட இமயமலைச் சாரலில், முனிவர்கள் மனம் போல தெள்ளிய நீர் சிறந்து, அவர்களின் வேத கோஷம் போல் “சல சல” வென்ற நீரோட்டமுள்ள அருவிகளை யடுத்து முனிவர்கள் பலர் பன்னகசாலையில் தவமியற்றினர்.

கன்றுக்குப் பாலைத்தரும் பசுவின் கருணையை யொத்த பரமேஸ்வரி சஹிதராய பரமசிவன், ரிஷபாரூடராக இருடிகளின் தவம் பலித்ததென காட்சி தந்தனர்.

முனிவர்கள் புளகாங்கிதராயினர். நான் மறையாலும் தேவார திருவாசங்களாய தமிழ் மறையாலும், சொந்த கவிகளாலும் கானம் செய்தனர். சந்தோஷ மிகுதியால் மெய்மறந்து நர்த்தனம் செய்தனர். பன் முறையும் பணிவார் பலர், ஒன்றும் தோன்றாமல் ஓடுவர் சிலர், இம் மாதிரி ஆரவாரத்துடன் வரவேற்றனர்.

“நாமரூபம் மாயா காரியம்” என்பதனை யுணர்ந்து ஆத்மானு சந்தானியாகிய சனத்குமரர் மட்டும், தனக்குள் விளங்கும் தன்வடிவாகும் தனக்கு அந்நியமில்லாத ஆன்ம வஸ்துவாகிய பரமசிவனை, கண்டு களித்திருப்பதால் வெளியில் நடக்கும் இந்திரியப் புலனாகும் ஆரவாரங்களை கவனிக்கா திருந்தனர்.

பரமேஸ்வரர் சனத்குமரனின் உண்மை ஞானத்தை உள்ளத்தில் மதித்து, மகிழ்ந்தனர். தீரனென்று மெச்சினார். நாமரூப காரணியாகிய பரமேஸ்வரிக்கு சனத்குமாரின் செய்கை வெறுப்பைக் கொடுத்தது. கோபத்தால் உதடுகள் துடித்தன வில் போன்ற புருவங்கள் நெளிந்தன. கண்களின் கோபம் வில்லிலிருந்து புறப்படும் அம்புகளை ஒத்தன. கொவ்வைக் கனியென சிவந்த கண்கள் கோபத்தின் அளவைக் காட்டின. ஒளி கிளம்பிய பின் வெடி கிளம்புதல் போல் தீட்சண்யமான பார்வைக்குப் பின் கோபத்தோடு கூடிய கீழ்கண்ட வார்த்தைகளின் சத்தம் கிளம்பிற்று.

“ஹே! சனத்குமா! நீ மிகவும் செருக்குற்றவன்! லோக நாதர்களாகிய எங்களை மதித்திலை. கோட்டான் அறியுமோ ரவியின் ஒளி! நீ எவ்வாறு அறிவை எங்கள் வரவை! தாழ்ந்தவனாக இருக்கத்தக்க உனக்கு மரியாதை எப்படித் தெரியும்? “தாழ்ந்து நிற்பவரன்றோ வாழ்ந்து நிற்பர்” இதை நீ அறியாதது ஆச்சரியமல்ல. பணிவற்ற நீ பரிகாக்கும் பறையனாகக் கடவை” என்று சபித்தனள்.

நாமரூப காரணியின் விருப்பப்படியே, தீப்பட்டு அழகுபெற்ற மாளிகையொன்று அழகிழந்து கரியானதே போல், நாமரூப லக்ஷியமான சனத்குமரனது பிராமண சரீரம் நழுவிற்று; குதிரை காக்கும் பறையனது தூலம் தோன்றியது.

உடையால் நடையும் கொடையும் மாறுவது உலக இயற்கை. ஆனால் சனத்குமார் ஆன்மானந்தத்தையே அங்கும் அனுபவித்தனர். ஆன்மா எங்கும் நிறைந்ததன்றோ! இருப்பு, விளக்கப் பிரியம் இன்றி வஸ்துக்கள் எந்த ஆதாரத்தால் விளங்கும்! ஒவ்வொரு வஸ்துவிலும், நாமரூபமாகிய மாயா காரியமும் இருப்பு விளக்க பிரியமாகிய ஆன்ம காரியமும் விளங்குவது பிரஸித்தம். நாமரூபத்தை லக்ஷியம் செய்யாத ஆன்மதீரர் ஆன்மானந்தத்தையே அடைவர்.

உலக காரியம் செய்ய வலிவான இந்திரியங்களும் விஷயாகாரமுள்ள மனமும் சாதகமாகும். சாந்த ரூபியாகிய சனத்குமரர் அக நாட்டத்தால் பிரவர்த்தியற்றவரானார். இதை அறியாத இவரது இனத்தவரென இப்போது காணப்படும் பரிப்பாகர்கள், இவரை “சோம்பேரி” என மதித்து குதிரை லாயம் காக்கும் தொழிலில் அமர்த்தினர்.

நடை பழக்கல், குதிரை தேய்த்தல், மயிர் கத்தரித்தல், அழகுபடுத்தல், சவாரி போதல் ஆகிய இந்திரிய நாட்டத்தால் செய்யப்படுவனவாகிய தொழில்களின்றி ஆன்மாது போதத்தழுந்தி யானந்திக்க சாதகமான காவற்றொழிலை களிப்புடன் ஏற்றார்.

குதிரை யுண்ணும் கொள்ளில் எஞ்சியதே இவரது ஆகாரமாயிற்று. வேலை செய்யாதவனுக்கு கூலி ஏது? "கண் முன் நின்றது புசிப்பார்" என்னும் ஜீவன் முக்த இலக்ஷணப்படி இவரும் கிடைத்ததைக் கொண்டு பசி தணிந்தனர்.

பிராமண சரீரத்தே இருந்த போது, வேதத்தே விதிக்கப்பட்ட நித்ய நைமித்ய கர்மங்களை செய்யத் தவறின் "கர்மபிரஷ்டன்" என்ற கொடிய பழிக்குப் பாத்திரனாக வேண்டும். இந்த சண்டாள ஜன்மத்தோ வேத விஹிதமான கர்மங்களே இன்மையால் "பிரஷ்டத்வமும்" கிடையா. ஆகவே எப்பொழுதும் ஸர்வானந்த மயமாகிய ஆத்மபோதத்தே அழுந்தி வெளிமுக மின்றி சாந்தியாக இருந்தனர்.

உலகில் மாயையால் சூழப்பட்டவர்கள் ஒருவருக்கு இடுக்கண் விளைவிப்பதைவிட அவர் படும் வேதனையை நேருக்கு நேர் பார்த்து மகிழ்வதே பெரிய பாக்யமாக மதிப்பர். மாயாசக்தியாகிய பரமேஸ்வரியும் தன்னால் தாழ்த்தப்பட்டு வருந்துவதாகக் கருதும் சனத் குமாரரைக் காண விழைந்தனள்.

கந்தை வஸ்திரமும், இளைத்த உடம்பும் உயிரற்ற சவமோ என்று ஐயுறும் வண்ணம் அசைவற்றிருத்தலையும்—உடைய சனத்குமாரைக் கண்டாள். "ஐயோ! பாவம்! ஹே செருக்கே! உன்னால் மிக மிக உயர்ந்ததாகக் கருதப்பட்ட பிராமண சரீரத்தை இழந்து இந்த இழிந்த உடலோடு அவதிப்பட வைத்தனையே" என்று எண்ணினள்.

"ஹே சனத்குமர! செளக்யமா? செருக்கடங்கிற்றா? இனியும் அது தலையெடுக்காதே! ஐயோ பாவம்! காலத்தில் ஸ்நான, பானங்களுக்கும், கன்மேந்திரிய, ஞானேந்திரியங்களை செம்மை வழியில் நடத்தலாகிய சத்கர்ம பிரவர்த்திக்கும், யோக்யமான பிராமண சரீரத்தை இழந்தனை! இந்த ஜன்மத்தும் திறமை யற்ற சோம்பேரியாயினை!" என்று ஏளனம் செய்தாள்.

"தேவி! செளக்யத்தின் ஸ்வரூபமே ஆத்மா வன்றோ! ஆத்மாவின்றி ஜன்மமும் உண்டோ? ஆன்மா வென்ற சமுத்திரத்தில் தோன்றி மறையும் குமிழிகளை ஒத்த சரீர பேதத்தால் ஆன்மா பேதப் படுவதுண்டோ? இந்திரியங்களின் காரிய மிருந்தாலன்றோ சன்மார்க்க துன்மார்க்க முண்டு. பொன் விலங்கு போன்றது சத்கர்மா, இரும்பு விலங்கு போன்றது அசத்கர்மா. எந்த விலங்கானால் என்ன? இரண்டும் சுதந்தரம் இழக்கச் செய்வதே யன்றோ?

"மனத்தின் இயற்கை பிரவர்த்தி சத்கர்மாவிலேயே, அது சத்துவ குணத் தோற்ற மன்றோ! இச்சன்மத்தோ சத்கர்மப் பிரவர்த்திக்கு அதிகார மின்றென்று கூறுகின்றனை. ஆகவே இருவினையும் அற்று மனம் பிறப்பிடத்தை நாடி நிற்கிறது. அதனால் அது மனம் என்ற ஸ்வரூப மற்றது. "சங்கற்பமே மனதின் வடிவம்; நின் அருளால் வேதநிந்தை ஒழிந்ததென்று சங்கற்ப மற்று சதா நிர்விகற்பனா யுள்ளேன்.

"செருக்கு என்பது அக்ஞான ஜன்யமன்றோ? அக்ஞான நீக்கத்துடன் அனைத்தும் ஒழிந்த தென்பது திருவுளம் அறியாததோ! நின் கருணையாற் கிடைத்த இத் தேகத்தே நிறைந்த ஆன்மானந்தியாக இருக்கின்றேன்" என்றார்.

"அவிகிற அனலில் நெய் சொரிந்ததுபோல்" அம்பிகையின் கோபம் உச்சநிலையை அடைந்தது. எதிர் பார்த்ததற்கு எதிரிடையான பதில் அம்பிகையை அவமானப் படுத்திற்று. "நீ இன்னும் செருக்கை விட்டிலை இழிந்த இந்த தேகத்துள்ளும் உன் மதம் தலை சிறந்துள்ளது" என்றாள்.

தன்னை பரிகசிப்பதாக நினைத்தாள். "இவன் ஆணவம் பூராவும் அடங்கும்படி செய்கிறேன்" என்று சிந்தித்தாள். "ஹே அகங்காரியே! இக்கணமே நீ விகாரமான ஒட்டை யாவாய்" என்று சபித்தனள்.

இச்சையின்படி உலகை ஆட்டி வைக்கும் பரமேஸ்வரியே விரும்பினால் எதுதான் நடவாது? சனத்குமாரரின் பிராமண சரீரம் மறைந்ததேபோல் இதுவும் மறைந்தது. ஜாலவித்தைக்காரன் விதவிதமான உருத்தாங்கி வேடிக்கை பார்ப்போரை சந்தோஷப் படுத்துவதேபோல் உலக காரியங்களை லீலா விநோதமாகக் கருதும் தேவியின் ஆனந்தத்திற்காக நெட்டையான ஒட்டையானார்.

ஜன்மம் என்பது சட்டை மாற்றுவது போலாகும். சட்டை மாறுவதனால் அறிவும் மாறவேண்டு மென்பது விதியல்ல. அறிவிலிகள் உடையால் நடை மாறுவது உலக இயற்கை. ஆயினும் "எப்பொருளெத் தன்மைத்தாயினும் அப்பொருளிலெல்லாம் மெய்ப்பொருளான அறிவையே காணும்" உத்தமர் தன்னிலை மறவாது சொந்த ஆத்மானந்தத்தையே அநுபவித்தார்.

ஒட்டகச் சட்டை போர்த்த உத்தமர், தானாகக் கிடைக்கும் தழைகளையும், தளிர்களையும் தின்று தெள்ளிய நீரைக்குடித்து சாந்தமாகக் காலங் கழித்தனர்.

காட்டில் திரிந்த ஒட்டகத்தை ராஜதூதர்கள் பிடித்தனர். வேளைக்குத் தீனியும் மற்ற பராமரிப்பும் பாகர்கள் நடத்தினர். இந்திரியங்களின் சேஷ்டையற்ற உத்தமர் அவர்கள் பழக்கும் நடையை அறிவது எப்படி? தனக்கு அன்னியமென்று ஒதுக்கி வைத்துள்ள சரீர தொந்தரைகள் அவரை சிறிதும் பாதிக்கவில்லை. பாகர்களின் பிரயத்தனம் பயனற்றதாயிற்று. முரட்டு ஒட்டை யென்று காட்டில் விரட்டினர்.

மூடர்களின் கூட்டுறவொழிந்த ஒட்டை முன்னைப்போல் நிச்சிந்தையாக காட்டில் வாழ்ந்தது.

"அதிக பாரத்தை ஏற்றி கண்காண சிறு சிப்பத்தை எடுத்தாலும் பாரமெல்லாம் குறைந்ததாகக் கருதும் மூடமதியும் விகார நெட்டை யுருவும்

கொண்ட சனத்குமார் துக்கமே அநுபவிப்பர்'' என்று எண்ணிய பரமேஸ்வரி சனத்குமாரை நண்ணினள்.

நிர்விகற்பத்திருந்த சனத் குமாரைக் கண்ட தேவி தனக்குள் சிந்திக்கலானாள். "என்ன அடம் செய்கிறான்; பாழும் செருக்கைக் கொண்டானே! கஷ்டம் பொறுக்காமல் தனியே கிடக்கிறான், மழை வெயில் பனி இவற்றினின்று பெரிதும் வருந்தி தன் சரீரத்தையும் காத்துக் கொள்ள சக்தியற்ற இவன் மதம் முற்றும் ஒழிந்திருக்கும்'' என்று.

"ஹே மமதையிற் சிறந்த சனத் குமர! நின் சௌக்யம் எவ்வாறுளது? மமதையென்னும் பேய் உன்னை விட்டகன்றதா?'' என்று வினவினள்.

தாயே! மாயாஸ்வ ரூபியாகிய நின்னையன்றி நாம ரூபங்கள் வேறு ஆதாரத்தை உடையவைகளோ! நீ சௌக்யங்களுக் கெல்லாம் உறைவிடமன்றோ! ஆகவே உன் அம்சங்களான நாம ரூபங்களை உன்னுடையதாகவே கண்டவர்கள் சௌக்யத்தினின்றும் நழுவுவதுண்டோ? சூரியன்முன் பனி நிற்பதுண்டோ! ஆன்ம ஞான சக்தி ஸ்வரூபிணியாகிய நின்முன் ஆணவப் பேய் எப்பொழுதும் நின்றதில்லையே!

கண்ணாடி உறைகளால் தீப வொளி வர்ணத்தில் வித்யாசப்பட்ட போதிலும் தீபத்தின் இயற்கைக் குணமாகிய ஒளி, நிறம், குணம் இவற்றில் மாறுதலடையாததேபோல், ஆன்ம வொளி நாமரூப உறைகளால் தடைப்படுதல் இல்லையன்றோ! ஆகவே என்னுள் ஆன்ம ரூபியாக விளங்கும் நின்னருளால் அன்றும் இன்றும் என்றும் சௌக்யமே.

தாயே நின்னருளால் தரப்பட்ட சரீரம் சுகத்தைத் தரா தொழிவதுண்டோ? சேய்க்குத் துயர் தரும் தாயுண்டோ! பிராமண சரீரமும், சண்டாள சரீரமும் முறையே தவறின் வேத நிந்தைக்கும் லோக நிந்தைக்கும் பாத்திரமானவைகள். இந்த ஒட்டைச் சரீரத்தோ மல சலங்களும் தூரத்தே போய் வீழ்வதால் தேக வாதனையும் அற்றதென்னலாம்.

உன்னருளால் யதேச்சையாகக் கிடைக்கும் இளந்தளிர்களும் தெளிய அருவி நீரும் கனல் வாதை வந்தெய்தின் ஒரு வாரத்துக்கு மேலும் போதுமானபடி உட்கொள்ள சாதகம் செய்கின்றன. சீதப்பனிக்கு நீ தந்த ரோமங்கள் காப்பாகும்.

ஆதலால் ஹே ஜகத்காரணி! நிரந்தர ஆன்மானந்தமடைய இதனிலும் உயர்ந்த தேகம் இலை என நீ கனிந்தளிந்த கருணையை என்றும் மறவேன்'' என்று தோத்தரித்தார்.

தேவியின் கண்கள் கருணை மழை பெய்கின்றன. கைகள் சனத் குமரரை வாரி எடுக்க அவஸரப் படுகின்றன, தனக்குள் களித்தவளாய், "ஆ! இவன் நிட்காமன். நாமரூபத் தோற்றத்தால் மயங்குபவன் அல்லன். சச்சிதானந்தமே வடிவாக விளங்குபவன். அவஸரத்தில் இதை யூகித்திலம்'' என்று நினைந்து "அருமைக் குழந்தாய்! நின் பொறுமைக்கு மெச்சினேன் கண்ணாடி போன்ற உன் முன்னர் என்னிடம் இருந்த செருக்கையே உன்னிடம் இருந்ததாக எண்ணினேன். இப்போது உண்மை விளங்கி விட்டது.

உன்னிலும் தீரன் இலன்! எவ்வுருவிலும் அறிவாகிய பொருளை அறிந்தாய். வேண்டியதைக் கேள்'' என்றனள்.

"ஜகன் மாதா! நின்னைக் கண்டபின் வேண்டத்தக்கதும் உண்டோ? என்னிலும் அன்னியமல்லாத உன்னையன்றி உள்ள பொருளும் உளதோ: வேண்டுவது என்றால் அன்னியத்தையன்றோ வேண்ட வேண்டும். அன்னியமெல்லாம் அழியும் பொருளன்றோ! கேட்பதும் காண்பதும் அழிவாம் மலத்தால் பூசப் பெற்றவையன்றோ? தானே யனைத்துமாய் விளங்கும் தாங்கள் ஈதறிந்தது தானே'' என்றார்.

தேவியின் மகிழ்ச்சி எல்லை கடந்தது. "அருமைக் குழந்தாய்! நிட்காமன் வேண்டுவதும் ஒன்றுண்டோ. பூரண சுதந்தரம் பெற்ற நீ கேவலம் இந்த சரீரங்களாகிய சிறைக் கூடங்களால் வருந்த மாட்டாய் என்பது தெரிந்தேன். நான் வேண்டுவதையாவது தருக'' என்று வேண்டினாள்.

"தாயே! நின் இச்சைப்படி நாம ரூபங்கள் மாறுகின்றன. எந்த விதமாக மாற்ற இச்சையோ அப்படி செய்து கொள்ளலாம்'' எனப் பணிவுடன் கூறிய சனத் குமாரை வாரியெடுத்து உச்சி மோந்து "யான் வேண்டியது இதுவே'' என்று கூறி "ஸ்கந்தமூர்த்தி'' யாக்கினாள்.

அந்த மங்கள விக்ரஹத்தின் அம்சமே சுப்பிரம்மண்யமாகி வேதாவைச் சிறையிலிட்டு வேதப் பொருளை விமலருக்கு எடுத்தோதி "தகப்பன் சாமி'' "சுவாமிநாதன்'' என்பதாதி சிறப்புப் பெயர்களைக் கொண்டு ஞான பண்டிதனாய் குன்றுதோறும் அமர்ந்து திருவிளையாடல் புரிவது உலகம் அறிந்ததே.

"ஆசைக்கடிமையான் அகில லோகத்திலுக்கும்
மாசற்ற நல்லடியா ராவானே—ஆசை
தனையடிமை கொண்டவனே தப்பா துலகந்
தனையடிமை கொண்டவனே தான்''

என்ற மூதுரைக்கு, நிட்காமரான சனத் குமாரின் சரிதம் போதிய சான்றாகும். சாதாரண இருடியாக இருந்தவரை உலகம் போற்றும் உயரிய கடவுளாக ஆக்கியது அவர் கொண்ட நிராசையெனும் சக்தியன்றோ!

குறிப்பு:—இஃது ஆன்ம புராணத்தில் கூறப்பட்டுள்ளது.

மதுவரக்கன் மரணம்

(வி. ஆறுமுகம்.)

மண்பறிக்கும் மது(அ)ரக்கன் மாண்டொழிந்த சேதியால்
மண்டலத்துள் மாந்தருள்ளம் மகிழ்ந்திடும் கந்நீதியே
கண்ணிருந்தும் குருடராகக் கள்(உ)ண்டோர்கள் ஆவதால்
எண்ணும்போ தினிப்புவியில் இகழ்ச்சியில்லை; இல்லையே. (1)

பண்பறுக்கும் பரத்தைநாடும் பாக்கியந் தொலைந்திடும்
கொண்டமங்கை மக்கள்சுற்றம் கூடிடா தடித்திடும்
அண்டினோரை ஆழ்த்திஐந்து பாதகத்திற் கேதுவாய்
கொண்டுசெல்லும் இம்மதுவின் கொடுமைஎன்ன கொடுமையே (2)

மட்டிலாத பொருள்தொலைத்த மானிடர்கள் எத்தனை ?
வெட்டிக்குத்திக் கொலைபுரிந்த வீண்மடையர் எத்தனை ?
புட்டிபுட்டியாய்க் குடித்து போதைகொண்ட சுகங்கள்போய்
சட்டிகொண் டிரந்துண்டோர்கள் சாலவுண்டு மதுவினால். (3)

பட்டிஆடு போய்விடும் பண்ணைமாடு போய்விடும்
அட்டியின்றி நஞ்சைபுஞ்சை ஆஸ்திகள் தொலைந்திடும்
தொட்டி தொட்டியாயிருந்த தூயஇல்லம் போய்விடும்
வட்டியோடு கடன்இறுத்தி வாங்கிடும் உயிர்மது. (4)

சித்திரஞ் செறிந்திலங்கும் சேலமென்னும் நகரிலே
முத்தியீயும் ஈஸ்வராண்டு மூன்றிரண்டு மாதமாம்
பத்திேனாடு ஐந்துதேதி பாடையில் கிடத்தினர்
முத்தரான முதல்அமைச்சர் மூடக் கள்ளரக்கனை; (5)

சத்தியங் கடைப்பிடிக்கும் சற்குணர் ராஜாஜியே
மித்திரர் பலத்தினோடு மீத்தினர் ஐவேஜியே
நித்தியங் குடித்தலைந்த நேர்மையற்ற மாந்தரே
வித்தியாசம் ஏதுமின்றி வீரவேட்கை கொள்ளுவோம். (6)

சாதிரண்டு ஆண்பெண்ணென்று சாஸ்திரம் புகல்வதே
நீதியென்று நாமுணர்தல் நேர்மையாகு மானதால்
சாதியென்ற பேயைவெட்டிச் சாய்த்தமேல் அறிவினால்
சாதிசெத்த சேலம்ஒக்கும் சஞ்சலம் ஒன்றில்லையே. (சாதி-கள்) (7)

ஆதியும் பகவனும் ஆக்கிவிட்ட வள்ளுவர்
நீதிவேதம் தந்துமேன்மை நேர்ந்தகாதை பாருமின்
ஆதியே அனந்தஜீவ னுமென்ற உண்மையால்
காதிசொலலும் போதனைக்கு யாதுகுற்ற மில்லையே ? (8)

சங்கடங் களைந்துமக்கள் சற்குணஞ் சிறந்துவாழ்வர்
தங்கிடும் பொருள்மிகுந்து தாழ்மையென்ற எழ்மைபோம்

பாலர்கள் பக்கம்

அறிவு விளக்க வினா சரியான விடை

———:0:———

(சித்தூர் பண்டித-பூ. ஸ்ரீநிவாசன்)

மூத்தவன் தன் தம்பி கேட்டபடி ஒன்பது புஸ்தகங்களையும் இரண்டடுக்குள்ள புத்தக வடுக்கில் (Book shelf) 2-ல் 1. அதாவது $\frac{1}{2}$ பாகம் காட்ட $\frac{6729}{13458}$ என்று அமைத்தது போலவே, $\frac{1}{3}$ பாகத்திற்கு $\frac{5832}{17496}$ ஆகவும்; $\frac{1}{4}$ பாகத்திற்கு $\frac{4392}{17567}$ ஆகவும்; 1/5 பாகத்திற்கு $\frac{2769}{15845}$ ஆகவும்; 1/6 பாகத்திற்கு $\frac{2943}{17658}$ ஆகவும்; 1/7 பாகத்திற்கு $\frac{2394}{16758}$ ஆகவும்; 1/8 பாகத்திற்கு $\frac{3187}{25496}$ ஆகவும்; 1/9 பாகத்திற்கு $\frac{6381}{57429}$ ஆகவும் புத்தகங்களை யமைத்துக் காட்டினன். இளையவன் கண்டு மட்டில்லா மகிழ்ச்சி கொண்டான்.

குறிப்பு:—இவ் வினாவுக்குப் பல் மாணவர்களும் (ஏன் ? பெரியவர்கள் சிலருங் கூட) தாங்கள் கண்டு பிடித்த விடைகளை யனுப்பினர். ஆயினும், ஒரு விடையாயினும், மேற் குறித்த சரியான விடைக்கு ஒத்ததாக இல்லை என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறோம். கீழே வெளியிட்டிருக்கும் இரண்டாவது வினாவுக்காயினும் மாணவர்கள் சரியான விடைகளைக் கண்டு பிடித்து அனுப்ப முயல்வார்களாக.

அங்கம்நொந் துழைத்தகாசு அழிந்திடாது மதுவினல்
எங்கணும் இந்நெறிக்கு இன்னும்ஒத் துழைத்தமேல். (9)

தங்கம்ஈயும் இந்தியாநம் தாயின்நாடு அல்லவோ ?
மங்கியின்னும் வறுமைகொள்ளல் மாநிலத்தீர் நல்லதோ ?
பங்கவேற்றுமை களைந்து பாரில்ஒன்று சேருவோம்
சங்கையின்றி தேசநன்மை சார்ந்துவெற்றி கூறுவோம். (10)

அறிவு விளக்க வினா 2.

கோவிந்தன் தன் அறையில் ஒரு மூலையில் உட்கார்ந்து தேம்பித் தேம்பி அழுது கொண்டிருந்தான். அப்போது அவ் வறைக்குள் வந்த அவன் அண்ணன் அப்பாதுரை அவனைப் பார்த்து "தம்பி! என் இப்படி அழுகிறாய்? உனக்கென்ன நேர்ந்தது? யாராவது அடித்தார்களா உன்னை? என்று கேட்டான்.

கோவி:—இல்லை. அண்ணா! ஒருவரும் அடிக்க வில்லை.

அப்பா:—அப்படியானால் என் அழுகிறாய்?

கோவி:—நேற்று உபாத்தியாயர் கரும்பலகையில் ஒரு வகுத்தல் கணக்கு போட்டு, "இந்த கணக்கை நோட் புஸ்தகத்தில் எழுதிக்கொண்டு வாருங்கள்" என்றார். நான் அதைப் பலகையில் எழுதிக்கொண்டு வந்தேன். இப்போது எடுத்துப் பார்த்தேன். அநேக இடங்களில் எண்கள் அழிந்து போயிருக்கின்றன. நான் கொண்டு வரும்போது என் சொக்காய் பட்டு அழிந்து போயிருக்கும். போட்டுக்கொண்டு போகாவிட்டால் உபாத்தியாயர் அடிப்பார்.

அப்பா:—எங்கே அதைக் காட்டு. (கோவிந்தன் பலகையைக் கொண்டுவந்து காட்டினான். (எண்கள் அழிந்துபோன இடங்களில் × இந்த குறிகள் இருக்கின்றன) அக் கணக்கு கீழ்வருமாறு இருந்தது.

```
215) ×7×9×(1××
      ×××
      ————
      ×5×9
      ×5×5
      ————
        ×4×
        ×××
        ————
```

அப்பா:—தம்பி! இந்த கணக்கில் மிகுதி என்ன? ஞாபகம் இருக்கிறதா?

கோவி:—மிகுதி ஒன்று மில்லை யண்ணா! எனக்கு நன்றாய் நினைவிருக்கிறது.

அப்பா:—அப்படியானால் இந்தக் கணக்கை நான் சரியாக போட்டுக் கொடுக்கிறேன். அழாதே.

(இவ்விதம் தேறுதல் கூறி அந்தக் கணக்கை அப்பாதுரை சரியாகப் போட்டுக் கொடுத்தான். அவன் எப்படி போட்டுக் கொடுத்திருப்பான்?

மலர் வீரர்களும் வண்டுப் பாடகர்களும்

—(0)—

(ஆரியூர்-வ. பதுமநாப பிள்ளை.)

என்ன மனோகரமான சோலை! எவ்வளவு இனிய மணம் வீசும் மலர்கள்! பச்சைப் பசேலென்று தழைத்துச் செழித்து அடர்ந்து வளர்ந்துள்ள பசுங்கொடிகள், எவ்வளவு அழகாக காற்றில் அசைந்து அசைந்து ஆடிக்கொண்டிருக்கின்றன! தெளிந்து குளிர்ந்த நீர் நிறைந்த அந்த செந்தாமரைக்குளம், எவ்வளவு அழகாக விளங்குகிறது! அக் குளத்திலே தமது காதலனாகிய செங்கதிரவனை நோக்கிச் சிரித்து நிற்பனவேபோல் தலைநிமிர்ந்து நின்று மெல்லிய பூங்காற்றில் உல்லாசமாக அசைந்து ஆடிக்கொண்டிருக்கும் அந்த செந்தாமரை மலர்களை உற்று நோக்குங்கள்! அச் செந்தாமரை மலர்கள், திருவரங்கப் பெருநகரிலே அரவணையின்மேல் அறிதுயில் கொண்டு கிடக்கும் அரங்கநாயகனின் அழகிய திருமுகத்தை நினைவூட்டுகின்றன வல்லவா? அவற்றினிடையே மலர்ந்து நிமிர்ந்து நிற்கும் நீலோற்பல மலர்களை நோக்குங்கள்! அந்த கருநீல மலர்கள், திருவரங்கச் செல்வனாது திருமேனியின் ஒப்புயர்வற்ற இந்திர நீல நிறத்திற்குப் போலியாகத் தோன்றுகின்றன வல்லவா? நீலநீரில் நிமிர்ந்து நிற்கும் அம் மலர்களை உற்று நோக்கும்போது, அவை வீர உணர்ச்சி மிகுதியால் போர் முகத்திற்குப் புறப்படத் துடிதுடித்து நிற்பதுபோல் தோன்றுகின்றதல்லவா? தெளிந்த நீரில் பிறந்து வளர்ந்து நிற்கும் அம் மெல்லிய மலர்களையுங்கூட, கோபத்தால் துடிதுடித்து நிற்கச் செய்து விட்டவர்கள் யாராயிருக்கக் கூடும்? ஒருநாள், தண்ணீர்கொண்டு செல்ல குளத்திற்கு வந்திருந்த பெண்மணிகளுள் எவளேனும் ஒருத்தி, செருக்கு மிகுந்து நிற்கும் அம் மலர்களைப் பார்த்துப் பரிகசித்துச் சிரித்து—'அட, மட மலர்களே! இவ்வூருக்குள் நம்மைப்போல் அழகுடையவர்கள் வேறு எவருமில்லையென்று எண்ணிக்கொண்டு ஏன் இப்படி தலைக்கிறுக்கு மிகுந்து துள்ளி நிற்கிறீர்கள்? ஆயிரக்கணக்கான அன்பர்கள் தினந்தோறும் போற்றித் துதிக்க அரவணையின்மீது அறிதுயில் கொண்டு கிடக்கும் எங்களது தனிப் பெருந்தலைவராகிய திருவரங்கச் செல்வனாது திருமுகத்தின் பேரழகுக்கும் அவரது திருமேனியின் பேரழகுக்கும் முன்பு, உங்களது அற்ப அழகு எம்மாத்திரம்? எங்களது தனிப்பெருந் தலைவரின் திருமுக அழகிலும் திருமேனி அழகிலும் தங்களது அற்ப அழகையும் கண்கொண்டு காண்பரோ? அப் பெருமானது வடிவழகைக் கண் குளிரக்கண்டு பரவச மடைவதற்குக் கொடுத்து வைக்காமல், கேவலம் தவளைகளோடும் மீன்களோடும் உறவாடிக் கொண்டிருக்கும் உங்களுக்கு இவ்வளவு கர்வமேன்? உங்களது சகோதரிக

ளுள் மல்லிகை செண்பகம் செவ்வந்தி முதலிய சிற்சிலர், எங்களது தலைவரின் அழகிய திருமேனியை அணைந்து எத்தகைய பேரின்பத்தை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள் தெரியுமா? அவர்கள் அனுபவிக்கும் பாக்கியமல்லவோ பாக்கியம்! பாசி பிடித்த கொடிகளினிடையில் சிக்கிக் கொண்டு ஆகாயத்தை அண்ணாந்து பார்த்துக் கொண்டிருக்கும் உங்களுக்கு, இவ்வளவு கர்வமும் தலையாட்டமும் எதற்காக?"-என்று இழித்துக் கூறிச் சென்றிருப்பாள் போலும்! அப் பெண்ணின் பரிகாச மொழிகளைக் கேட்டுச் சகிக்க முடியாததனாலேயே, அச் செந்தாமரை மலர்களும் நீலோற்பல மலர்களும்முறையே அரங்கநாயகனது திருமுகத்தோடும் திருமேனியோடும் போர் செய்யக்கருதி ஆத்திரம் மிகுந்து துடிதுடித்து நின்று கொண்டிருக்கின்றன போலும்! கலியுகம் பிறந்து நாற்பத்தேழாவது வருஷத்தில்—தென்பாண்டிய நாட்டில்—ஸ்ரீ வில்லிபுத்தூரில் தோன்றியவரான பெரியாழ்வார், அவ்வற்புதக் காட்சியைத் தமது அரிய சொற்சித்திரத்தில் எவ்வளவு அழகாகச் சித்திரித்துக் காட்டியிருக்கிறார் பாருங்கள்:—

"மருமகன்றன் சந்ததியை உயிர்மீட்டு மைத்துனன்மார்
உருமுகத்தே வீழாமே குருமுகமாய்க் காத்தான் ஊர்:
திருமுகமாய்ச் செங்கமலம்; திருநிறமாய்க் கருங்குவளை;
பொருமுகமாய் நின்(று) அலரும் புனல் அரங்கம் என்பதுவே."

அன்பர்காள்! அதோ தோன்றும் அப் பூஞ்சோலைக்குள் புகுந்து பார்ப்போம், வாருங்கள்! ஆகா, என்ன கர்ணாமிர்தமான கானம் கேட்கிறது பாருங்கள்! யாரேனும் ஒரு சங்கீத வித்வான் அங்கே வந்து அமர்ந்திருந்து தன்னை மறந்து இன்னிசையில் ஈடுபட்டவனாய் ராக ஆலாபனம் செய்து கொண்டிருக்கிறானா என்ன? என்ன விந்தை இது? எந்த மனிதனையும் காணோமே! சங்கீத வித்வான் எவனும் இல்லாதிருந்தும், ராக ஆலாபனம் மட்டும் எப்படி

இவ்வளவு அற்புதமாகக் கேட்கிறது? அதோ, அத் தாழைமடலை உற்று நோக்குங்கள்! மெள்ள மெள்ள மலரத் தொடங்கும் அத் தாழை மடலுக்குள்ளே, பொன்னிறச் சிறகுகளைப்பெற்ற அவ் வண்டுகள் தமது சிறிய உடல் வருந்த உராய்ந்துகொண்டு நுழைவதைக் கவனித்துப் பாருங்கள்! அம் மடலுக்குள்ளிருக்கும் வெள்ளை வெளேலென்ற வெண்ணிறப் பொடியில் படியும் அவ் வண்டுகள், அங்கு எவ்வளவு குட்டிக்கரணங்கள் போட்டுக் குதூகலமாகப் புரள்கின்றன பாருங்கள்! ஆற்று மணலில் புரளும் குதிரைகளைப்போல், அவ் வெண்ணிறப் பொடியில் ஆசை தீர உருண்டு புரண்டபின், அவ் வண்டுகள் மடலைவிட்டு வெளிப்படுகின்றன. ஐயையோ! என்ன இது? கண்ணுக்கினிய பொன் வண்ணத்துடன் உள்ளே புகுந்த அவ் வண்டுகள், அப் பொன்வண்ணத்தை இழந்து சுண்ணாம்பு வண்ணத்தைப் போன்ற வெண்ணிறமடைந்து வெளிப்படுகின்றனவே! முதலில் பொன்னிறமுடையனவாக இருந்த அவை, இப்பொழுது வெண்ணிறமுடையனவாக மாறிவிட்டதைப் பார்ப்பதற்கு நம்மால் சகிக்க முடியவில்லையே! அவ் வண்டுகள், தமது அருமையான தங்கநிறத்தைப் பறிகொடுத்து சுண்ணாம்பு நிறத்தைப் பெற்றது குறித்துச் சிறிதளவும் வருந்துவதாகத் தெரியவில்லையே! தங்களது மேனி நிறத்தின் மாறுதலை, அவை சிறிதும் கவனிக்கவேயில்லையே! ஓகோ! அவை இப்பொழுது சுயஉணர்வை முற்றிலும் இழந்துவிட்டிருக்கின்றன போலும்! பூக்கள் தோறும் புகுந்து வயிறு நிரம்பச் செந்தேன் அருந்திச் சிந்தை மயங்கி மனம் போனவாறு அலைந்து திரிந்து கொண்டிருக்கும் அவ் வண்டுகளுக்கு, இப்பொழுது சுய உணர்வு எப்படி இருக்கும்? மது மயக்கம் தலைக்கேறி விட்ட பின்னர், அவற்றை அறியாமலே அவற்றின் வாய் 'தென்னா—தெனா' வென்று தெம்மாங்கு பாடத் தொடங்கிவிடுவது இயல்புதானே! அவ்வாறு மது மயக்கத்தால் சுய உணர்வை இழந்த அவை, தற்சமயம் தாம் தமது பொன்னிறத்தைப் பறிகொடுத்துவிட்டு வெண்ணிறத்தைப் பெற்றிருப்பதை எங்கே கவனிக்கப் போகின்றன? மெல்லிய மலர்களிலிருந்து அவ் வண்டுகளின் வயிற்றில் புகுந்த செந்தேன், கர்ணாமிர்தமான ராக ஆலாபன வடிவம் கொண்டு அவற்றின் வாய் வழியாக வெளிப்பட்டு நமது செவிகளில் வந்து பாய்கிறது போலும்! செந்தேன் விருந்தருந்திச் சிந்தை மயங்கித் திரிந்து கொண்டிருக்கும் நிலையிலும், அவற்றை நாடி வந்த நமது இரு செவிகளுக்கும் அவை பெரு விருந்தளிக்கின்றனவல்லவா? தமது சுய உணர்வை மறந்து திரியும் நிலையிலுங்கூட, தம்மை அடுத்து வந்த அதிதிகளுக்கு மகிழ்வூட்ட மறவாத விருந்தோம்பும் பெருந்தகைமை அவ் வண்டுகளிடம் அமைந்திருப்பது, அவை 'வரு விருந்தை அளித்திருக்கும் சிறப்புடைய மறையவர்கள் நிறைந்த' திருவரங்கப் பெரு நகரில் நித்திய வாசம் செய்யும் மகத்தான பாக்கியத்தைப் பெற்றிருப்பதனாலல்லவா?

அதோ, அம் மல்லிகைப் புதரிடம் செல்வோம், வாருங்கள்! மேற்றிசையிலே, செஞ்சுடர்க் கதிரவன் விரைந்து இறங்கிக்கொண்டிருக்கின்றானல்லவா? பகற்பொழுதெல்லாம் அவனது வெய்யிலின் கொடுமையைப் பொறுக்க முடியாமல் தனது மெல்லிய இதழ்களைக் குவித்து உடல் முழுவதையும் ஒடுக்கிக் கொண்டிருந்த மல்லிகைச் செல்வி, செஞ்சுடர்க் கதிரவன் தனது வெஞ்சுடர்க் கிரணங்களை ஒடுக்கிக்கொண்டு மேற்றிக்

யில் விரைந்து இறங்கும் காட்சியைக் கண்டு, அவனைப் பரிஹஸித்துச் சிரிப்பவனைப்போல் உடல் பூரித்து மெல்லிதழ்களை விரித்துச் சிரித்து நிற்கும் அற்புதக் காட்சியைப் பாருங்கள்! அவனது உள்ளத்தில் ஒடுங்கி யிருந்த களிப்பு, கதிரவனது கடுங் கிரணங்களின் ஒடுக்கத்தைக் கண்டவுடன் விரிந்து மலர்ந்து சிரிப்பாக வெளிப்படுகிறது போலும்! மது மயக்கத்தினால் சுய உணர்வை மறந்து பறந்து திரிந்துகொண் டிருக்கும் பெண் வண்டுகளின் கண்களுக்கு, தமது முறுவல் பூரித்த முகத்தினாலும் சிறுத்த அடியினாலும் வெண்ணிறத்தினாலும் அந்த மல்லிகைச் சுந்தரிகள் வெண் சங்குகளாகக் காட்சி யளிக்கிறார்கள் போலும்! சங்கீதப் பித்து மிகுந்த வண்டுகள், இனிய நாதத்தை எழுப்பும் சங்குகளைக் கண்டால் சும்மா விட்டுவிட இசையுமோ? திருவரங்கப் பெரு நகரிலே—மார்கழி மாதத்திலே—தினந்தோறும் அதிகாலை வேளையிலே, இடையிடையில் திருச்சங்கு ஊதிக்கொண்டு இறைவனைத் துதித்துப் பாடிச் செல்லும் அன்பர்களை, அரங்கநகர்ச் சோலைகளில் திரியும் வண்டுகள் பன்முறை கண்டிருக்கக் கூடும். அந் நினைவினாலே, இப்பொழுது அவ் வண்டுகள் தாமும் அவ் வண்ணமே சங்கநாதம் செய்துகொண்டு பகவத் குணங்களைப் பாடி மகிழத் தீர்மானித்துக் கொண்டுவிட்டன போலும்! அம் மல்லிகைச் சுந்தரிகளைக் கண்டு காதல் வெறி கொண்டுவிட்ட அவ் வண்டுகள், அச் சுந்தரிகளின் வெள்ளிதழ்களில் ஆராத காதலோடு முத்தமிட்டு இன்ப வெறி மிகுந்து தமது உச்சக் குரலினால் கத்துகின்றன. அதன் பயனாக உண்டாகும் இனிய நாதம், அவ் வண்டுகளை மட்டுமன்றி அம் மல்லிகைச் சுந்தரிகளைக் கூட பெரிதும் பரவசப்படுத்தி விடுகின்றன. அம் மல்லிகைச் சுந்தரிகளின் தலையில் வாய் வைத்து ஊதிக்கொண்டும் அவர்களின் வெள்ளிதழ்களில் சிங்காரமாக வீற்றிருந்து திருவரங்கேசரின் அருட் குணங்களைப் பாடிக்கொண்டும் அவ் வண்டுப் பாடகர்கள் அனுபவிக்கும் ஆனந்தத்தை நம்மால் அனுபவிக்க முடியுமா? மல்லிகைக் காதலிகளும் வண்டுக் காதலர்களும் கருத்தொருமித்துக் கலந்து நிற்கும் அக் காட்சி, எவ்வளவு அற்புதமாக இருக்கிறது! அவர்கள் தங்களுக்குள் பேசிக்கொள்ளும் காதல் மொழிகளையும் கடல்மடை திறந்தது போன்ற களிப்புப் பெருக்கினால் பாடும் பகவத்கீதங்களின் அரும் பொருள்களையும் அறிந்து அனுபவிக்க, அவ் வண்டுப் பாடகர்களின் பாஷை நமக்குத் தெரியுமா என்ன? இவ் வற்புதக் காட்சிகளை, பரம பக்தரும் ரஸிக சிகாமணியுமான பெரியாழ்வார், தமது அரிய சொற் சித்திரங்களால் எவ்வளவு அழகாக விளக்கிக் காட்டி யிருக்கிறார் பாருங்கள்:—

" தாழை மடல் ஊ(டு) உரிஞ்சித்
தவள வண்ணப் பொடி அணிந்து
யாழின் இசை வண்டினங்கள்
ஆளம் வைக்கும் அரங்கமே ";

" எல்லியம் போ(து) இருஞ் சிறை வண்டு
எம்பெருமான் குணம் பாடி
மல்லிகை வெண் சங்கு ஊதும்
மதில் அரங்கம் என்பதுவே ".

முனிவனும் வேந்தனும்

:(o):

(M. S. ராமஸ்வாமி ஐயங்கார்.)

முனிவன், காமம் வெகுளி மயக்கமெனு முக்குற்றத்தையு முனிபவன். ஆசைக்கிருப்பிடமாய மண், பெண், பொன்னாகியவை துறந்தவன். எனவே துறவி எனும் பெயர் பூண்டவன். மனம் ஆசலம்புரி ஐம்பொறி வழி செல்லாது நிற்கைக் கேதுவான செய்பவன்.

'அடல்வேண்டு மைந்தன் புலத்தை விடல்வேண்டும், வேண்டிய வெல்லா மொருங்கு' என்ற குறளாசிரியர் மொழிக்கிணங்க ஐம்பொறிகளுக்குரிய புலன்களைக் கெடுக்கு மியல்பினன்.

"வினையின் வந்தது வினைக்கு விளைவாயது
புனைவன நீங்கில் புலால் புறத்திடுவது
மூத்து விளிவுடையது தீப்பிணியிருக்கை
பற்றின் பற்றிடம் குற்றக் கொள்கலம்
புற்றடங் காவில் செற்றச் சேக்கை
அல்லக் கவலைக் கையாறு அழுங்கல்
தவலா உள்ளம் தன்பா லுடையது
மக்கள் யாக்கை இது"

என்ற உடற் கூற்றினை நன்கறிந்து, உண்டி சுருங்கல் முதலிய விரதங்களுடன் சரீரப் பற்றற்று நிற்பவன். 'பொல்லாப் புழுமலி நோய் புன்குரம்பை, கல்லாரறிந்திருப்பா ராதலிழல், ஆங்கமல நீர்போற் பிரிந்திருப்பார் பேசார் பிறர்க்கு' என்ற பொன்மொழிகளு மிதனை வலியுறுத்தும். தவம் செய்யு மியல்பினனாதலின் தவசி என்ற பேரும் யுடைத்தவன்.

"உற்றநோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை
அற்றே தவத்திற் குரு"

என்பது தமிழ் மறை மொழி.

தவத்திற்கு வடிவமானது உண்டி சுருங்குதல் முதலானவைகளால் தம்முயிர்க்கு வருந் துன்பங்களைப் பொறுத்தலும், பிறர்க்கின்னா செய்யாமையும் ஆகிய அளவினதாம். எனவே அவாவறுத்து, பற்றற்று, அஹிம்ஸா தர்மத்தைப் பூண்டவன் முனிவன். புல்வாலுந் தழையாலும் வேய்ந்ததும் தனித்திருப்பதுமாய ஆசிரம வாழ்க்கையை யுடையவன். இத்தகைய இயல்புகள் வாய்ந்த தூய வாழ்க்கையைக் கொண்ட பெரியார் இது காலை நம்மிடையே காணக்கிடைத்த பெரும் பேற்றை நாம் அடைந்துள்ளோம். அஹிம்ஸா தர்மத்திற் கிருப்பிடமானவரும் மிக்க ஆத்மசக்தி பெற்றவருமாய அப்பெரியார் காந்தி சந்நியாசி என்றழைக்கப்படுவது உலகறியுமே.

இத்தகைய பெரியோர் தமது ஆத்ம சக்தியாற் பல அரிய சக்திகளைத் தம்மிடமிருந்து விளைப்புந்தகமையாளர். இவர்தம் பெருமை சாலவும் பெரிது. இவர் அரும் பெருஞ் செயலாற்ற வல்லார். விண்ணவரையும் ஏவல் கொள்வர். பூவுலகிலுள்ள சக்தியெலா மொன்று சேர்ந் தெதிர்ப்பினு மஞ்சார். இதனாற்றான் 'முனிவர்க்கு வேந்தன் துரும்பு' என்ற பழமொழியும் வழங்கிவருகிறது. 'யாமார்க்குங் குடியல்லோம் நமனை யஞ்சோம்' என்ற வீரமொழி யிதனைப் பெரிதும் வலியுறுத்தும்.

ரோமபத வரசன் றிருநாட்டில் 'மின்னியெழு முகிலின்றி வெந்துயரம் பெருகு நாளில்' கலைக்கோட்டு மாமுனிவன் வரலும் 'சளசள வென மழைத் தாரை கான்றன' என்பதனாலும் முனிவன் ஆற்றல் தெற்றென விளங்கும். இதுகாலை காந்தி சந்நியாசியார் இயற்றிவரும் பெருஞ் செயல்கள் கண்கூடு.

வேந்தன் இயல்பு

இனி வேந்தனைக் காண்பம். வேந்தன் படை, குடி, கூழ், அமைச்சு, நட்பு, அரண் ஆகிய ஆறு அங்கங்களை யுடையவன். பயமற்ற தன்மை, கொடுக்கு மியற்கை, அறிவு, ஊக்கமாகிய நான்கு இயல்புகள் வாய்ந்தவன். காட்சிக் கெளியனாயுங் கடுஞ் சொல்ல னல்லனாயு மிருப்பவன். பொருள் வரவு தேடலிலும், சேர்த்தலிலும், காத்தலிலும், அற வழியிற் செலவு செய்த லிலும் வல்லவனரசன். அரசனே மக்கட்குத் தெய்வமுமாகின்றான்.

'முறை செய்து காப்பாற்று மன்னவன், மக்கட்கிறை யென்று வைக் கப்படும்' என்பது பொய்யாமொழி. அன்பு, இன்சொல்லிவை கொண்டு தம் மக்களை யாளுமரசன் பெரும் புகழுடன் வாழ்வன். அரசரிலும் முனிவ ரியல்புகள் கொண்டவருண்டு. ஜனக மஹாராஜன், அசோகன் ஆகியவர் இந்நிலையினராம்.

முனிவன் வேந்தனாகிய இவ்விருதிறத்தாரையுங் கம்பநாட்டாழ்வார் நமக்கு மிக்க அழகுபெறச் சித்திரித்துக் காட்டும் பான்மை பெருமகிழ்ச்சி யூட்டுவதாம். விசுவாமித்திர முனிவன் ஆதியில் அருந்திறல் அரசன்.

> "இறையெனப் புவிக்கீறு இல் பல்லாண் டெலாம்
> முறையினிற் புரந்தே யருள் முற்றினான்"

என்று கூறுகின்றார் கவி. இவ்வரசன் ஓர் நாள் வேட்டைமேற் கானகஞ் சென்றான். வேட்டை முடிந்து களைப்பு மேலிட்டதனால் மாதவத்தோங்கு வசிட்டனுறைவிடஞ் சேர்ந்தான். வசிட்டனரசனை யுபசரித்து அறுசுவைத் தாயவுண்டி யரசனுக்குஞ் சேனைகட்கு மளித்து நறுமலர்த்தாரும் வாசகக் கலவையும் நல்கினான். இவை காமதேனு வெனும் பசுவினுதவியாலாயது கண்ட அரசன் 'மேதகு பொருள்கள் யாவும் வேந்தருக் கென்கை தன்னால்' அப்பசு தனக்குரித்தெனப் பகன்றான். அவ்வாறாயின் கொண்டு போவென வசிட்டன் கூறினான். அரசன் பசுப் பிடித்தலும் அது வசிட்டனாற் கொடுக் கப்படவில்லை யென்பதறிந்து பெருஞ் சினங் கொண்டது. தன் மெய் மயிர் சிலிர்த்தது. அதனின்றும் பப்பரர் எயினர், சீனர், சோனகர் முதலிய பல வீரர்கள் தோன்றி அரசன் சேனையை முறியடித்து அவன் குமாரரையும் மடித்து வெற்றிச் சங்கமூதினர். இவை யாவும் வசிட்டனால் வந்த வினை

யென வெண்ணி அரசன் அவர்மேற் போர்புரிந்தான். வசிட்ட முனிவன் தன் கைத் தண்டினை விடுத்து எதிர்க்குமாறு கூறித் தாம் வாளாவிருந்தான். இப்போர் ஆத்ம சக்திக்கும் மிருக பலத்திற்கு மேற்பட்ட போரேயாம். தூய மனத்தின் கண் அரும்பி யெழுஞ் சக்திக்கு வேறெதுவு மீடாகா. எனவே,

> "கடவுளர் படைகளீறாக் கற்றன படைகள் யாவும்
> விடவிட முனிவன் றண்டம் விழுங்கிமேல் விளக்கக்காணா"

என்று ஆத்ம சக்தியின் பெருமையைக் கவி கூறிக் களிக்கின்றார். எவற்றினு ம் வலிய படைகளெல்லாம் பயனுறாதொழிந்தது கண்ட வரசன் 'கலைமறை முனிவர்க் கல்லால் திண்டிறல் வலியுந் தேசு முளவெனல் சீரிதம்மா" என் றோர்ந்து ஒண் தவம் புரிய வெண்ணி அரசர் கோலமும் போகமுந் துறந்து தவக் கோலங் கொண்டான். முனிவனும் அவனது ஆத்ம சக்தியுமெத்துணை சிறப்பினது என்பது இதனாற் போதரும். ஆத்ம சக்தி மனத்தூய்மையா லமைவதாம். மனத்தூய்மை வாய்மையாலாம்.

> "புறந்தூய்மை நீரா னமையு மகந்தூய்மை
> வாய்மையாற் காணப் படும்"

என்பது மறைமொழி. உடம்பு நீராற் சுத்தமாகும். உள்ளஞ் சத்தியத் தாற் சுத்தமாம். எனவே சத்திய வழி நின்றார் மாபெரும் வலியுடையா ராவர். தவக்கோலங் கொண்ட விசுவாமித்திரன் ஆசையறுத்து, பற்று விடுத்து, மனமாசகற்றி, சத்திய தரிசனங் கண்டு தபோ பலம் எனக் கூறப்படும் ஆத்ம சக்தி யடைந்தனன்.

இனி இராமாயண வரசன் தயரத மஹாராஜனைக் கவனிப்போம். இவ்வரசன் அரசற்குரிய சகல குணங்களையு மொருங்கே கொண்டு விளங்கி னன்.

> 'தாயொக்கு மன்பிற் றவமொக்கு நலம்பயப்பின்
> சேயொக்கு முன்னின் றொருசெல்கதி யுய்க்குநீரால்
> நோயொக்கு மென்னின் மருந்தொக்கு நுணங்குகேள்வி
> ஆயப்புகுங்கா லறிவொக்கு மெவர்க்கு மன்னான்'

என்ற குணம் படைத்தவன். அரசன் யாவர்க்குந் தாய்போலுஞ் சேய்போலு மிருந்தனனென்பதால் அரசர்க்குரிய வுயரிய குணங்களெவை யென்பதைக் கவி யறிவுறுத்துகின்றார்.

தசரதன் ஆட்சியில் ஏழை மக்கள் மிகவுங் கவனிக்கப்பட்டன ரென் பதை 'ஈந்தே கடந்தா னிரப்போர் கடல்' என்பதனா லறியலாகும். இவ்வர சன் ஓர் வறிஞன் தன் பயிரைப் பட்டி மாடு முதலியன மேயாவண்ணம் காப்பதுபோல் தன்னாலும் தன் பரிசனத்தாராலுமே யன்றிக் கள்வர், பகை வர் முதலியவர்களாலும் வருத்தம் நேரிடாது உயிர் காக்கின்றா னென்பதை,

> "வையக முழுவதும் வறிஞனோம்பு மோர்
> செய்யெனக் காத்து இனி தரசு செய்கின்றான்"

என்னும் பொன் மொழிக ளழகுபெறக் காட்டி நிற்கின்றன.

இத்தகைய குணவிசேடங்கள்மிக்க இவ்விருவரது, சந்திப்பைக் காண்போம். இச்சந்திப்பு நமக்குக் கற்பிக்கும் பாடம் மிகப் பெரிது. ஆத்மசக்தியினுயர்வே நாமிங்குகாணும் படிப்பினை. மண்டபத்தில் தூயமெல்லரியணையில் வந்தமர்ந்தானரசன். இவ்வாறமர்ந்திருக்கும் மடங்கல் போன்மொய்ம்பினுன் முன்னர் நான் முகனையும் படைப்பனென்று கூறிய விசுவாமித்திர முனிவன் றோன்றினுன். முனிவனைக் கண்டவரசன் விரைந்தெழுந்து அடிபணிந்து முகமன் கூறி உயர்ந்த வோராசனத்திருத்தி யுபசரித்தான். நாற்படை கொண்டவனும் அருந்திறல் வீரனுமாய ஓர் ஒப்பற்ற வரசர்க்கரசன் ஓர் முனிவனைக் காண்டலு மிவ்வாறு விரைந்தெழுந்து உபசரித்தனனென்றுல் அது ஆத்ம சக்தியினரிய தன்மையையே காட்டுவதாம்.

> "வந்துமுனி யெய்துதலு மார்பி னணியாரம்
> அந்தர தலத் திரவி யஞ்ச வொளி விஞ்சக்
> கந்தமலரிற் கடவு டன்வரவு காணும்
> இந்திர னெனக் கடிதெழுந் தடிபணிந்தான்"

என கம்பநாட்டாழ்வார் அரசன் செயலைச் சித்திரித்துக் காட்டுகின்றுர். முனிவன் தானியற்றுந் தவவேள்வி காத்தற் பொருட்டு தசரதன் மூத்த மகன் இராமனைத் தன்னுடன் காட்டிற் கனுப்புமாறு கேட்கின்றுன். இவ்வாறு செய்தலரசன் கடமை யென்பதை மிகுந்த சாத்வீக முறையில் வலியுறுத்துகின்றுன். முனிவருந் தேவரும் தமக்கிடையூறு நேருங்காலத்து அடைக்கலமாகப் புகுமிடங்களில் அயோத்திமா நகரும் ஒன்றும் என நயம்பட வுரைத்து,

> "தருவனத்துள் யானியற்றுந் தவவேள்விக் கிடையூறுத் தவஞ்செய்வோர்கள்
> வெருவரச் சென்றடை காமவெகுளி யென நிருதரிடை விலக்காவண்ணம்
> செருமுகத்துக் காத்தியென நின்சிறுவர் நால்வரினுங் கரியசெம்மல்
> ஒருவனைத் தந்திடுதி..........."

யெனக் கேட்கின்றுன். குளிர் நிழல் தரும் மரங்க ளடர்ந்த வென்பதும், இராமனுக்கு வேண்டிய யாவையும் தர வல்ல வன மென்பதும் 'தருவனம்' என்பதன் விசேடப் பொருளாம். நற்கல்வி, மணம் ஆகியவை இராமபிரானுக்கு இவ்வனஞ் சென்றதனுலாயது தெளிவு.

> "பெய்யுமாரியாற் பெருகு வெள்ளம் போய்
> மொய்கொள் வேலைவாய் முடுகுமாறு போல்
> ஐயநின்மகற்கு அளவில் விஞ்சை வந்து
> எய்து காலமின்று எதிர்ந்த தென்னவே"

என அரசனைப் பார்த்து வசிட்டன் கூறுவது கவனிக்கற்பாலது.

தீயவை யொழித்தற் பொருட்டும் நல்லவை நிலைபெறச் செய்தற் பொருட்டும் விசுவாமித்திர முனிவன் தசரதனுதவிநாடி இராமனை யனுப்ப வேண்டுகின்றுன். நல்லறங் காத்த லரசர்க்குக் கடனுதலின் 'தந்திடுதி' எனக் கடமையை வலியுறுத்திக் கேட்டனன். இராமன் சிறியன், படையூற்ற மிலன் எனக் கூறித் தயரதன் இராமனை அனுப்ப மறுத்துத் தான் வந்துதவுவதாகக் கூறியவுடன் முனிவன் வெகுண்டனன். ஆத்ம சக்தி

தியாகம்

(S. கிருஷ்ணன்.)

கவிராட்சதன் எனவும், கௌடப்புலவன் எனவும், கூத்தன் கவிச் சக்கரவர்த்தி எனவும் சிறப்பித்துக் கூறப்படும் கல்விப் பெருமையுடையவர் ஒட்டக் கூத்தர். இவர் செங்குந்த மரபைச் சேர்ந்தவர். ராஜ ராஜ சோழனது சபையில் தலைமைப் புலவராக இருந்தார். ஒரு நாள் அவர் தனது வீட்டின் வாயிலில் நின்று கொண்டிருக்கும் போது ஒரு அரிய கானம் அவர் செவியில் விழுந்தது. உற்றுக் கேட்டார். அப் பாட்டு திருஞானசம்பந்தப் பெருமான் அருளிச் செய்த திருவீதி மிழலை திருப்பதிகத்திலுள்ள தேவாரம் என்று அறிந்து கொண்டார். அதனை கும்பகோணம் வீர சிங்காதன மடத்தில் வாழ்ந்து வந்த சிவபக்தர் ஒருவர் பாடிய வண்ணம் தெருவழியாகச் சென்று கொண்டிருந்தார். நாள்தோறும் தேவாரப் பதிகங்கள்பாடி பிச்சை யேற்றல் அந்த சிவனடியாரின் வழக்கமா யிருந்தது. இன்னிசையோடு அவர் பாடிய அந்தப் பதிகம் கூத்தரின் உள்ளத்தை உருக்கியது. ஆகவே கூத்தர் அந்த சிவனடியாரை அழைத்து அந்தப் பதிகத்தை திரும்பவும் பாடும்படி கேட்டுக் கொண்டார்.

கூத்தரின் விருப்பத்திற்கிணங்க அந்த அடியார் மீண்டும் அப் பதிகத்தைப் பாடினுர். அப் பதிகத்தின் இன்னிசையும், தாள முறையும் கூத்தரின் கவிதை யுள்ளத்திற்கு மகா அற்புதமாக இருந்தது. எனினும் அப் பதிகத்தின் சரியான கருத்தை அவரால் அறிந்து கொள்ள முடியவில்லை. ஆகவே, அவர் அந்த சிவனடியாரைப் பார்த்து "சங்கமப் பெரியீர், அப் பதிகத்தின் பொருள் தெரியுமாயின் எனக்கு கூறுவீர்" என்று கூறினுர்.

யொளி வீறுகொண்டு வெளிப்போந்தது. அதன் சக்தியைக் கம்பர் கூறுமிடத்து,

> "இறுதிக்கால மன்றென வாமென விமையோ ரயிர்த்தனர்
> மேல்வெயில் கரந்து அங்குமிங்கும் நின்றனவுந் திரிந்தன"

எனக் காட்டுகின்றுர். தசரதன் யாது செய்வன்? அவன் ஆத்ம சக்தியின் மகிமை நன்கறிவன். எனவே குலகுரு வசிட்டனுரைப்படித் தன் மகன் இராமனை யனுப்பத் துணிந்தனன். முனிவன் கோபம் தணிப்பான் போன்று இராமனுடன் இலக்குமணனையுமனுப்பி முனிவனை விளித்து,

> "நற்றந்தைநீ தனித்தாயு நீ யிவர்க்கு
> எந்தை தந்தனன் இயைந்த செய்க"

என்று கெஞ்சிக் கேட்டுக்கொள்கின்றுன். எனவே மனத்துக்கண் மாசிலாத் தூய்மையாளர் தம் ஆத்ம சக்தியால் அருஞ்செயல் ஆற்றவல்லா ரென்பது இராமாயணப் படிப்பினைகளி லொன்றும்.

"என்ன! தமிழ் மறையாம் தேவாரத்திற்கு எவனால் தான் பொருள் கூற முடியும்? அவ்வாறு பொருள் கூறும் தரத்தில் உள்ளதோ அந்த தெய்வீகப் பாடல்கள்? எம்பெருமான் ஒருவனுக்கே யன்றி வேறு எவருக்குத் தான் அப் பொருள் விளங்கும்?" என்று அந்த அடியவர் கூறினார்.

"உமக்குத் தெரியுமா என்று கேட்டால் தெரியும் அல்லது தெரியாது என்று கூறுவதை விடுத்து ஏதேதோ பிதற்றுகிறாய். தேவாரத்தின் பொருள் எனக்குத் தெரியாது என்று நினைத்தனையோ?" என்று கூத்தர் மறுத்துக் கூறினார்.

அதைக் கேட்ட அடியவர் அளவிலடங்கா கோபம் கொண்டு "கல்விச் செருக்கால் நீர் இவ்வாறு கூறுகிறீர் போலும். நீர் அதற்கு பொருள் கூறினால் ஏற்றுக் கொள்வார் யார்?" எனக் கூறினார்.

கூத்தருக்கு அசாத்தியமான கோபம் உண்டாய் விட்டது. ஆகவே அவர், "நான் கவிச் சக்கரவர்த்தி என்று உணர்ந்தும் வாயில் வந்த விதம் பேசினையோ. அதன் பலனை அனுபவி" என்று கூறி பக்கத்தில் இருந்த குதிரைச் சம்மட்டியை எடுத்து ஒரு அடி அடித்தார்.

தளர்ந்த வயதும், மெலிந்த மேனியும் உடைய பக்தர் அடி பொறுக்காது பூமியில் விழுந்தார். சிறிது நேரத்தில் அவர் உயிரும் பிரிந்தது. அதன் பிறகு தான் கூத்தர் தான் கோபத்தால் செய்த பாதகச் செயலை அறிந்தார். அதனால் யாது துன்பம் வருமோ என பயந்தார். வருந்தினார். கடைசியில், நடந்தவைகளை அரசனிடம் கூறி அதனால் வரும் துன்பங்களிலிருந்து தன்னைக் காக்கும்படி வேண்டினார். அரசனும் விஷயம் அறிந்து வருந்தினான்.

சிறிது நேரத்தில் சிவனடியார் இறந்த செய்தி மடத்தில் வாழ்ந்துவந்த இதர அடியார்கட்கும் எட்டியது. அவர்கள் சினங் கொண்டு பெருங் கூட்டமாய் திரண்டு வேல், வாள் முதலிய கருவிகளை ஏந்திக் கொண்டு பழிக்குப் பழி வாங்க கூத்தர் வீட்டிற்குச் சென்றனர். அங்கு அவர் இல்லாமையால் அரண்மனையில் அவர் இருப்பாரென்று நினைத்து அரச சபை அடைந்தார்கள்.

சங்கமர்கள் கூட்டமாய் வருவதைக் கண்ட அரசன் விஷயம் முழுவதும் அறிந்தவனாதலால், "பெரும் புலவரான கூத்தரை இவர்கள் முன் விட்டால் இவர்கள் கொன்று விடுவார்கள். தமிழன்னைக்கு அதனால் பெரும் நஷ்டம் உண்டாகும்" என்று மனதில் நினைத்து கூத்தரை மறைவிடம் ஒன்றில் மறைத்து வைத்து விட்டு அடியவர்கள் முன் சென்று "சிவனடியார்களே! என்ன விசேஷம்? ஏன் கொலைக் கருவிகளை ஏந்தி நிற்கின்றீர்கள்? உங்கட்கு கோபம் வரக் காரணமென்ன? என்ன துன்பம் நேரிட்டது. கூறுங்கள். நான் தக்கன செய்கிறேன்" என்று ஒன்றும் அறியாதவன் போல் கூறினான்.

"அரசே! குற்றமொன்றும் புரியா எங்கள் மடத்து அடியவர் ஒருவரை கூத்தன் கொலை புரிந்து இங்கு வந்து மறைந்திருக்கிறான். இக் கொடுஞ் செயலுக்கு தக்க தண்டனை விதிக்க வேண்டும். அவனை எங்களிடம் விட்டுவிடும்" என்று அவர்கள் கூறினார்கள்.

"அடியவாகளே! கோபத்தை விடுங்கள். இந்த தீய கொலைக்கு தரும நூல்கள் கூறுகிறபடி நான் கழுவேறுகிறேன்" என்று அரசன் உரைத்தான்.

"நன்று. நன்று. கூத்தன் செய்த கொலைக்கு அரசன் கழுவேறவா? கூடாது. கூத்தனை எங்கள் பால் விட்டு விடும். இன்றேல் இதை விட்டு அகலோம்" என்று தீர்மானமாய் உரைத்தனர்.

பின்னர், அரசன் சிறிது நேரம் ஆலோசித்து விட்டு "இங்கு இருங்கள். நான் வருகிறேன்" என்று கூறி அந்தப்புரம் சென்று தன் மகனை அழைத்து, "அப்பா! மனுச்சோழனுக்கு முன்னர் நடந்த சோதனை போல் எனக்கும் இப்பொழுது நேர்ந்திருக்கிறது. இக் குறை உன்னால் தான் தீர வேண்டும்" என்று கூறி நின்றான்.

தந்தையின் கருத்தை மகன் உணர்ந்து கொண்டான். "ஐயனே! என் உடலும் உயிரும் தங்கள் உடைமை. தங்கள் இஷ்டம் போல் நான் நடக்க சித்தமா யிருக்கிறேன்" என்று பணிந்து கூறினான்.

ராஜ ராஜன் மகிழ்ந்து, மகனை ஒரு மூடு பல்லக்கில் வைத்து, திரையால் மறைத்து, கொலு மண்டபத்தில் அதனை தூக்கிவரச் செய்து அடியவர்களை நோக்கி "சிவனடியார்களே! சங்கமக் கொலை புரிந்த இவனை நீங்கள் இஷ்டம்போல் தண்டித்துக் கொள்ளலாம். இப் பாவியை நீங்கள் பார்ப்பது கூட மிகவும் பாவமாதலால் இருள் சூழ்ந்த மறைவிடத்தில் வைத்து கொலை செய்யுங்கள்" என்று கூறி அனுப்பினான்.

அரசன் சொல்லை உண்மையென நினைத்து பல்லக்கைத் தூக்கிச் சென்று மறைவிடம் ஒன்றில் வைத்து அவர்கள் கொலை செய்ய ஆரம்பிக்கையில், சங்கமருள் சிலர், "இவன் ஒட்டக் கூத்தன் தானா என்பதைப் பார்த்து கொலை செய்ய வேண்டும். வேறு யாராகவாவது இருந்தால் பெரும் பாவமாகும்" என்றனர்.

அது கேட்ட சங்கமர்கள் திரையை விலக்கலும், அங்கு அரசகுமாரன் சந்தோஷத்தோடு வீற்றிருந்ததைக் கண்டனர். திகில் கொண்டனர். அரசகுமாரன் "நீங்கள் எண்ணியபடி செய்யுங்கள். காலதாமதம் வேண்டாம்" என்று கூறி நின்றான்.

"ஒட்டக் கூத்தனை நாங்கள் கேட்க உன் தந்தை உன்னை அனுப்பி எங்களை ஏமாற்றி விட்டார். உன்னைக் கொல்லுதல் தருமமல்ல" என்று சங்கமர்கள் கூறினார்கள்.

"நானும் என் தந்தையும் உடன்பட்டு இக் காரியம் செய்ததால் என்னைக் கொல்வது தருமமே" என்று அரசிளங்குமாரன் மறுத்துக் கூறினான்.

கூத்தன் பால் அரசன் கொண்டுள்ள அன்பை அறிந்து சங்கமர்கள் ஆச்சரியப்பட்டார்கள். "அன்னாளில் குமணன் கவிக்காகத் தன் தலை கொடுத்தான். சோழனோ கூத்தனை காப்பாற்ற தன் குமாரனை ஈந்தான் போலும். இதன்றோ தியாகம்" என்று சங்கமர்கள் அரசனைப் புகழ்ந்து அரசகுமாரனை அரசனிடம் கொண்டு போய் விட்டார்கள்.

பண்டைத் தமிழர் மணமுறை

(பி. சுப்பிரமணியன்.)

பண்டைத் தமிழரின் மணமுறை யென்றால் பண்டு நம் முன்னோர் களெல்லாம் மணமுறையினை எவ்வாறு மேற்கொண் டிருந்தார்கள் என்பதை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும். இவ்வாறு பண்டைய நம் முன்னோரின் மணச் சிறப்பினை ஆய்வதற்குத் துணையாயுள்ளவை, "அக நானூறு, சிலப்பதிகாரம், தொல்காப்பியம்" முதலிய சங்ககால இலக்கிய இலக்கண நூல்களேயாகும்.

பண்டு நந்தமிழ் நாட்டுத் தமிழர்களெல்லாம், "பிரமம், பிரசா பத்தியம், ஆரிடம், தெய்வம், ஆசுரம், இராக்கதம், பைசாசம், காந்தர்வம்" என்னும் எண்வகை மணத்தினுட் சிறந்த "கந்தர்வ (களவு) மணத்தையே பெரும்பாலும் மேற்கொண் டிருந்தார்கள். பண்டைக் காலத்தில் ஆடவனும் பெண்ணும் இயற்கையாகத் தனியே சந்தித்து இருவரும் ஒருவர்க்கொருவர் மனத்திற் சிறந்த அன்புடையராய்ப் பழகி வருவதும், ஆடவன் பெண்ணின் பெற்றோர் உடன்பாட்டோடு மணம் முடித்துக் கொள்ளுவான். இதுவே பண்டைத் தமிழ் மக்கள் மேற்கொண் டிருந்த சிறந்த மணமுறையின் சுருக்கமாகும்.

இவ்வாறு பண்டைத்தமிழ்மக்கள் மேற்கொண்டிருந்த கந்தர்வ (களவு) மணத்துள் சிறிது, 'பொய்யும், குற்றமும் தோன்றக் கண்ட நம் முன்னோர்களெல்லாம் திட்டமாகிய கரணம் (மணம்) ஒன்றனைத் தமிழ் மக்களுக்கு வகுத்து வைத்துள்ளார்கள். இச் செய்தியினைத் தொல்காப்பியத்திலுள்ள,

"பொய்யும் வழுவுந் தோன்றிய பின்னர்
ஐயர் யாத்தனர் கரணம் என்ப"

என்னும் சூத்திரத்தால் நன்கு விளங்கும். (ஐயர்—மேலோர்)

நிற்க பண்டைக் காலத் தமிழரின் மணமுறையை பண்டைய சங்க இலக்கியமாகிய அகநூற்றிலிருந்து சிறிது விளக்கிக் காட்டுவாம்:—

ஒரு புறம்; உழுந்து முதலியவை தலைப்பெய்து அடப் (சமைக்கப்) பட்ட பெருஞ் சோற்றினைத் திருமணத்திற்கு வரும் ஒவ்வொருவரும் அவரவர்கள் மனப்படி தின்று கொண்டேயிருப்பர். மற்றொருபுறம் நிறைந்த கால்கள் புதைக்கப்பட்ட பந்தரின் கண் நுண்மணல் பரப்பப்பட் டிருக்கும். இவைக ளிங்கன மிருப்ப இல்லி (வீட்டி)ன் கண் நல்ல விளக்கினைச் சுடருண்டாம்படி ஏற்றி வைத்து, மாலை யிருளைப் போக்கிய வளர்பிறைக் காலத்தின் சகடம் (உரோகிணி) திங்களை (சந்திரனை) அடையும் நன்னாள் வந்து விட்டது என்பதை யறிந்து, உச்சியிற் புதிய அகன்ற குடத்தை யேந்தி வந்த மகளிர்களெல்லாம், முன்னர் முடிவுபெற வேண்டிய காரியத்தை முன்னரும் பின்னர் முடிவுபெற வேண்டிய காரியத்தைப் பின்னரும் முறையாகச் செய்து முடிப்பார்கள். பின்னர் மகப்பேறடைந்து மாங்கலியத்துடனிருக்கும் மகளிர் நால்வர் ஒருங்கு கூடித் தலைவியை நீராட்டுவார்கள். மேலும் அம்மகளிர்கள் தலைவிக்கு நீராட்டுவதோடன்றி, "உன்னை வாழ்க்கைத் துணைவியாகப் பெறும் தலைவனை நன்கு காப்பாற்றும் பேற்றினையுடையவளாக நீ ஆக வேண்டும்" என்று உபதேசமுஞ் செய்து மேலோரைக் கொண்டு வதுவையினை முற்றுவிப்பார்கள். இதனை

"உழுந்து தலைப்பெய்த கொழுங்களி மிதவை
பெருஞ்சோற் றமலை நிற்ப நிரைகாற்
தண்பெரும் பந்தர்த் தருமணன் ஞெமிரி
மனைவிளக் குறுத்து மாலை தொடரிக்
கனையிருள் அகன்ற கவின்பெறு காலைக்
கோள்கால் நீங்கிய கொடுவெண் டிங்கள்
கேடில் விழுப்புகழ் நாடலை வந்தென
வுச்சிக் குடத்தர் புத்தகன் மண்டையர்
பொதுசெய் கம்பலை முதுசெம் பண்டிர்
முன்னவும் பின்னவும் முறைமுறை தரத்தரப்
புதல்வர்ப் பயந்த திதலையவ் வயிற்று
வாலிழை மகளிர் நால்வர் கூடிக்
கற்பினின் வழாஅ நற்பல வுதவிப்
பெற்றோர் பெட்கும் பிணையை யாகென
நீரொடு சொரிந்த வீரிதழ் அலரி
பல்லிருங் கதுப்பின் நெல்லொடு தயங்க
வதுவை நன்மணம்............................"

என்னும் அகநானூறு 86-ம் பாட்டால் அறியலாம்.

ஆக, மேலே காட்டிய மேற் கோளிலிருந்து பண்டு நமது முன்னோர்களெல்லாம், மணமுறையை எத்தகைய சுருங்கிய நெறியிலும், நேரிய முறையிலும், நடத்தி வந்துள்ளார்களென்பதும், இக்காலத்தன போல் நான்கு நாள் மணமுறை யென்பது பண்டைக் காலத்து நம் நாட்டில் இல்லை யென்பதும் ஒருவாறு விளங்கும்.

நிற்க, இக்காலத்து நம் நாட்டு இளந்தமிழ்ச் சிறார்களெல்லாம் ஒரு சிலரின் ஆடம்பர மணமுறை வாழ்க்கையினைப் பார்த்து, நாமும் அவர்கள் போல் ஆடம்பர மணவாழ்க்கையை மேற்கொள்ள வேண்டும் என்று எண்ணங்கொண்டு பொருளினையும், காலத்தினையும் வீணே பாழாக்குகின்றார்கள். என்னே நமது தமிழர்களின் சீர்கேடு! மேலும் பொருளினை அவ்வாறு நல்வழியிற் செலவு செய்வதே நமக்கும் நமது சமூகத்தினருக்கும் நற் பயனளிக்கும் என்பது திண்ணம். ஆடம்பர மணமுறையினை இன்றே உதறித் தள்

சிறு கதை.

பட்டாசு விற்கும் பையன்

ஸ்ரீ. நாராயணன்.

"டேய், குப்பா நீ நேற்று நல்ல வியாபாரம் செய்துகொண்டு வரவில்லை. இன்னிக்கு இந்த தட்டு சாமான்களை எல்லாம் காசாக்கிக்கொண்டு வரணும் தெரியுமா? நாளை தீபாவளிக்கு உனக்கு நல்ல கதர் சட்டை வேட்டி வாங்கி வைத்திருக்கிறேன். போ. எடு தட்டை"

"ஆகட்டுங்க" என்று பதில் சொல்லிவிட்டு பட்டாசு நிறைந்த தட்டொன்றைத் தலையில் தூககிக்கொண்டு புறப்பட்டான் குப்பன். பத்து வயது நிரம்பா பாலன். இவனையொத்த மற்ற சிறுவர்கள் பள்ளிக்கூடம் போகிறார்கள். பந்து விளையாடுகிறார்கள். குப்பன்விதி இப்படி. அவன் தாய் தகப்பன் இல்லாத ஓர் அநாதை! புண்ணியத்திற்கு தூரபந்து ஒருவன் கஞ்சி வார்க்கிறான். மாதம் இரண்டு ரூபாய் சம்பளம். அதற்கு எவ்வளவு அலைச்சல்? எவ்வளவு அடிகள் பெறவேண்டி யிருக்கிறது.

2

மணி மூன்றாய்விட்டது. காலையில் புறப்பட்டது. பல தெருக்கள் சுற்றி வந்துவிட்டான். அவன், "பட்டாசு வாங்கவில்லையா பட்டாசு," என்று தொண்டையை கிழித்துக் கொண்டதுதான் மிச்சம். அவன் தட்டிலிருந்து ஒரு மத்தாப்பூப் பெட்டிகூட விலையாகவில்லை.

காலையில் உணவருந்தியது. முதலாளிக்குப் பயந்து கடைக்குப் போகவில்லை. பாவம் பசியாலும் வெய்யிலினாலும் மெலிந்துவிட்டான். நடக்க முடியாமல் தள்ளாடித் தள்ளாடி ஊர்ந்து சென்றான். பசியைக்கூட அவன்

ளுங்கள். மேலும் அடிமை நாட்டில் அடிமை மக்களாய்ப் பிறந்த நாம் ஆடம்பர மணமுறையினை உதறித் தள்ளாது மேற்கொண்டு வாழ்வோமாயின், சுதந்திர நாட்டில் சுதந்திர மக்களாய் வாழ முடியாது. அன்றியும் நாம் எளிய மணமுறையை மேற்கொண்டொழுகும் மக்களால் எள்ளி நகையாடும் தன்மையராவோம். ஆதலின், இன்றுவரை ஆடம்பர மணமுறையினை மேற்கொண்டு, காலத்தையும், பொருளையும் வாளா கழித்து உறங்கியிருந்த நந்தமிழ் நாட்டுத் தமிழ் மக்களெல்லாம், இனியாவது உறக்கத்தினின்று விழித்துப் [illegible]ண்டைய தமிழ் நாட்டுத் தமிழ் மக்களைப் போல் எளிய மணவாழ்க்கையு[illegible] தூய எண்ணமும் உடையராய் வாழ்ந்து நன்னிலையடைய எல்லாம் வல்ல இறைவர் அருள் புரிவாராக.

நினைக்கவில்லை. தட்டில் ஒரு காசுகூட சேரவில்லையே என்பதுதான் அவன் வருத்தம். அவன் அப்பொழுது வருத்தத்தின் வடிவமாகவே தோன்றினான். அவன் தன் வீட்டிற்குக் கஞ்சிகுடிக்கப் போகவும் நினைக்கவில்லை. ஏன்? எவனாவது குறும்புப் பையன் 'குப்பன் வீட்டிலேயே இருந்தான். வெளியே போனால்தானே பட்டாசு விலையாகும்' என்று தன் முதலாளியிடம் கோள் சொல்லிவிட்டால் என்ன செய்வது என்று வீட்டிற்கும் போகாது சுற்றின தெருக்களையே மறுபடியும் சுற்றிக் கொண்டிருந்தான்.

மேலும், குப்பன் முதலாளி பெரிய முன்கோபி. இப்படியே போனால் உதை நிச்சயம். அவர் தீபாவளிக்கு கொடுக்கவிருக்கும் கதர் வேஷ்டி சட்டைகளின் வாயில் மண் விழுந்துவிடப் போகிறதே என்றும் அஞ்சினான்.

இதற்கிடையில் நீருண்ட மேகங்கள் ஒன்றுகூடி மழை கல்வர்ஷமாய் பெய்யத் தொடங்கிற்று. குப்பன் மழைக்குப்பயந்து ஒரு வீட்டின் திண்ணையில் தட்டுடன் உட்கார்ந்து கொண்டான். வீட்டினுள்ளிருந்து ஒரு பையன் வந்து தட்டினண்டை உட்கார்ந்துகொண்டு 'அது என்ன விலை' 'இது என்ன விலை' என்று அவன் வாயைக் கிண்டிக்கொண் டிருந்தான்.

3

மழையோ விட்டபாடில்லை. வீட்டுக்காரப் பையன் "டே, எனக்கொரு மத்தாப்பூப்பெட்டி சும்மா கொடேண்டா. நீதான் நிறைய வைச்சிருக்கியே?" என்றான்.

"காசு கொண்டுவா உனக்கு சும்மா மத்தாப்பூ பெட்டி தரேன்."

"காசு எங்காத்திலில்லியே"

"பெட்டி எங்கிட்ட இல்லையே"

"அப்டீன்னா இங்கிருந்து போ"

187534

"மழை வுட்ட உடனே போயுடரேன்"

"முடியாது, போ" என்று குப்பன் பக்கத்தில் வைத்திருந்த தட்டை காலால் உதைத்து வீதியில் தள்ளிவிட்டு வீட்டினுள் போய் தாழிட்டுக் கொண்டான்.

பட்டாசுகள் தெருவில் சிதறிவிட்டன. குப்பன் வீட்டுக் கதவைத் தட்டினான். கதவு திறக்கப்படவில்லை. நனைந்துகொண்டே தட்டையும் சிதறிக்கிடந்த பட்டாசுகளையும் பொறுக்கி வைத்துக்கொண்டு மறுபடியும் அந்தத் திண்ணையிலேயே உட்கார்ந்து கொண்டு கதவு எப்பொழுது திறப்பார்கள் என்று எதிர்பார்த்திருந்தான். அவ[illegible]ட்கார்ந்திருப்பது பிடிக்கவில்லை. முதலாளியிடம் நனைந்த [illegible]ண்டுபோய்க் கொடுத்தால் என்ன செய்வாரோ என்[illegible] ஒரு [illegible] கொடுமை மற்றொரு புறமும் அவனை வாட்டி[illegible] வருத்தம் தாங்கா[illegible] என்று கதறினான். அவன் அநாதை! அ[illegible]தரிப்பார் யார்?

187534

4

மறுபடியும் மழை ஆவேசத்துடன் பெய்யத் தொடங்கிற்று. பையனுக்கு மேல் துண்டுகூட கிடையாது. அவனுடைய கைகால்கள் குளிரால் நடுங்கி அனேகமாய் விரைத்துப் போய்விட்டன. அந்தத் திண்ணையிலேயே சுருண்டு படுத்துவிட்டான்.

இரவு சுமார் 10 மணிக்கு வீட்டினுள்ளிருந்து ஒருவர் வந்து குப்பனை பலதடவை எழுப்பினர். அவன் அசைந்துகூடக் கொடுக்கவில்லை. எழுப்பினவர் "பயல் தூங்கட்டும்" என்று சலிப்புடன் சொல்லிவிட்டு வீட்டினுள் போய்விட்டார்.

5

தீபாவளி அன்றிரவு. எதிர் வீட்டுப் பெண்ணுக்கு தலை தீபாவளி. அங்கு சிரிப்பும் களிப்பும் கலந்து உலாவின. ஊருக்குமுன் எழுந்து கங்காஸ்நானம் செய்து மத்தாப்பூ முதலியவைகள் விடத் தொடங்கினர். அவைகள் கொஞ்சநேரம் சுடர் விட்டெரிந்து பிறகு கரிக்குச்சியாய் கீழே விழுந்தன. மனிதனின் யாக்கையும் அப்படியே!

குப்பன் கண் விழித்துக்கொண்டான். அவனுக்குத் தன் நினைவில்லை. ஜில்லென்று குளிர் அவனுடலை நடுக்க ஆரம்பித்தது. மத்தாப்பூவினால் உண்டான ஜோதியை அவன் கவனிக்கவில்லை. மற்றொரு ஜோதி அவன் முன்பு தோன்றிற்று. அது ஆளை மயக்கக்கூடியதாயிருந்தது. அந்த ஜோதியின் நடுவே ஒரு உருவம். கருத்தமேனி பெருத்த தேகம். முறுக்கிவிட்ட மீசை. கையில் ஒரு நீண்ட சூலாயுதமும் கயிறும்.

குப்பன் அந்த உருவத்தையே நோக்கிக் கொண்டிருந்தான். வைத்த கண் எடுக்காமல் நோக்கிக் கொண்டிருந்தான்.

உருவம் புன்னகை தவழ்ந்த முகத்துடன் குப்பனை அன்புடன் அழைத்தது. மறுநிமிடம் குப்பன் உருவத்தின் அணைப்பிலிருந்தான். குப்பனுடன் மறைந்துவிட்டது அந்த உருவம். ஜோதியும் மறைந்தது. இருள் சூழ்ந்து கொண்டது. நிசப்தம் குடிகொண்டது.

பழைய இருள். இடையிடையே கொஞ்ச நேரம் மத்தாப்பூக்களின் ஜோதி. அதிர்வெடிகளின் ஆவேசம்.

6

தீபாவளி இளஞ்சூரியன் குப்பனின் புன்னகை தவழ்ந்த பிரேதத்தின் மேல் பிரகாசித்தது. ஊர் ஜனங்கள் வந்து கூடினர். அவர்கள் குப்பன் காலனுடன் தீபாவளி கொண்டாட சென்றுவிட்டான் என்று பேசிக் கொண்டார்கள்.

அவசர புத்தி

(ஜி. சௌந்திரராஜன். பீ. ஏ.)

சென்னை பிரபல வக்கீலான மீனாக்ஷிசுந்தரம்பிள்ளை ஐந்து லக்ஷ ரூபாய்க் கதிபதியாய் இருந்தார். அவரது மனைவி பார்வதியம்மாள், ஆறு வயதுள்ள மகனை கந்தசாமியை விட்டுவிட்டு இறந்தாள். பிள்ளை தன் மனைவி இறந்த துக்கத்தினால் பதினைந்து வருட காலமாய் மணம் செய்யாமலிருந்து, பிறகு ஒருவாறு தன் குமாரன் சொன்னதின்பேரில், மைலாப்பூரிலுள்ள அருணாசலம் பிள்ளையின் குமாரத்தியான சுமார் பதினாறு வயதுள்ள விசாலாக்ஷி என்ற நங்கையை மணந்து கொண்டார். கந்தசாமி அப்பொழுது பி. எ. தேறி இருந்தான். கந்தசாமியும், அடுத்த வீட்டு கோபாலசாமியும் இளம் பிராயத்திலிருந்து ஆப்த சிநேகிதர்களாயிருந்து வந்தனர்.

ஒருநாள் மீனாக்ஷி சுந்தரம்பிள்ளை, வழக்கப்படி கோர்ட்டிற்குச் சென்றிருந்தார். அன்று கந்தசாமி ஓர் சாய்வான நாற்காலியில் சாய்ந்துகொண்டு, ஓர் தமிழ்பத்திரிகையைப் படித்துக் கொண்டிருந்தான். அச்சமயம் பின்னால் யாரோ வந்து தன் கண்களைப் பொத்தியதாகக் கண்டு திடுக்கிட்டு, "யாரது? கோபாலசாமியா? தெரியும் நீதான்; பந்தயம் வேண்டுமானாலும் கட்டுவேன்; எடு கையை," என்றான். அதற்கு அவன் பின்னிருந்த உருவம் பேச ஆரம்பித்து, "இல்லை; நீங்கள் இப் பந்தயத்தில் தோற்று விட்டீர்; எடுங்கள் பந்தயத்தை," என்று சொல்லி, கந்தசாமியின் கன்னத்தில் ஓர் முத்தம் ஈந்தது.

உடனே கந்தசாமி, தன் கண்களைப் பொத்தியிருந்த கைகளை சடக்கென்று விலக்கித் திரும்பிப் பார்க்கவே, தன் சிற்றன்னை நிற்பதைககண்டு திடுக்கிட்டு நாணமடைந்து, ஓர் மூலையில் ஒதுங்கி நிற்க, விசாலாக்ஷி அவனருகில் வந்து பேசத்தொடங்கி, "நாதா! ஏன் இப்படி பெண்போல் நாணிக்கோணி நிற்கிறீர்கள்? என் அருகில் வந்து எனக்கு ஓர் முத்தம் தரலாகாதா? அறுபது வயது சென்ற கிழவனைக் கட்டிக்கொண்டு எவ்வளவு நாட்கள்தான் சும்மா விருப்பேன்? என்னைப்போன்ற இள நங்கைகள் தங்களைப்போன்ற வாலிபர்களில்லாது எவ்வாறிருக்க முடியும்? நான் உங்களை காதலிக்கிறேன்," என்று கூறி தன் காதலை வெளிப்படுத்தி, காமவெறியுடன் கந்தசாமியைக் கட்டி அணைக்கும் பொருட்டு பாய்ந்து வந்தாள்.

இதைக்கண்ட கந்தசாமி அவளை நிறுத்திப் பேசத்தொடங்கி, "தாயே! என்ன காரியம் செய்ய நினைத்தீர்கள்? நான், தாங்கள் பெற்ற பிள்ளையல்லவா; தாங்கள் எனது பெற்ற தாயல்லவா; இது வேண்டாமம்மா;" என்று கெஞ்சி, அவள் காலில் விழுந்து கும்பிட, அப்பொழுதும் காமவேட்கை தணியாதவளாய், விசாலாக்ஷி அவனைத் தூக்கி முத்தமிட முயல, கந்தசாமி, தான் வாளாவிருந்தால் காரியம் மிஞ்சிவிடும் என்று எண்ணி, அவளை கீழே தள்ளி, அவள் எழுந்திராவண்ணம் அவள் கரங்களிரண்டையும் தரையோடு சேர்த்துப் பிடித்துக்கொண்டிருந்தான். அச்சமயம் எதிர்பாராதவிதமாய் ஓர் சம்பவம் நிகழ்ந்தது.

மீனாக்ஷி சுந்தரம் பிள்ளை, அன்று கோர்ட்டிற்கு போய்விட்டு அதி சீக்கிரத்தில் திரும்பி விட்டபடியால், தன் இளமனைவியைப் பார்க்க வேண்டுமென்ற ஆவலால் தூண்டப்பட்டவராய் தன் பங்களாவை யடையந்தார். அச்சமயம் ஹாலில் யாரோ, "ஐயோ! என்னை ஹிம்சிக்கின்றானே மூர்க்கன்! எனக்கு உதவி செய்ய யாருமில்லையா? என்னைப் பலவந்தப் படுத்துகின்றானே சண்டாளன்!" என்ற கூச்சலைக் கேட்ட பிள்ளை, ஹாலை நோக்கி விரைந்தோடி வந்து பார்க்க, விசாலாக்ஷி கீழே அலங்கோலமாய் வீழ்ந்து கிடக்கவும், மேலே கந்தசாமி அவளது இரண்டு கைகளையும் அமுக்கிக் கொண்டிருந்ததைக்கண்டு பின்னடைந்தார். தன் தந்தை வந்ததை யுணர்ந்த கந்தசாமி திடுக்கிட்டு, விசாலாக்ஷியின் கரங்களை விடுவித்து விட்டு, அச்சத்தால் ஓர் மூலையில் தலைகவிழ்ந்த வண்ணமாய் நிற்க, விசாலாக்ஷி, தன் தலையையும், உடையையும் சரிப்படுத்திக்கொண்டு எழுந்து ஓடிவந்து மீனாக்ஷிசுந்தரம் பிள்ளையைக் கட்டிக்கொண்டு தேம்பித் தேம்பி யழுது கொண்டு பேசத்தொடங்கி, "நாதா! தாங்களில்லாத சமயம் பார்த்து, தங்கள் மகன் என்னிடம் வந்து, "என் கண்ணே! என் கனியே! என் ரசமே! நான் உன்னை காதலிக்கிறேன்; நீ என்னை மணந்துகொள்; சாகப்போகின்ற கிழவன் கிடக்கிறான்," என்று இன்னும் என்ன என்னமோ சொல்லத்தகாத வார்த்தைகளைப் பிதற்ற, நான் அதற்கெல்லா மிணங்காதிருக்க இவன் என்னைப் பலவந்தப்படுத்தி ஹிம்சை செய்ய ஆரம்பித்தான்; அதற்குள் நல்லவேளையாக தாங்கள் வந்து என்னைக் காப்பாற்றி, என் மானத்தையும் காப்பாற்றினீர்கள்" என்று புளுகினாள்.

உடனே பிள்ளைக்கு ரௌத்ராகரமான கோபம் வந்துவிட்டது. "அடே கந்தசாமி! உனக்கு இவ்வளவு திமிரா?; நான் இந்நாள்வரை உன்னை யோக்யனென்று நினைத்ததற்கு மாறாக மிகுந்த துர்க்குணமுள்ளவனாய் மாறிவிட்டாய்; பெற்ற தாய்க்குச் சமானமான உன் சிற்றன்னையை மனையாட்டியாகக் கொள்ள நினைத்த உன் புத்தியே புத்தி! என்னைக் கிழட்டுப் பிணம் என்று சொன்ன உன் நாவைத் துண்டித்தாலும் என்மனம் ஆறாது; உன் முகத்தைப்பார்க்க எனக்குச் சிறிதும் பிடிக்கவில்லை; இனி அரைக்ஷணமேனும் என் எதிரில் நில்லாதே! வீட்டைவிட்டு வெளியில் போ," என்று கந்தசாமியின் கழுத்தைப்

பிடித்துத்தள்ள, அவன் ஒன்றும் சொல்ல நாவெழாதவனாய், ஓர் ஊமைபோல் நடந்து பங்களாவைவிட்டு வெளி யேறினான்.

* * * *

வெளியேறின கந்தசாமி இனி இச்சென்னையி லிருக்கக் கூடாதென்று தீர்மானித்தவனாய், ரயிலேறி மதுரை யடைந்தான். சிறிது காலத்தில் கந்தசாமி அங்கே கலெக்டர் ஆபீசில் மாதம் இருபத்தைந்து ரூபாய் சம்பளத்தில் ஓர் குமாஸ்தாவேலையி லமர்ந்தான். சில மாதங்களில் அவன் தன் சாமர்த்தியத்தால் சப்கலெக்டர் வேலையி லமர்ந்தான். அப்போது அவனுக்குச் சம்பளம் ஐந்நூறு ரூபாயா யிருந்தது.

* * * *

ஐந்து வருடங்கள் கழிந்தன. விசாலாக்ஷியும் சுந்தரம்பிள்ளையை வெறுக்க ஆரம்பித்தாள். எதிர்த்த பங்களாவில் வசித்துவந்த சுமார் இருபத்தைந்து வயதுடைய தங்கப்பா என்ற வாலிபன்மேல் தன் காதலைச் செலுத்தினாள். தங்கப்பா, அடிக்கடி தன் பங்களாவின் மேன்மாடிக்கு உலாவ வருவானாதலால், அது சமயம் பார்த்து விசாலாக்ஷியும், தன் பங்களாவின் மேன்மாடியை யடைந்து தங்கப்பாவை அனுதினமும் உற்று நோக்கி, கண்ஜாடை காட்ட ஆரம்பித்தாள். தங்கப்பாவும் அவளது மையலில் சிக்கி, கண்ஜாடை காட்ட, சில தினத்திற்குள் இருவரும் பரஸ்பர காதலர்களாய் மாறினர். பிள்ளை கோர்ட்டிற்குச் சென்றிருக்கும் சமயம் பார்த்து, தங்கப்பா பிள்ளையின் பங்களா வடைந்து, விசாலாக்ஷியோடு கொஞ்சிக்குலாவி விட்டுப் போய்வரும் வழக்கமாகக் கொண்டான். இவ்வாறு சிலகாலம் கழிந்தது.

ஒருநாள் பிள்ளை கோர்ட்டிற்குச் சென்றவர், பாதி வழியில், தனக்குச் சிறிது தலைநோவெடுத்ததால் திரும்பி பங்களாவை யடைந்தார். தன் இளைய மனைவியிடம், தனக்குத் தலைநோவா யிருந்ததால், அன்று கோர்ட்டிற்குப் போகவில்லை என்ற விஷயத்தைச் சொல்லிவிட்டுப் போகலாமென்று நினைத்து, அவளது அறையை யடைய, அங்கே எதிர்பாராத விதமாய் தங்கப்பாவும், விசாலாக்ஷியும் சேர்ந்து மஞ்சத்தில் படுத்திருப்பதைக்கண்டு திகிலடைந்தார். தான் இனி சும்மாவிருந்தால் விபத் தேற்படுமென்று நினைத்தவனாய், தங்கப்பா பக்கத்தில் ஒருமேஜை மீது வைத்திருந்த ஓர் வெண்கலச்சிலையை யெடுத்து ஓடிவந்து, பிள்ளையின் தலையில் மோத, அவர் மூர்ச்சித்து விழ, தங்கப்பா பங்களாவைவிட்டு வெளியில் ஓடினான்.

* * * *

தன்னை எப்படி வைதாலும், கழுத்தைப் பிடித்துத் தள்ளினாலும் தன் தந்தை யென்ற பாசத்தாலும், ஐந்து வருடமாய் அவரைப் பார்க்கவில்லையென்ற ஆவலாலும் கந்தசாமி சென்னைக்கு வந்து, தன் தந்தையின் பங்களாவை யடைய, எதிரில் தங்கப்பா ஓடிவரக் கண்டு, அவனை வழி மறித்து "என்ன விசேஷம்? என் இப்படி குடல் தெறிக்க ஓடுகின்றாய்?" என கேட்க தங்கப்பா சிறிது தடுமாற்ற மடைந்து, "ஒன்றுமில்லை, ஒரு சாமான் கேட்க வந்தேன்; "இல்லை" என்று வேலைக்காரர்கள் சொன்னார்கள். அத

னால் போகிறேன், என்னை விடு; சீக்கிரம் போக வேண்டும்'' என்று திக்கித் திக்கிச் சொன்னான்.

கந்தசாமி சிறிது சந்தேகித்து தங்கப்பாவைப் பார்த்து, ''சரி என்னோடு வா; பிறகு போகலாம்'' என்று அவனது கைகளைப்பற்றி இழுத்துக் கொண்டு ஹாலுக்குள் நுழைய அங்கே தன் தந்தை மூர்ச்சித்துக் கிடந்ததைக் கண்டு, ஏதோ நடந்திருக்கிறதென்று நினைத்த கந்தசாமி, வேலைக்காரர்களைக் கூப்பிட்டு தங்கப்பாவை, அவர்கள் பிடித்துக் கொள்ளுமாறு கூறிவிட்டு, தந்தையின் மூர்ச்சையைத் தெளிவிக்கலானான்.

சிறிது நேரம் கழித்து, பிள்ளை மூர்ச்சை தெளிந்து பார்க்க, அருகில் கந்தசாமி உபசாரம் செய்து கொண்டிருப்பதைக் கண்டு அவனைக்கட்டி அணைத்து கண்ணீர் சொரிந்தார். பிறகு அவர் நடந்த விருத்தாந்தங்களை யெடுத்தியம்ப, கந்ததாமி உடனே டெலிபோனண்டை போய் போலீசாரை வரும்படி பேசிவிட்டு தந்தையிடம் வந்தான். பிறகு மீனாக்ஷிசுந்தரம் பிள்ளை விசாலாக்ஷியின் நகை நாணயமெல்லாம் பிடுங்கிக்கொண்டு ஓர் கந்தைத்துணியுடன் அவளை வெளியில் விரட்டி விட்டார். சிறிது நேரத்திற்குள் போலீசார் வந்து தங்கப்பாவை கைது செய்துகொண்டு சென்று விட்டனர்.

தனியில் விடப்பட்ட பிள்ளை, கந்தசாமியைப் பார்த்து ''அப்பா! உன்னை தீர விசாரியாமல் அவசர புத்தியினால் ஏதோ பிதற்றிவிட்டேன். போனது போகட்டும்; நடந்ததைப்பற்றி நினைத்து வருத்தப்படாமல் இரு;'' என்று கூறி கந்தசாமியை புத்திரபாசத்தால் கட்டித்தழுவி உச்சிமோந்தார்.

ஆனந்தபோதினி
அச்சுக்கூடத்தில்

போஸ்ட் கார்டுகள் முதல் போஸ்டர்கள் வரை புஸ்தக வேலைகள் உள்பட எல்லாவித அச்சு வேலைகளும் சுத்தமாகவும், அழகாகவும், கால தாமதமின்றியும் செய்து கொடுக்கப்படும்.

விவரங்களுக்கு கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதித் தெரிந்துகொள்ளவும்.

மானேஜர், ''ஆனந்தபோதினி'' ஆபீஸ், மதராஸ்.

மது வண்டு

(தே. ப. பெருமாள்.)

வையத்து வாழ்க்கையே வகையென்கும் வணிகரிடை
பையத்தான் நீபோந்து பார்வாழ்வின் இயலுரைத்து
நையலுறும் எளியோரின் நரகத்து நிலைகாட்டி
ஐயமதை அவர்க்களிக்க அன்புடனே அறைவண்டே! (1)

உணவுக்கு வருந்தியழும் உள்ளன்புக் குழவியொடு
தணல்சுட்ட இலையெனவே தவிப்புற்ற எளியோரை
கணப்பொழுதில் கண்டதுமே காறிஉமிழ் வணிகரைத்தான்
இணைபிரியா மதுவண்டே! இரங்கத்தான் வைப்பாயே! (2)

உண்ணுதற்கு உணவின்றி உடுத்தற்கு உடையின்றி
கண்ணுறக்கம் வெறுந்தரையில் கழிப்போர்கள் மிக்கிருப்ப
கண்டபடி தம்பொருளை கரியாக்கும் செல்வரிடை
உண்டாடும் உயர்வண்டே! உரைத்திடுவாய் இவர்நிலையை. (3)

என்பாட இளைப்புற்ற இளமகவின் உடல்நோக்கி
துன்பாடித் துயருழந்து தீவறுமை நிலையோர்ந்து
தன்பாடுந் தொலைந்திடவே தீநச்சுண் தந்தையினை
இன்பூட்டி இதுவொழிக்க இயன்றளவும் முயல்வண்டே! (4)

செல்வத்தை இழந்தமக்கள் சிறுவயிற்றைக் கழிப்பதற்கு
எல்லையில் வழிநடந்தும் இறுதியினில் பெறுவதையம்!
செல்வமும் நிலைக்குமொன்றோ? செவ்வறம் நிலைக்குமன்றோ!
செல்வத்தை அறவழியில் செலவிட செய்சுரும்பே! (5)

ஏழைக்கு இரங்குதலே இவ்வுலகில் பெருநிலையாம்
ஏழைக்கு இரங்கியே இன்தமிழர் முன்னாளில்
பாழில்லாப் பெருஇன்பம் பாருலகில் பெற்றிருந்தார்
பாழில்லா அவ்வின்பம் பாரடையப் பண்சுரும்பே! (6)

உலகத்தில் பிறந்தவர்கள் உயிர்நீப்ப ரெனுமுண்மை
உலகத்தார் உணர்ந்துவிடில் உலகமதில் மலைவுண்டோ?
கலகந்தான் அழிந்திடவே கதியில்லார் வாழ்வாரோ
நிலவுலகில் இதுவரவே நீயுழைப்பாய் பூவண்டே! (7)

ஒருநாடு தன்வறுமை ஒழித்துவிடில் அந்நாடு
பெருநாடு புகழ்நாடு பேரின்பந் தருநாடு
திருநாடு எனப்பலவாய் போற்றுதல் பெற்றிடுமே
இரும்புவியும் அந்நிலையில் இயற்றிட உழைவண்டே! (8)

உலகத்தில் பிறந்தவர்க்கு ஒருவனே இறைவனாகும்?
உலகத்து மக்களெல்லாம் அவ்வொருவன் புதல்வராகும்
உலகத்தி லொன்றுஉண்ண உறும்பசியா லொன்றுவாடின்
உலகத்து இறையொறுப்பன் உண்பவர்பால் உரைவண்டே! (9)

கனிபழுத்த பழப்பொழிலில் கால்நடையில் ஒருமங்கை
இனிவூட்டும் கருங்கனியென் றெடுத்திட்ட ஒருகனியை
கனிவோடு உண்ணுகையில் கடிதினில் பறந்தவண்டே!
இனிஉலகில் ஏழையர்கள் வாழ்வதற்கு இறைகோற்பாய்! (10)

(ஆசிரியர் - வி. சங்கரய்யர்)

42. சுக்கு மோர்

கிராணி அஜீரணத்துக்கு இரவு ஒரு துண்டு சுக்கை மோரில் ஊறப் போட்டு காலையில் அரைத்துக் கொடுக்கவும்.

43. சுக்குத் தேன்

பலஹீனம், நீர்எரிச்சல், மேஹரோகம், ஜுரம், அஜீரணம், வயிற்று வலி முதலியவைகளுக்கு சுக்கை மணலில் போட்டு மூடி ஒருமாதம் தண்ணீர் விட்டு பிறகு எடுத்து அலம்பி துண்டாக நறுக்கி தேன்விட்டு ஒரு சீசாவில் ஒருமாதம் வைத்திருந்து பிறகு காலை மாலை ஒரு துண்டு வீதம் சாப்பிட்டு வரவும்.

44. விளக்கெண்ணெய்

நீரடைப்புக்கு விளக்கெண்ணெய் கால்படி பெருங்காயம் 1-பலம் தட்டிப்போட்டு நன்றாகக் காய்ச்சி வடிகட்டி அதில் பொரித்த வங்காரம், கடுக்காய்த்தூள், $\frac{3}{4}$-ரூபாயிடை வீதம் போட்டு 6-நாட்கள் வைத்திருந்து பிறகு தினமும் இரவு கொடுத்து வரவும்.

45. ஜாதிக்காய் எண்ணெய்

கணை, இரத்தவாந்தி, இருமல், கக்குவான், சீதபேதி இவைகளுக்கு நல்லெண்ணெய் 1-படி முலைப்பால் $\frac{1}{8}$-படி பசுவின் பால் $\frac{1}{4}$ படி கலந்து ஜாதிக்காய் 1-பலம், பத்திரி 1-பலம், வெந்தயம் 1-பலம், இவைகளை கத்தாழைச்சாறு விட்டரைத்து கலக்கி காய்ச்சி வடிகட்டி வெந்நீரில் 2 சொட்டு முதல் 4 சொட்டுவரை கொடுக்கவும்.

46. சந்தன எண்ணெய்

சொறிசிரங்கு கரப்பான் வகையறாவுக்கு 8-பலம் சந்தனத்தூள், நல்லெண்ணெய் $\frac{1}{4}$ படி, 4 படி தண்ணீரில் போட்டு காய்ச்சி வடிகட்டி புண்களில் பஞ்சில் தோய்த்துப் போடவும்.

47. லவங்காதி எண்ணெய்

லவங்கம், கற்கண்டு வகைக்கு 2-பலம், ஜாதிக்காய், பத்திரி வகைக்கு $\frac{1}{4}$-பலம், விளக்கெண்ணெய் $\frac{1}{4}$-படி சேர்த்து காய்ச்சி குங்குமப்பூ, கோரோசனை சேர்த்து வேளைக்கு 2-துளி வீதம் வெந்நீரில் கொடுக்க க்ஷயம், இருமல், உப்பசம் வகையறா நீங்கும்.

48. ஏலாதி வடகம்

அக்னிமாந்தம், வயிற்றுவலி, மூலக்கொதிப்பு வகையறாவுக்கு ஏலம், இலவங்கப்பட்டை, முந்திரிப்பழம், திப்பிலி வகைக்கு 6-பலம் அதிமதுரம்,

சர்க்கரை, பேரீச்சம்பழம், வகைக்கு பலம் 1 இடித்து கழற்சிக்காயளவு தினமும் காலை சாப்பிடவும்.

49. பூண்டு வடகம்

மேகத்துக்கு 10-பலம் பூண்டு, $\frac{1}{4}$-படி நெய், $\frac{1}{4}$-படி பசுவின் பால் விட்டு காய்ச்சி மெழுகு பதத்தில் இறக்கி 3-பலம் ஜீனியும், 5-பலம் கோதுமை மாவும் தூவி கிளறி வேளை ஒன்றுக்கு கொட்டைப்பாக்கு அளவு சாப்பிடவும்.

50. லிங்கக்கட்டு

ஜன்னி, வாயு, குன்மம் காய்ச்சல் வகையறாவுக்கு ஒரே கட்டியான லிங்கத்தை ஒரு கரண்டியில் மேலும் கீழும் சீனக் காரத்தூள் போட்டு வறுக்கொடுத்து $\frac{1}{4}$-படி தேன்விட்டு சுருக்குக் கொடுக்கவும். இதை இஞ்சிச் சாற்றில் உரைத்துக் கொடுக்கவும்.

51. பவள பஸ்மம்

உஷ்ணத்துக்கு கீழ்வாய் நெல்லியிலையை அரைத்து அதனுள் பவளத்தை வைத்து 7-சீலை மண் செய்து 50 எருவில் புடமிடவும்.

குறிப்பு:—திரிகடுகு—சுக்கு, மிளகு, திப்பிலி.

திரிபலை—கடுக்காய், நெல்லிக்காய், தானிக்காய்.

திரிகடி—மூன்றுவிரல் அளவு.

52. சங்கி பஸ்மம்

கல்லடைப்பு, நீரடைப்பு, நீரெரிவு, க்ஷயம், இருமல், உஷ்ணம், மேகம் முதலியவைகளுக்கு—மான் கொம்பை சிறு துண்டாக நறுக்கி குப்பைமேனிச் சாற்றில் ஊறவைத்து அதையால் கவசம் செய்து சீலமண் செய்து 50 எருவில் புடம் போடவும். பிறகு பசுவின்பால் விட்டு அரைத்து முன்போல் புடம் போடவும்.

53. விரோசன மருந்துகள்.

(a) பூவரசம் பட்டையை பசுவின்பால் விட்டிடித்து 4 தாம் வடிகட்டிக் கொடுக்கவும். அன்று புளி, உப்புதள்ளவும். தூர்நீர் நீங்கும். புழுக்கடி மேக ஊறல் குணப்படும்.

(b) பாலில் அவித்து உலர்த்தின அதிமதுரம் 1 பங்கு, திப்பிலி $\frac{1}{2}$பங்கு இடித்து பொடிசெய்து ஒரு வேளைக்கு $4\frac{1}{2}$ வராகனிடை நெய்யில் கொடுக்கவும்.

(c) சுக்கு, கருவேப்பிலை, பெருங்காயம், வகைக்கு 1 ரூபாயிடை, திப்பிலி, இந்துப்பு வகைக்கு $\frac{1}{8}$ ரூபாயிடை உலர்த்தி பொடிசெய்து நெய்யில் கொடுக்கவும்.

(d) திரிகடுகு, ஜீரகம், இந்துப்பு, கரிவேப்பிலை, பெருங்காயம், சமம் சூர்ணித்து திரிகடி அளவு நெய்யில் சாப்பிடவும்.

(e) $\frac{1}{2}$ வராகனிடை மாம்பருப்பை பொடி செய்து தேனில் கொடுக்கவும்.

(f) சிற்றாமணக்கெண்ணெய் 1 படி, பசுவின்பால் 4 படி, அதிமதுரம், இந்துப்பு, கடுக்காய், கடுகுரோகிணி, நேர்வாளப் பருப்பு, வகைக்கு 3 ரூபாவிடை அரைத்துப் போட்டு காய்ச்சி வடிகட்டி வைக்கவும். இதில் 12 முதல் 24 வரை சொட்டுக்கள் வெந்நீரில் கொடுக்கவும். சிரங்கு, சொறி, கரப்பான், கணை, அஸ்திசுரம், வெட்டை, தேகவலி, கடுப்பு, பித்தம் முதலியவை தீரும். கஞ்சி ஆகாரம், புளி கூடாது. இரவு மோர்விட்டு சாப்பிடவும்.

(g) எருமைச் சாணி, எலுமிச்சம்பழம், ஆவின்பால் இவைகளில் அவித்து மேல்தோல் இதழ் போக்கிய நேர்வாளம் வராகனிடை 6, காசுக்கட்டி 12 வராகனிடை தேன்விட்டு அரைத்து குன்றுமணியளவு மாத்திரை செய்து வைத்துக் கொள்ளவும். அதிக பேதியானால் எலுமிச்சம்பழச் சாறு கொடுக்கவும். ஜன்னி, ஜுரம் இவைகளுக்கும் கொடுக்கலாம்.

54. தீ சுட்ட புண்

(a) சுண்ணாம்பும் எருக்கம் பூவும் அரைத்துப் போடவும்.

(b) சோடா உப்பை தண்ணீரில் கரைத்து நன்றாக பத்துப் போடவும்.

55. பித்த வெடிப்புக்கு

உப்பு, செம்மரியாட்டு சாணி, அரசம்பட்டை வகைக்கு 1 பலம், எருக்கம்பூ 3 பலம் இடித்து சூடாக்கி ஒத்தடம் கொடுக்கவும். ஜீரகம் 1 வராகனிடை, சுண்ணாம்பு 5 வராகனிடை, துருசு 5 வராகனிடை பொடி செய்து எருமை வெண்ணெயில் குழப்பிப் போடவும்.

ஏஜண்டுகள் தேவை

எல்லா ஊர்களிலும் நமது 'ஆனந்தபோதினி' மாத, வாரப் பத்திரிகைகளை விற்பதற்கும், சந்தா சேர்த்துக் கொடுப்பதற்கும், விளம்பரம் சேர்த்துக் கொடுப்பதற்கும் தக்க சாமர்த்தியமுள்ள ஏஜண்டுகள் தேவை. விவரம் அறிய விரும்புவோர் எமக்கு எழுதித் தெரிந்து கொள்ளவும். நமது புஸ்தகங்களும் பத்திரிகைகளும் எல்லா ஸ்டேஷன்களிலுமுள்ள ஹிக்கின்பாத்தம் புஸ்தகசாலைகளில் கிடைக்கும்.

மானேஜர்.

நமது வாழ்வில்

'மணியன்'

————:0:————

1. அறியாமை என்ற திரைச் சீலையில் பயம் என்ற பென்சிலைக் கொண்டு நம்பிக்கை என்ற சிற்பியால் வரையப்படும் படமே பேய், பிசாசாகும். —இங்கர்ஸால்.

2. நம் வாழ்நாள் அளிக்கும் அற்புதப் பொக்கிஷம் களங்கமற்ற பெயராகும். அது இல்லையேல் நாம் வர்ணம் பூசிய களிமண் போலாகின்றோம். —ஷேக்ஸ்பியர்.

3. இப் புவியில் எவன் ஒரு காரியத்தைச் செய்ய இயலாதவனாக இருக்கின்றானோ அவன் முயற்சியுள்ளவனாக இருக்கின்றான். எவனால் கூடுமோ அவன் வாளா யிருக்கின்றான். என்னே? மானிட இயற்கை! —பிரௌனிங்.

4. உயர்ந்தோரை வெறுப்பதே, கீழோர் அவர்களுக்குப் புரியும் இயற்கையான தொண்டு. —டிக்கன்ஸ்.

5. பழிக்குப்பழி, நாகரீகமற்ற நியாயத் தீர்ப்பு. —பைரன்.

6. ஒருவனுடைய எண்ணத்திற்கும், செய்கைக்கும் வித்தியாசம் அபரிதமாக இருக்க வேண்டும். அவன் செய்தது செய்ய நினைப்பதை விட குறைந்ததாக இருக்க வேண்டும். இல்லையேல் சுவர்க்கம் எதற்கு? —பிரௌனிங்.

7. நாம் முன்னும் பார்க்கின்றோம். பின்னும் பார்க்கின்றோம். பார்த்தும் இல்லாதவைகளுக்கு வருத்த முறுகின்றோம், நமது உளம் பூரித்த சிரிப்பிலும் சிறிது வலி அடங்கியுள்ளது. நமது கர்ணாமிருத பாடல்கள் எண்ணங்களைத் தோற்றுவிக்கின்றன. —ஷெல்லி.

8. நம் வாழ்நாள் அதிகரிக்க அதிகரிக்க, அது ஒரு எளிய வஸ்துவாகிறது. —ஷில்லா.

9. கடவுளுக்குப் பயப்படு. அதுவே ஞானத் தோற்றத்திற்கு அறிகுறியாகும். —இந்தியன்.

10. கிழக்கு கிழக்கே; மேற்கு மேற்கே.
கிழக்கும் மேற்கும் நமக்கு விருப்பே. —தாகூர்.

11. ஒரு பத்து ரூபாய் நோட்டைக் கண்டெடுப்பதைக் காட்டிலும் ஒரு சந்தோஷகரமான மனிதனையோ, மாதையோ பார்ப்பது உசிதமானது. —ஸ்டீவன்ஸன்.

12. நாம் ஒருவனைப் பார்த்து ஏசிச் சொன்ன சொற்களை நான்கு குதிரைகள் பூட்டிச் சென்ற போதிலும் திரும்பக் கொண்டுவர முடியாது. —பர்மிய வசனம்.

13. அந்தோ! உன் வறுமையைப் போக்குகிறேன். உன் துக்கத்தைப் போக்குகிறேன். ஆனால் எங்கள் தேசப் புலவர்களை, அதிலும் பாரதியை யாசிக்காதே. —பாரத புத்திரன்.

14. ஒரு பசுந் தழையைப் பார்ப்பதிலிருந்து எழும் எண்ணம் ஞானிகள் கூறுவதைக் காட்டிலும் ஜாஸ்தியாகவே, மனிதனைப் பற்றியும், நீதி நெறிகளைப் பற்றியும் நமக்குப் புகட்டும். —வொர்ட்ஸ்வொர்த்.

உற்ற யாக்கையின் உறுபயன் என்?

"மைவண்ணன்."

வார்கடலுலகில் கடவுளால் தோற்றுவிக்கப்பட்ட பலவகைப் பிறப்பினுள் மானுடப் பிறவியே பெறுதற்கரிய பிறவியாம். ஏனெனில், நால்வகைத் தோற்றத்து எழுவகைப் பிறப்பினுள்—அண்டசம், சுவேதசம், உற்பீசம், சராயுசம் என்னும் நால்வகைத் தோற்றமும், தேவர், மானுடர், விலங்கு, பறவை, ஊர்வன, நீருறைவன, தாவரம் என்னும் எழுவகைப் பிறப்பும்—புல்முதல் பல் பிறவியெடுத்து இப் பிறவிகளில் செய்த நல்வினையின் பயனாக, மானுடப் பிறவி யெய்தலானும், இம் மானுடப் பிறவியே பகுத்தறிவுடைமையும், தன்னைத் தோற்றுவித்த இறைவனொருவனுளன் என்னும் உணர்வும் உண்டாதற்கு ஏதுவாயிருத்தலானும் மற்றப் பிறவியிலும் மானுடப் பிறவியே மிகச் சிறந்ததாகும்.

இம் மானுடப் பிறவியின் பெறுதற் கருமையை யுணர்த்தற்கன்றோ' அருணந்தி சிவாசாரிய சுவாமிகள்,

"அண்டசஞ் சுவேதசங்கள் உற்பீசஞ் சராயுசத்தோடு
எண்டரு நாலெண்பத்து நான்கு நூறாயிரத்தால்
உண்டுபல் யோனியெல்லா மொழித்து மானிடத்துதித்தல்
கண்டிடிற் கடலைக்கையால் நீந்தினன் காரியங்காண்"

என்று தெளிய உரைத்தனர். இதனையே,

"அரிதரிது மானிடராத லரிது"

என்றும்,

"எண்ணரிய பிறவிதனில் மானிடப் பிறவிதான்
யாதினும் அரிதரிது காண்."

என்றும் முறையே ஞானமூதாட்டியாரும், தாயுமானத் தவச்சிரேட்டரும் வலியுறுத்திப் போந்தனர்.

இவ்விதம் பெறுதற்கரிய மானுடப் பிறவியை யடைந்த நாம் இம் மானுட யாக்கையால் பெறும் பயன் யாது? என ஆராய்வதே இக் கட்டுரையின் நோக்கமாகும். மானுடர்களாகிய நாம் இப் பிறவி யெடுத்ததின்

நோக்கமென்ன? இறைவன் நம்மை இம் மானுடப் பிறவி யெடுக்கும்படி செய்தது எதற்கு? நாம் இம் மானுட யாக்கை தாங்குவதற்கு முன் என்னென்ன பிறவிகளில் பிறந்து இறந்து உழன்றோம்? இப் பிறவிகளில் புகுவதற்கு முன் நம் உயிர்கள் எந் நிலையில் எவ்விடத்திலிருந்தன? என இன்னோரன்னவற்றை முறையாக ஆராய்வோமாயின், இம் மானுடப் பிறப்பின் பெறுதற் கருமையும் இன்றியமையாமையும், அதனை யடைந்தால் நன்னெறியில் ஒழுகிப் பயன்படுத்திக் கொள்ளும் அவசியமும், அதனாலாய பயனும் இனிது விளங்கும். முதலில் உயிர்களாகிய நாம் பிறப்புக்களுள் புகுவதற்கு முன் எவ்விதமிருந்தோம் எனச் சிறிது ஆராய்வோம். ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலமும் உயிர்களாகிய நம்மிடத்தில் இயற்கையாக அமைந்துள்ளன. உயிர்களின் கன்மபலம் பரிபாக மாதற்பொருட்டு முதல்வன் மாசங்காரத்தை இயற்றுங் காலத்து மாயையின் காரியமாகிய யாவும் ஒன்றனுள் ஒன்றாய் அவற்றிற்கு நிலைக்களமான மாயையில் ஒடுங்க, மாயை சிற்சத்தியிலொடுங்க, சிற்சத்தி இறைவனுள் ஒடுங்குகின்றது. உயிர்களெல்லாம் முதல்வன் இச்சையின் வண்ணம் ஆணவமலத்தால் விழுங்கப்படுகின்றன. ஆணவமலம் இன்னதெனச் சொல்லொணாத் திணித்த இருளை வாய்ந்தது. மாணிக்க மணியை நஞ்சுவாய்க்கு ளடக்கின நாகம் போலவும், பச்சையாய் முளைத்து விறகாகு மட்டும் தீயைத் தெரியாமல் மறைத்து வைத்திருந்த காட்டம் போலவும், ஞானக் கண்ணை மறைத்து அறிவுஞ் செயலும் இறக்கும்படி ஆணவமலம் உயிர்களைப் பிடித்துக் கொண்டிருக்கின்றது என்று இந் நிலையை ஒருவாறு விளக்கலாம்.

இனி, உயிர்கள் சகசமலமாய் ஆணவமலத்தால் விழுங்கப்பட்டு அறிவு செயலின்றி மூடம் போல நீண்டகாலம் இருந்த பின்னர் கருணைத் தடங்கடலான முழுமுதற்கடவுள் இரக்கங்கொண்டு அவ் வாணவமலம் பரிபாக மாதற்பொருட்டுப் படைப்புக் காலத்து அவ்வவ் வுயிர்களின் முன்னை வினைக்கு (பிராரப்த கன்மத்துக்கு)த் தக்கவாறு புல் முதல், தேவர் ஈறாகச் சொல்லப்பட்ட பிறவிகளுள் புகுத்திச் சிறிது சிறிதாக அறிவு விளக்கம் உண்டாகச் செய்கிறான். இவ்வாறு உயிர்கள் புல் முதல் பல் பிறவிகளில் பிறந்து, இருந்து, இறந்து உழன்றே இறுதியில் மானிடப் பிறவியினை யடைகின்றனவென்பதை,

"புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்ல சுரராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்ற இத்தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்து இளைத்தேன் எம்பெருமான்
மெய்யேயுன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்"

என்னும் மணிவாசகமே வலியுறுத்தா நிற்கும்.

இனி, இவ்வாறு உயிர் மானுடப் பிறவி யெடுக்கு முன் தாய் வயிற்றில் இருக்கும் காலத்து அனுபவிக்கும் இன்னல்களோ சொல்லொணாதன.

உயிர் ஆணவமலத்தில் மறைப்புண்டிருக்கும் நிலைக்கும், தாய் வயிற்றில் கருக் கொண்டிருக்கும் நிலைக்கும் சிறிதும் வேற்றுமை இல்லை.

மாதாவினிடத் துண்டான செம்பாலிலே (சுரோணிதத்திலே) பிதாவினிடத் துண்டாகிய வெண்பால் (சுக்கிலம்) பவளப்பையில் முத்தை வைத்தாற் போலப் படுகிற நாளில், உயிரானது பிராணவாயுவை வாகனமாகவும், மனதை வழியாகவும் கொண்டு முதல்வனுடைய ஆணையாலே சென்று வெண்பால் செம்பாலின் தலையிலே பதிகிறது. பிறகு கன்மத்துக் கீடாக மூன்றரைகோடி யுரோமத்துவாரமும், எழுபத்தீராயிர நாடியும், வாயுவிற் பிரதானமான தசவாயுவும், நவத்துவாரமும், எண்சாணுடம்பும், ஏழுதாதுவும், ஆறாதாரமும், ஐந்து பொறியும், நாலு கரணமும், மூன்று மண்டலமும், இரண்டு வினையுமெனப் பேர் பெற்று, இவற்றை யொன்றெனப் போர்த்த புறத்தோலுமாக உருவங் கொள்கிறது. இந்த உருவத்தையுடைய சீவனும் அன்னரசத்திற்குப் பிராரத்த மளவுந் தன்னுடைய உடலில் உந்திச் சக்கரத்தின் மேலே கிடந்து ஆறுமாத முதல் உந்தி நாளத்தாலே மாதா விடத்திலே அன்னரசமும் கொள்கிறது. அந்த அன்னரசத்தின் மிகுதியாலே சுழிமுனை நாடி யடைபட்டு இடையும் பிங்கலையுந் திறந்து பிராணவாயு புகுந்து மேனோக்கி நாசித் துவாரங்களாலே விட்ட வெழுத்தாலே நாளொன்றிற்கு இருபத்தோராயிரத்தறுநூறு சுவாச வுச்சாரணந் தோன்றி, முப்பத்திரண்டு நூறாயிரத்து நாற்பதினாயிரம் உருச் சென்றவாறே யுதாகன்மந் தொலைந்து, மாதாவினிடத்துண்டான பிராணவாயுவிலே முதல்வனுடைய கருணையாலே சத்தி யதிட்டித்துக் கொண்டு, இந்தச் சத்தி பலத்துடனே வாயுவானது பிரஞ்ஞையை பூமியிலே பதிக்க வேண்டி 'பிரஞ்ஞாபத்தியம்' என்னும் பெயர் பெற்று, இவனுடைய போதம் போல் இவனுடைய உடலும் கீழ்நோக்கி விழும்படி முழுமுதற்கடவுள் தன்னுடைய ஆற்றலாலே தலைகீழாகத் தள்ளி பூமியில் வரச் செய்கிறான். இவ்விதக் கடவுளின் கருணைத்திறத்தை யுணர்த்தற் கன்றே,

> "மூலையி லிருந்தாரை முற்றத்தே விட்டவர்
> சாலப் பெரியரென் றுஉந் தீபற,
> தலத்திற் றலைவரென் றுஉந் தீபற."

என்னும் அருமைத் திருவாக்கும் எழுந்தது. இங்ஙனம் மானிடப் பிறவி வாய்க்கப்பெற்ற உயிர்களே அறிவு முழுதும் நிரம்பப் பெறுகின்றன. ஏனெனில், கண் காது நா மூக்கு மெய் என்னும் ஐம்புலனும், அப் புலன்களால் கண்டு, கேட்டு, உண்டு, உயிர்த்து, உற்று அறியுந் தன்மையும் வாய்ந்ததோடு, இன்னது செய்தல் நன்மையானது, இன்னது செய்தல் தீமையானது என்று பகுத்தறியும் நெஞ்சம் முதலாகிய அந்தக்கரண நான்கும் வாய்ந்திருப்பதால் முழு அறிவும் விளங்கப் பெறுவதற்கு ஏதுவா யிருக்கின்றது.

மேலும் உயிர்களுக்கு இறைவன் செஞ்ஞாயிற்றினையும் வெள்ளிய நிலவினையும், எழில் மலையினையும், மணி கொழிக்கும் அருவியினையும், செழும் பொழிலினையும் அற்புதமாக அமைத்து இவ்வுலகப் பொருள்களி லெல்லாம் அறிவு நுழைந்து இன்புற்றுப் பேதைமையை நீக்கி மெல்ல மெல்ல அறிவு விளக்கமுறும்படி செய்கின்றான்.

பின்னர் உலகத்தில் தோன்றியது முதல் உண்டாகும் இடர்களிலெல்லாம் உயிர்கள் உழன்று அறிவு விளக்க முழுதுமெய்தி, உலகத்தோடு ஒட்ட ஒழுகித் தன்னை தோற்றுவித்தானும், தனக்கு வேண்டுவன உதவி மகிழுறச் செய்தானும் துன்ப விளைவின் மூலமாய் இன்பம் விளைவிப்பானும் ஆகிய ஒரு முதல்வன் உளன் என்னும் எண்ணமுண்டாகி, அவ்விதம் தோன்றாத் துணையாய் நின்று அருள்புரியும் அவனை வணங்குதல் இன்றியமையாத கடமையாமென்பதை உணரும்படி செய்கின்றான்.

இவ்வாறு இறைவனருளால் உண்டாகும் மெய்யுணர்வே உயிர்கள் அடைந்த பிறப்புறுதலுக்கு ஏதுவாகிற தென்பது ஒருதலை. மானுடப் பிறப்பின் பயன் உணர்வைப் பெறுதலாம். இம்மானுடப் பிறப்பாலன்றி உணர்வு வருதல் ஒருகாலுமில்லை.

இவ்விதம் உயிர்களை மேற்கூறியவண்ணம் சகச மலமாகிய ஆணவ மலத்தினின்றும் பிறப்பினுள் புகுத்தித் தன் திருவடியில் அணையும்படி யருளும் நிலையைத் தெளிய வுணர்த்துவான் வேண்டியே எந் தாயுமானச் செல்வரும்,

> "காரிட்ட ஆணவக் கருவறையி லறிவற்ற
> கண்ணிலாக் குழவியைப் போற்
> கட்டுண் டிருந்த வெமை வெளியில்விட்டு அல்லலாங்
> காப்பிட்டு அதற் கிசைந்த
> பேரிட்டு மெய்யென்று பேசுபாழ்ம் பொய்யுடல்
> பெலக்க விளையமுத மூட்டிப்
> பெரிய புவனத் தினிடை போக்குவ ரவுறுகின்ற
> பெரிய விளையாட்டு அமைத்திட்டு
> ஏரிட் டதன்சுருதி மொழிதப்பின் நமனைவிட்டு
> இடருற வுருக்கி யிடர்தீர்த்து
> இரவுபக லில்லாத பேரின்ப வீட்டினில்
> இசைந்து துயில் கொண்மி னென்று
> சீரிட்ட வுலகன்னை வடிவான எந்தையே."

என்று விளக்கி யருளினர்.

இங்ஙனம், இறைவனுடைய நோக்கம் உயிர்களாகிய நாம் பாசக் கட்டினின்றும் நீங்கி விடுதலைபெற்று இன்ப மனுபவிக்க வேண்டுமென்பதே யென்று அறிந்தோமாதலின், அம் முதல்வன் நோக்க மறிந்தே செய்தல் நம் கடமை என்பது அறியக்கிடக்கிறதல்லவா? உலக வழக்கிலும் தலைவனது இச்சையின் வண்ணம் செய்தலே உண்மைப் பணியாளன் கடமை யென்பது நாம் அறிந்த தொன்றன்றோ! உடையோனின் குறிப்பின்படி உடைமைப் பொருளாகிய நாம் நடத்தல் தலையாய கடமை என்பது இதனால் பெறப்படுதலின், அம் முன்னவனுடைய நோக்க மறிந்து ஒழுகி உய்தற்கு வாயிலாக இருப்பவர்கள் அவன் உண்மை யடியார்களும், அவர்களருளிய திருவாக்குகளுமே யாகும்.

உயிர்களாகிய நாம் கடவுளின் நோக்கமும், நாம் இம்மானுட பிறப்

பெடுத்ததின் நோக்கமும் இன்னதென அறிய வேண்டுமாயின் இறைவன் அருள் பெற்றுய்ந்த மெய்யடியார்களின் வாழ்க்கையில் அவர்கள் எவ்வாறு ஒழுகினார்கள் என்பதை உய்த்துணருதல் இன்றியமையாத தாகும். அவ்வாறு அவ் வாய்மையாளர்களின் வாழ்க்கையைப்பற்றித் துருவி யாராயின், அவர்கள் தங்கள் வாணாளில் அண்ட பகிரண்ட சராசரங்களைப் பயந்து காத்துஅழிக்கும் மூவர்கோனாகிய முதல்வனை ஓவாதுசிந்தித்து மனங்கசிந்து நெக்கு நெக்குருகுதலிலும் அவனை வாயாரப் புகழ்ந்து பரசுதலிலும், யாக்கையால் அவனுக்காம் பணிகளை விழைந்து செய்தலிலும் அவ்வெம் பெருமானின் மெய்யடியார்களைப் பேணுதலினும் கருத்தூன்றி நின்று, தம் ஒழுக லாறுகளைச் செவ்வனம் திருத்திக் கடைபிடித்து ஒழுகி இந் நற்செயல்களையும் நற்குணங்களையுமே விழுமிய அறப்பேறென்றும் தலையாய கடமையென்றும் மேற்கொண்டார்கள் என்பது செவ்விதின் விளங்கா நிற்கும்.

இனி, மெய்யடியார்கள் வாய்மைப் பொருளாகிய இறைவனை இறைஞ்சி வீடு பெற்றதோ டமையாது பின்வரும் நாமெல்லாம் உய்யும் பொருட்டு அச் செல்வர்கள் அறிந்த உண்மைகளை தேவாரம், திருவாசகம், திருமந்திரம், நாலாயிரப் பிரபந்தம் முதலிய அரு நூல்களாக அருளிச் செய்தனர். அத்திருவாக்குகளைக் கூர்ந்து பார்ப்போமானால் நாம் இம்மானுட யாக்கையைப் பெற்றதனா லாய பயனை யறிந்தவர்க ளாவோம்.

மானுடப் பிறவி யெடுத்த நாமெல்லாம் ஆண்டவனை வணங்குதலே சால்புடைத்தென்பதும், நம் ஒவ்வொரு உறுப்பும் கடவுளுக்கே பயன்படுத்த வேண்டும் என்பதும் இதனால் பெறப் படுகின்றதன்றோ! இதனை திருநாவுக்கரசு சுவாமிகள் தாம் அருளிய திருவங்கமாலையில், மானுடரின் ஒவ்வொரு உறுப்பும் இறைவனின் திருப்பணிக்கே பயன்படுதல் வேண்டுமென்பதைத் தெளிவாக விளக்கியருளினார்.

"கோளில் பொறியில் குணமிலவே யெண்குணத்தான், தாளை வணங்காத் தலை" என்னும் அமுதவாக்கும் இது பற்றியே எழுந்ததென்க.

கடவுளை யடைவதற்கு வாயிலாயிருக்கும் மானுடப் பிறவியை எடுத்த நாமெல்லாம் அதைத் தக்க வழியில் பயன்படுத்தி யொழுகுதலன்றோ அறிவுடைமை?

பெறுதற்கரிய இம்மானுடப் பிறவியை நல்வழியில் பயன்படுத்தி ஆண்டவனை யடைவதை விடுத்து, தீய வழிகளில் புகுந்து வீணேயிருந்து நரகத் துன்பங்களில் வீழ உண்மையறிந்த எவ்வுயிரேனும ஒருப்படுமா? இம் மானுடப் பிறவி தவறினால் உயிர்களாகிய நம்மை எப்பிறவியில் நம் வினைகள் விடுமோ? யாரறிவார்! கடவுளருள் பெற்ற உண்மை யடியார்களாகிய தாயுமானச் செல்வரும், தாண்டகச் சதுரராகிய திருநாவுக்கரசரும்,

"இப்பிறவி தப்பினால் எப்பிறவி வாய்க்குமோ
யாது வருமோ அறிகிலேன்" என்றும்

"துறக்கப்படாத வுடலைத் துறந்து வெந்தூதுவ ரோடு
இறப்பன் இறந்தால் இருவிசும்பு ஏறுவன் ஏறிவந்து
பிறப்பன் பிறந்தால் பிறையணி வார்சடைப் பிஞ்ஞகன்பேர்
மறப்பன் கொலோ வென்றுஎன் உள்ளம் மறுகிடுமே"

என்றும் முறையே இம்மானுடப் பிறவியின் விழுமிய பெருமையை நமக்கு அறிவுறுத்துவான் வேண்டி தெளிய விளக்கியருளினர்.

இதுகாறும் கூறியவற்றால் கடவுள் படைப்புக் குட்பட்ட நால்வகைத் தோற்றத்து எழுவகைப் பிறப்பினுள் மானுடப் பிறவியே சிறந்ததென்பதும் ஆணவமலத்தில் கட்டுண்டிருந்த உயிர்களைக் கருணையங் கடவுள் அம்மலம் பரிபாகமாதற் பொருட்டுப் புல் முதல் பல் பிறவிகளில் புகுத்தியருளினானென்பதும், இவ்விதம் உயிர் பல் பிறவிகளிலும் பிறந்திருந்திறந்து உழன்றே மானுடப் பிறவியை யடைகின்றதென்பதும், இப்பெறுதற்கரிய பிறவியை உயிர்களுக்குக் கொடுத்த இறைவனது நோக்கமும், அப்பிறவி யெடுத்ததின் பயனும் அம்முழு முதற் கடவுளைச் சிந்தித்து வாழ்த்தி வணங்குதலேயாமென்பதும், இவ்வுண்மைகளை அவ்விறைவனின் உண்மை யடியார்களின் சரிதங்களும், அவர்கள் நம்பொருட்டு அருளிய அருள் நூல்களும் வாயில்களாக இருந்து அறிவிக்கின்றன என்பதும், ஆதலால் மானுடப் பிறவி எடுத்த ஒவ்வொரு உயிரும் மாயையின் மாய்கைக்குள் மயங்கி வாணாளை வீணாக்காது தன்னைச் சொல்லொணாத் துன்பங்களி னின்றும் மீட்டு அருளைச் செய்த முழுமுதற் பொருளெதுவோ அக்கடவுளை மனமொழி மெய்களால் நினைந்து சிந்தித்து வாழ்த்தி வணங்கி இறைஞ்சி அறியாமையினை நீக்கி இன்பப்பேறெய்தலே உற்ற யாக்கையின் உறுபயன் என்பதும் அறிந்தோம்.

வியாபாரிகளே!

சினிமா பட முதலாளிகளே!

நீங்கள்

"ஆனந்தபோதினி"யில்
விளம்பரஞ் செய்ததுண்டா?

இல்லையானால்,

இன்றே ஒரு முறை முயற்சி செய்து
பாருங்கள்.

தமிழ்நாடெங்கணும், தமிழர்கள் வசிக்கும் மலேயா, சிங்கப்பூர், கோலாலம்பூர், தென்னாப்பிரிக்கா, பர்மா முதலிய இடங்களிலும் பல்லாயிரக் கணக்காகப் பரவியிருக்கும் "ஆனந்தபோதினி"யில் விளம்பரஞ் செய்தால், உங்கள் வியாபாரங்களில் பெருத்த லாபம் கிடைக்கும். ஒரு முறை பரீக்ஷை செய்து பார்த்தால் உண்மை விளங்கும். விவரங்களுக்கு எழுதவும்.

மானேஜர், ஆனந்தபோதினி ஆபீஸ்,
:: :: சௌகார்பேட்டை, சென்னை. :: ::

சுதந்திர வாழ்க்கையே சுக வாழ்க்கை

(சித்தூர் பண்டித-பூ. ஸ்ரீநிவாசன்.)

ஒரு பெரிய காடு. அதில் பல மிருகங்கள். அவைகளுக்குள் ஒரு நரி. அக்காட்டிற்கருகில் ஒரு பெரிய ஊர். அவ்வூருக்குப் போகும் வழி அக்காட்டிற் கருகிலிருந்தது. அந்த நரி வழியோரத்தில் இருந்த ஒரு மரத்தடியில் உட்கார்ந்திருந்தது. அழ முடியாத துக்கம். ஒரு முறை அழுததென்றுகூட சொல்லலாம். என்ன கஷ்டமோ பாவம்! அவ்வழியாக ஒரு நாய் வெகு அவசரமாக போய்க் கொண்டிருந்தது. நரி அதைப் பார்த்துவிட்டது. 'அண்ணா! அண்ணா! நாயண்ணா!' என்று மெலிந்த குரலில் கூப்பிட்டது. நாய் சிறிது நின்று சுற்றுமுற்றும் பார்த்தது. நரி மறுபடியும் 'நாயண்ணா! இதோ இப்படிப்பார். இங்கே இருக்கிறேனே. தெரியவில்லையா ?' என்றது. சப்தம் வந்த திசையைப் பார்த்தபோது நரியைப் பார்த்தது நாய்.

'என்ன தம்பி! யாரைக் கூப்பிடுகிறாய் ? என்னையா ? ஏன் ? என்ன விசேஷம் ?' என்று நாய் நின்ற விடத்திலிருந்தே கம்பீரமான குரலுடன் கேட்டது.

நரி:—ஆமண்ணா! உங்களைத்தா னழைக்கிறேன். என்னால் நடக்க முடியவில்லை. அதனாலே உங்களை யழைத்தேன். இல்லாவிட்டால் உங்களண்டை நானே ஓடிவந்திருப்பேன். ஒரேயொரு வார்த்தை. இப்படி கொஞ்சம் தயவு பண்ணவேண்டும்.

நாய் அதனருகில் சென்றது. நரி, நாய்க்கு நமஸ்காரஞ் செய்து அண்ணா! இப்படி கொஞ்சம் உட்காரவேண்டுமே.

நாய்:—இல்லெ. இப்போது நேரமில்லை. ரொம்ப அவசரம். சொல்ல வேண்டியதைச் சீக்கிரம் சொல்லு தம்பி!

நரி:—நாயண்ணா! என் உடம்பைப் பார்த்தாயா ? துரும்பு துரும்பாய் போய்விட்டது. வேளைக்குச் சரியான சாப்பாடு கிடைப்பதில்லை. மூன்று நாளா பட்டினி. பசி வயிற்றைப் பிடுங்குது. உங்கள் நிலையைப் பார்த்தால் உங்களுக்கு நல்ல சாப்பாடு ஏராளமாகக் கிடைக்கும் போலிருக்குது. உங்களிடத்திற்கு என்னையும் அழைச்சிண்டு போங்களேன். ரொம்ப புண்ணியம்.

நாய்:—அப்படியா சங்கதி ? நான் ஒரு பெரிய பணக்காரப் பிரபுவினிடம் இருக்கிறேன்.

நரி:—அந்த பிரபுதான் உங்களைப் போஷிக்கிறாரா ?

நாய்:—ஆமாம். இங்கே பாரு. சாப்பாடென்றால் என்ன சாப்பாடு அது.

நரி:—சொல்லவா வேண்டும். உடம்பைப் பார்க்கும்போதே தெரிகிறதே. நல்ல கொழுத்த சாப்பாடு. ஆமாம். நீங்கள் அங்கே என்னவேலை செய்யவேண்டும் ?

நாய்:—வேலை ஏது வெட்டி ஏது ? அதெல்லாம் ஒன்றும் கிடையாது. சாப்பிடுவது தூங்குவது இதுதான் வேலை.

நரி:—அப்பா நாயண்ணா! உங்கள் அதிர்ஷ்டமே அதிர்ஷ்டம்! தயவு செய்து அவ்விடத்திற்கு என்னையும் அழைத்துப் போங்கள். அநியாயமா பட்டினி கிடந்து சாகிறேனே இங்கே.

நாய்:—ஐயோ பாவம்! சரி, தம்பி; என்னோடு வந்துவிடு. வா போகலாம்.

நரி வெகு சந்தோஷமாய் தன் வீட்டுக்கு ஓடி ஒரு சிறு மூட்டையைத் தூக்கித் தலைமேல் வைத்துக்கொண்டு மறுபடியும் நாயிடம்வந்து 'அண்ணா! வாங்கோ போகலாம்' என்றது.

நாய்:—ஏது தம்பி! மூட்டை முடிச்சுகளோடு கிளம்பிவிட்டாய் போலிருக்கிறதே.

நரி:—உம். இனி இங்கே என்ன வேலை எனக்கு. அங்கேயே காலத்தைக் கழித்துவிட உத்தேசம். புறப்படுவோமே.

இரண்டும் சந்தோஷமாகப் பேசிக்கொண்டே சென்றன. ஒரு பர்லாங்கு தூரமிருக்கும். நரி நாயின் உடலைப் பார்த்துக்கொண்டும், நாமும் கொஞ்ச நாளைக்குள் இப்படியே ஆய் விடுவோமென்று எண்ணமிட்டுக் கொண்டும் சென்றது. அப்போது நரி நாயின் கழுத்தில் தோல்பட்டை ஒன்றிருக்கக் கண்டது. உடனே ஆச்சரியத்தோடு,

நரி:—என்ன அண்ணா! இதென்ன கழுத்தில் ஏதோ தொங்குகிறதே!

நாய்:—அது கழுத்துப்பட்டை.

நரி:—அதை யார் கட்டினார்கள் ?

நாய்:—என் எஜமான் கட்டினார்.

நரி:—எதற்காக கட்டினார்கள் ? அழகுக்காகவா ?

நாய்:—இதோ பாரு. இங்கே வளையம் ஒன்றிருக்கிறதே. அதில் ஒரு சங்கிலியை மாட்டி என்னைக் கட்டி வைப்பார்கள். அழகாகூட இருக்கிறதல்லவா ?

நரி:—அழகு இருக்கட்டும். எப்போதும் கட்டியே வைப்பார்களா ?

நாய்:—நரித்தம்பி! அதெல்லாம் ஏன் கேட்கிறாய் ? நீ வருகிறாயா ? இல்லையா ? எனக்கு ரொம்போ அவசரமென்று அப்போதே சொன்னேனே.

நரி:—கோபித்துக்கொள்ள வேண்டா மண்ணா! தெரியாமெதானே

கேட்கிறேன். பட்டண வாசத்துக்கு போனா இதெல்லாம் தெரியாமல் இருக்கலாமா ? அதற்காகத்தான் கேட்கிறேன்.

நாய்:—ஓ! அப்படியானால் சொல்லுகிறேன். ராக்காலங்களில் மாத்திரம் அவிழ்த்து விடுவார்கள்.

நரி:—பகலெல்லாம் என்ன பண்ணுவே.

நாய்:—சாப்பிட்டுவிட்டு ஹாயா தூங்குவேன்.

நரி:—ஒண்ணுக்கு ரெண்டுக்கு வந்துட்டா என்ன பண்ணுவே ?

நாய்:—காலையிலும் மாலையிலும் உலாத்துவதற்கு ஒரு ஆள் அழைச்சிண்டு போவான். அப்போது அந்த வேலையெல்லாம் முடித்துக்கொள்ள வேண்டும்.

நரி:—இன்னும் ஒரே கேள்வி. ராத்திரியில் அவிழ்த்து விடுகிறார்களோ. அப்போது உங்களிஷ்டப்படி வெளியிலே போகலாமா ?

நாய்:—கூடாது கூடாது. ராத்திரியிலேதான் என் வேலை யெல்லாம். திருடன் கிருடன் வராதபடி பார்த்துக் கொள்ளவேண்டும். வெளியில் எங்கும் போக முடியாது. கதவெல்லாம் மூடி விடுவார்கள்.

நரி:—அண்ணா! ரொம்ப நமஸ்காரம். போய் வாருங்கள்; நான் இங்கேயே நிற்கிறேன்.

நாய்:—என்ன தம்பி! என்னோடே வர வில்லையா ?

நரி:—உங்களோடே வர எனக்குப் பிரியமில்லெ. போய்வாங்கொ (என்று சொல்லி மூட்டையைத் தலைமேல் தூக்கிவைத்துக் கொண்டது.)

நாய்:—என்ன சங்கதி! இதற்குள் ஏன் உன் மனம் இப்படி மாறி விட்டது ?

நரி:—அண்ணா! உங்களுக்கு நல்ல சாப்பாடு கெடெச்சாலும் உங்கள் வாழ்க்கை நல்ல வாழ்க்கையல்ல. அந்த வாழ்க்கை எனக்கு வேண்டாம்.

நாய்:—அட பைத்தியக்காரா! என் வாழ்க்கை ராஜவாழ்க்கை யல்லவா ? இங்கே வயிற்றுக்கில்லாமல் கஷ்டப்படுவது நல்ல வாழ்க்கையா ?

நரி:—எவ்வளவு கஷ்டப்பட்டாலும் சரி; சாவதா யிருந்தாலும் சரி. சுதந்திரமாக இருக்கவேண்டும். சுதந்திர வாழ்க்கையே சுகவாழ்க்கை. ராஜவாழ்க்கை யாயினும் அடிமை வாழ்க்கை வேண்டாம்—என்று சொல்லிக்கொண்டே காட்டிற்குள் ஓடி மறைந்தது. நாய் திகைப்புக்கொண்டு அதைப் பார்த்தவண்ணமாகச் சிறிதுநேரம் நின்று பின் தன் வழியே போயிற்று.

புலால் உணவு அவசியமா?

(ஈ. வி. மாக்காலம் பி. எச். டி.)

ஆகார நியதிக்கும் ஆரோக்கியத்திற்குமுள்ள சம்பந்தத்தை ஆராய்ச்சி செய்பவர்களுடைய கவனத்தை ஈர்த்திருக்கும் பல பிரச்னைகளுள், உணவுத் திட்டத்தில் இறைச்சியைச் சேர்த்துக் கொள்ளுதல் அவசியமா அல்லவா என்னும் பிரச்னை ஒன்று. இக்கேள்வியைக் குறித்து சாதக பாதகமாக நூற்றுக்கணக்கான புத்தகங்கள் எழுதப்பட்டுள்ளன. இந்த வாதானுவாதத்தில் மிகப் பெரும் பகுதி தற்கால உணவுப் பொருள் ஆராய்ச்சிகளுக்கு முந்திச் செய்யப்பட்டது. அந்தக் காலத்திலேயே, இறைச்சியுணவு இல்லாமலே முதல்தரமான தேகாரோக்கியம் சாத்தியப்படுமென்று நிரூபணமாயிருந்தது. எனினும் இது விஷயம் குறித்து எப்பொழுதுமே அபிப்பிராயபேதம் இருந்திருக்கிறது.

புத்த சந்நியாசிகளும் டிராப்பிஸ்ட் சந்நியாசிகளும் வெகு காலமாக இறைச்சியற்ற உணவுத் திட்டத்தைக் கைக்கொண்டு வந்திருக்கிறார்கள். அவர்களிற் பெரும்பாலோர் நீண்ட ஆயுளையும் ஆரோக்கியத்தையும் மன அமைதியையும் அனுபவித்திருக்கிறார்கள் என்பதை எவரும் மறுக்கவியலாது. புத்த சந்நியாசிகள், பொதுவில், பால்கூடக் குடிப்பதில்லை. டிராப்பிஸ்ட் சந்நியாசிகள் குடிப்பதுண்டு. மரவகை யுணவுகளையே உண்ணுபவர்களாகிய வங்காளிகளைப் போன்ற ஜாதியார் மட்டான தேகக்கட்டு உடைத்தாயிருப்பதற்குக் காரணம் அவர்கள் இறைச்சி புசிக்காததே என்று முன்னே சிலர் விவாதித்து வந்தார்கள். ஆகாரபதார்த்தங்களின் குண பாகங்களைக் குறித்து முன்னைக் காட்டிலும் அதிகமான அறிவாராய்ச்சி இப்பொழுது ஏற்பட்டிருக்கிறபடியால், மனித தேகத்திற்கு இறைச்சியுணவு அவசியமா அல்லவா என்னும் கேள்வி குறித்து நாம் இப்பொழுது சாஸ்திரோக்தமாக முடிவு செய்யக்கூடும்.

சில ஜாதி மிருகங்கள் மாமிசத்தையே உண்டு வாழ்கின்றன. சிங்கம், புலி, ஓநாய் முதலிய மிருகங்கள் மரவகையுணவை உண்ணாவிட்டாலும், பெருத்த உருவையும் வலுவையும் அடைகின்றன. இதற்கு மாறாக, எருது, காட்டெருமை, மான் முதலிய மிருகங்கள் தலைமுறை தலைமுறையாக சாக பக்ஷணத்தையே கைக்கொண்டிருக்கின்றன. இவைகள் எவ்விதத்திலும் மாமிச பக்ஷணிகளைவிட மட்டான உடற்கட்டு உடையவைகளல்ல. இவைகளிற் பல, சாதாரணமாக, மாமிச பக்ஷணிகளைவிட நீண்டகாலம் வாழ்வன. மாமிசம் புசிக்கும் மிருகங்களுள் ஒன்றாவது சாக பக்ஷணியாகிய யானையைப் போல் அவ்வளவு நீண்டகாலம் வாழ்வது கிடையாது.

இந்த மிருகங்களுடைய குணாகுணங்கள் அவற்றின் ஆகாரத்தைப் பொறுத்ததாகவில்லை யென்று தோன்றுகிறது. மாமிச பக்ஷணிகளாகிய மிருகங்களைப்போலவே, சாக பக்ஷணிகளாகிய யானை, காளை முதலிய மிருகங்களும் போர்க்குணம் படைத்தவை.

இந்த எடுத்துக் காட்டுகள் சில அனுபவ உண்மைகளை விளக்குகின்றன. ஆனால் மிருகங்களுடைய ஜீரணக் குழாய்களுக்கும் மனிதனுடைய ஜீரணக் குழாய்களுக்கும் நெடுவாசி வித்தியாசம் இருக்கிறபடியால், மிருகங்களுடைய பழக்கங்களையே நாம் பிரமாணமாகக் கொண்டு விடுதல் கூடாது. மனிதருடைய உணவு சம்பந்தமாய் அலாதியாகப் பெருத்த ஆராய்ச்சி செய்யப்பட்டிருக்கிறது. அன்றி, சில நபர்களுடைய அனுபவமும் இருக்கிறது. இவைகளைக் கொண்டுதான் நாம் மனிதனுக்கு ஏற்ற ஆகாரம் எது, ஏற்காதது எது என நிர்ணயித்தல் தகுதி. இந்த ஆராய்ச்சியறிவும் அனுபவமும் மனிதன் இறைச்சியின்றித் தன் தேகாரோக்கியத்தைச் சிறந்த முறையில் காத்துக்கொள்ள இயலுமென்று சந்தேகமறக் காட்டுகின்றன.

ரசாயன சாஸ்திரிகள் மனிதனுக்கு எது போதிய உணவாகுமென்பது குறித்து இக்காலத்தில் செய்துள்ள ஆராய்ச்சி முடிவுகள் மிகவும் தெளிவாக இருக்கின்றன. மனிதனுக்கு வேண்டிய போஷணை குணங்களை, முன்னே போல, புரதம் (Protein), கரிநீரயிகள் (Carbohydrates), கொழுப்பு (Fats), சாம்பல் (Ash) என்று பரும்படியாகச் சொல்லாமல், இப்பொழுது ஒவ்வொன்றையும் வகைப்படுத்தி, மனிதனுடைய ஆகாரத்திலே ஏறக்குறைய முப்பது ரசாயனப் பொருட்கள் இருத்தல்வேண்டுமென்று சாஸ்திரிகள் சொல்லுகிறார்கள். மனிதனுடைய ஆகாரத்தைப் பல நுணுக்கமான ரசாயனப் பொருட்கள் கலந்த ஒரு கலவை என்னலாம். இந்த ரசாயனப் பொருட்கள் அத்தனையும் தக்க அளவில் கிடைக்கும்பொழுது, நல்லாரோக்கியம் ஏற்படுகிறது.

மிருக ஜாதிகளிடத்திலும் தாவர ஜாதிகளிடத்திலும் பல வகையான புரதங்கள் இருக்கின்றன. இந்தப் புரதந்தான் மனித தேகத்திற்கு மூலாதாரமான வஸ்து. முட்டையிலுள்ள வெள்ளைக் கரு, ஊன்பசை (Gelatin) பால் புளித்து விடும்பொழுது அதினின்று பிரியும் கேஸீன் (Casein) முதலியவை புரத வகைகளுள் சில. ஒவ்வொரு செடிக்கும் அததற்குரிய புரதம் உண்டு. அப்படி ஒவ்வொரு ஜாதி மிருகத்திற்கும் அததற்குரிய புரதம் உண்டு. ஒரு ஜாதி செடியிலுள்ள புரதத்தை இன்னொரு ஜாதி செடியிலோ, ஒரு ஜாதி மிருகத்திலுள்ள புரததத்தை இன்னொரு ஜாதி மிருகத்திலோ காண முடியாது. நாம் உண்ணும் ஆகார பதார்த்தங்களிலுள்ள புரதங்களெல்லாம் நமது உடம்பிற்கு அந்நிய வஸ்துக்களாகிய புரதங்கள். நமது தசை நார்களும் உடம்புகளும் வளர்வதற்கும், பழுது பார்க்கப்படுவதற்கும் ஆன புரதமாக மாறவேண்டுமானால், அதாவது, அவை நமது உடம்பிலே சேரவேண்டுமானால், அவை நமது உடம்பிலுள்ள புரதத்திற்கு ஒப்பாக மாறவேண்டும். ஜீரணத்தின் மூலமாகவே அவை இந்த மாறுதலை அடைகின்றன.

நாம் உட்கொள்ளும் புரதங்களெல்லாம் உணவுக் குழாயிலே அமினோ ஆஸிடுகள் (Amino Acids) என்று அழைக்கப்பட்ட இருபத்திரண்டு தனிப் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. அவைகள் புரதங்களிலே ஒரு சங்கிலி தொடர்போல அமைந்திருக்கின்றன. அவை வெவ்வேறு அளவாய் அமைந்திருக்கும். சங்கிலியிலுள்ள வளையங்களை வெவ்வேறாகப் பிரிப்பதை ஒக்கும் ஜீரணத் தொழில். இப்படிப் பிரிக்கப்பட்ட அமினோ ஆஸிட்டுகள்தான் இரத்தத்தில் உறிஞ்சப்படக்கூடும். இரத்தத்திலிருந்து தசைநார்கள், கல்லீரல், சிறுநீர் பிரித்தி, மூளை முதலிய ஜீவ உறுப்புகள் தங்கள் தங்களுக்கு வேண்டிய எண்ணிக்கை அமினோ ஆஸிட்டுகளைப் பொறுக்கியெடுத்து, மனித திசுக்களுக்குப் பொருத்தமான புரதங்களாக அமைத்துக்கொள்ளுகின்றன.

சில புரதங்கள், முக்கியமாக தானியங்களிலுள்ள புரதங்கள் நல்ல தரமானவையல்ல; ஏனெனில் அவை ஜீரணிக்கப் பெறும்பொழுது, பல வகையான அமினோ ஆஸிட்டுகளும் தக்க அளவில் கிடைப்பதில்லை. ஆனால் தானியங்களிலுள்ள புரதங்களோடு கீரைகளிலுள்ள புரதத்தையும், இன்னுங் கொஞ்சம் குறைந்த அளவு, கிழங்குகளிலுள்ள புரதத்தையும் சேர்த்துச் சாப்பிட்டால், அவற்றினுடைய தரம் உயரும். தானியப் புரதங்களுடன் சேர்த்துச் சாப்பிடுவதற்கு கீரைப் புரதங்கள் நல்லவை.

கீரைகளில் உள்ள புரதங்களைக் காட்டிலும் பாலிலும் முட்டையிலும் உள்ள புரதங்கள் மிகச் சிறந்தவை. இவற்றிலுள்ள புரதங்கள் தானியங்களில் குறைந்துள்ள புரதங்களை மிகுதியாகக் கொடுத்து பூர்த்தி செய்கின்றன. எனவே, மரவகை யுணவுகளோடு பாலையும் முட்டையையும் சேர்த்துச் சாப்பிடவேண்டும். இறைச்சியற்ற உணவுத் திட்டத்தைக் கைக்கொள்ள விரும்புகிற எவரும், தங்கள் திட்டத்திலே பாலையும் முட்டையையும் சேர்த்துக்கொள்ளவேண்டும்.

பொருத்தமான உணவுத் திட்டம் எதிலும் குறைந்த பக்ஷம் பன்னிரண்டு லோகச் சத்துக்களாவது இருக்கவேண்டுமென்று இப்பொழுது கண்டறியப்பட்டிருக்கிறது. அவையாவன: சோடியம், பொட்டாஸியம், கால்ஸியம், மாக்னீஸியம், குளோரைன், ஐயோடின், பாஸ்பரஸ், கந்தகம், இரும்பு, செம்பு, மாங்கனீஸ், நாகம் (Zinc). ஒருவேளை இன்னும் சில லோகச் சத்துக்களும் அவசியமாக இருக்கலாம். இந்தச் சத்துக்கள் யாவும் செழுமையாக காய்கறி வகைகளில் இருக்கின்றன. கால்ஸியம் ஒன்றுதான் மரவகை உணவுப் பொருட்களில் குறைவாக இருப்பது. எலும்பு வளர்ச்சிக்கு இந்தக் கால்ஸியம் அத்தியாவசியமானது. செடிகளினுடைய இலைகளைத் தவிர மற்றெல்லா மரவகைப் பொருட்களிலும் கால்ஸியம் குறைவாகவே இருக்கிறது. ஆனால் லெற்றூஸ், காபேஜ், கேல், பிளுஷ், டர்னிப், பீட்டாப்ள் முதலிய கீரைத் தினுசுகளில் கால்ஸியம் ஏதேஸ்டமாக இருக்கிறது. இவைகளை நாம் இப்போதைக் காட்டிலும் அதிகமாகச் சாப்பிடவேண்டும்.

தானியங்கள், மொச்சை, அவரை, தினை முதலியவற்றிலே கால்ஸியமும் சில உயிர்ச் சத்துக்களும் குறைவாக இருக்கின்றனவென்று சொல்லுகிறபடியாலே, அவற்றை உபயோகிப்பதை நாம் கண்டிக்கிறோம் என்று அர்த்தமில்லை. அவற்றில் குறைவாகவுள்ள சத்துக்கள் எந்தெந்த உணவுப் பொருட்களில் காணப்படுகின்றனவோ அந்த உணவுப் பொருட்களையும் சேர்த்து சாப்பிடவேண்டுமென்கிறோம்.

உயிர்ச் சத்துக்கள் விஷயத்தில், இறைச்சியற்ற உணவுத் திட்டத்தைக் கைக்கொள்ளுகிறவர்களுக்கு எவ்வித கஷ்டமும் இல்லை. ஏ. உயிர்ச்சத்து

காரட்டு, டர்னிப், ஸ்குவாஷ், மொச்சை முதலியவற்றிலும் பச்சை அல்லது மஞ்சள் நிறமான எல்லா காய்கறிகளிலும் இருக்கின்றது. பீ. உயிர்ச்சத்து எல்லாத் தானியங்களிலும் கிழங்குகளிலும் கீரைகளிலும் இருக்கிறது. வீ. உயிர்ச்சத்து எல்லாப் புதுப் பழங்களிலும் காய்கறிகளிலும் பாலிலும் முட்டைகளிலும் இருக்கிறது. டீ. உயிர்ச்சத்து முட்டையின் மஞ்சட் கருவில் இருக்கிறது. அப்படியே ஈ. உயிர்ச்சத்து பல காய்கறிகளிலும் எப். உயிர்ச்சத்து பல எண்ணெய்களிலும் ஜீ. உயிர்ச்சத்து கீரைகளிலும் பாலிலும் முட்டையிலும் காணப்படுகிறது.

(நல்வழி.)

உலக வாழ்வின் தத்துவம்

(பம்பாய்-T R. இராஜகோபால்.)

இவ்வுலகமானது உத்கிருஷ்டமானவைகளும் கோரமானவைகளும் நிரம்பப் பெற்றது. நம்மை எதிர்த்து நிற்கின்றது. "மித்தை, மாயை, அபாவம்" என்று கூறி அதை இகழ்ந்து தள்ளுவதில் விவேகமும் பயனுமில்லை. விசித்திரமான இவ்வுலகில் சொற்ப ஆயுளும் அற்ப பலமும் பெற்றுள்ள மானுடர்கள் செய்யக் கூடியதும் செய்ய வேண்டியதும் என்ன? திகைக்கச் செய்யும் பயங்கர நிகழ்ச்சிகளும், திகிலுறச் செய்யும் விலங்கினங்களும் ஓர் பக்கத்திலுமாய், புலன்களைக் கவர்ந்து பிரமிக்கச் செய்யும் எழிற் பொருட்களும், இனித்து ஆனந்திப்பதற்கான அநுபவங்களும் மற்றோர் பக்கத்திலுமாய்க் கூடி விளங்கப் பெற்ற பிரபஞ்சத்தில் தேக அசக்தத்தினால் அவமே உட்கார்ந்து பெருமூச் செறிந்து மாய்தலோ, அல்லது மனோ சக்தியினால் அவைகளை எதிர்த்து, முன்னவைகளை வேருடன் பிடுங்கி அழித்தற்கியலாவிடினும், அக்கொடூரங்களை மட்டுப்படுத்திப் பின்னவைகளைப் பரப்புதற்கான ஆர்வமுடைத்தாய்ப் பற்பல உபாயங்களை ஆராய்ந்து, பலதிறக் கர்மங்களில் ஈடுபட்டு உழைத்தலோ, இவற்றுள் மதிக்கத் தக்கது எது? துக்கமும் பச்சாத்தாபமும் கலந்துள்ள வாழ்க்கையை அவைகளுக்குக் காரணமான அல்லல்களினின்று விடுவிப்பதற்கான மார்க்கம் யாது? பிரகிருதிப் போக்கை அங்கீகரித்து தக்கன செய்து உயர்வோமோ, அல்லது மனக் கோட்டைகளை எழுப்பி அவைகளுட் பதுங்கி உறங்குவோமோ? அல்லது, ஆற்று நீரோட்டத்தை யொட்டி மிதந்தோடும் துரும்புபோல், பிரகிருதி சலனத்

தின்படிக்கு நிச்சிந்தனையுடன் ஓடியாடி மறைவோமோ? அறிந்தோ அல்லது அறியாமலோ, இஷ்டத்துடனோ அல்லவோ, மாந்தரிற் பெரும்பாலார் உலகாதிகளால் ஆட்டப்பட்டுக் காலச் சுழற்சியில் மறைந்து வருகிறார்கள். இயற்கையின் போக்குகளுக்கு அவ்வாறு அடிமைகள் போல் கீழ்ப்படிந்து வாழ்தலோ மானுடத் தன்மை?

உலக வாழ்க்கையானது "மண்ணினின்று உண்டாகி மண்மீது அலைந்து திரிந்து, இறுதியில் அம்மண்ணுடனே கலந்து அழிவதான புல்லிய தோற்ற"முமன்று; "காய்ந்த புல், வாடிய மலர், சலிக்கும் நிழல், ஓடும் மேகம், அலையும் ஆவி, பறக்கும் தூகள், திடீரென தோன்றிச் சடுதியில் மறையும் கனவு" போன்றது மன்று; இன்னமும், துன்பியல் நாடகமுமன்று; களிக்கூத்து மன்று; பரிகசித்து உதறித்தள்ளத் தக்க இழி நிலையு மன்று. வாழ்க்கையாகிய வனத்தில் கூரிய முட்களும் கற்களும், விஷப் பூச்சிகளும் ஜந்துக்களும், குரூரப் பிராணிகளுமுள. எனினும், அதே வனத்தில், மனோகர மலர்களும், இனிய செடிகளும், நிழலளித்துக் குளிர்ப்பிக்கும் பெருமரங்களும், தாகத்தைத் தீர்க்கும் நீரருவிகளும், பசியையாற்றி ரமிக்கச் செய்யும் காய்கனி வர்க்கங்களும் ஏராளமாக வுள்ளன. இவ்விஷயங்களை முழுமனத்துடன் ஒப்பி அவைகளின் ஏற்றத் தாழ்வுகளையும் பயனையும் செம்மையாக ஓர்ந்துணர்ந்தறிந்து, வாழ்க்கையைச் செலுத்த வேண்டிய நெறியைப் பற்றித் தெளிவித்தலேதான் வித்தகத்தின் மெய் நோக்கமாகும்.

இன்னமும், ஜடம் ஜீவன், தேகம் மனம், உணர்ச்சி புத்தி, விவேகம் பாவனை, ஞானம் அஞ்ஞானம், அறம் மறம் எனப்பட்ட இருதிறப் பண்புகளின் சேர்க்கையான வாழ்க்கையைச் சிறிது காலம் நடத்திப் பின் மாய்வோமல்லோம்! உலகாதிகளையும், விஷயப் போக்குகளையும், அநுபவ நிகழ்ச்சிகளையும் அறிதற்காகப் பிரபஞ்சாதிகளை நாம் அவ்வாறு கூறுபடுத்தி ஆராய்கின்றோமேயல்லாது, உண்மையில், வெவ்வேறாக அவைகள் பிரிந்து நிற்பனவு மன்று, பிரிக்கப் படுவனவு மன்று. இது போலவே காரணமும் காரியமும், தொழிலும் பலனுமாம். இவ்வுண்மையை அறியாமையினால், குழப்பங்களையும், காட்சிகளையும், தர்க்கங்களையும் நாம் பெருக்கி, பிரகிருதி, விகிருதி, மதம் தத்வம், விஞ்ஞானம், பராஞானம், ஸ்தூலம் சூக்ஷ்மம், உணர்வு அறிவு எனவும், த்வைதம், அத்வைதம், லோகாயதம், யோகாசாரம், அகிர்முகம் பகிர்முகம் எனவும் பிதற்றிக்கொண்டு, சிற்சில சமயங்களில், உக்கிர வாதங்களும் குரூரச் சண்டைகளு மிட்டு வருகின்றோம்! சரீரவுறுப்புக்கள் பலவும் இணங்கித் தொழில் புரிவதினாற்றான் தேகாரோக்கியம் உண்டாகி நிலைத்துத் தேகியைச் சந்தோஷித்திருக்கச் செய்கின்றன. பல்வேறு அவயவங்களும் இசைந்து இயங்கப்பெற்ற உருவமே யாக்கையாவது. ஒவ்வொரு உறுப்புமாத்திரம் தேகமாகாது. பொது நன்மைக்காகத் தேகமும் உறுப்புகளும் உறுப்புகளின் தொழில்களும் பொறிகளும் மனமும் ஒன்றோடொன்று சம்பந்தித்து, ஒன்றையொன்று பாதித்து இயங்கி வளர்தல்போல், பொதுச் சிறப்பிற்காகச் சமூகமும், அங்கமும் அதாவது ஒவ்வொரு மனிதனும், தொழில்களும் தொழிற்பிரிவுகளும் ஒன்றையொன்று பாதித்து இயங்கி மாறி வருகின்றன.

நோய்கொண்ட உறுப்பைச் செம்மையாகப் பரீக்ஷித்தறியாமல் மேலோட்டமாகப் பார்த்துத் தற்கால சாந்தியாக ஏதோ மருந்து ஒன்றைக்

கொடுக்கும் பொழுதும், அல்லது தேகமுழுதும் நோயுற்றுக் கெட்டிருக்கையில் ஒரே அவயவம் அல்லது பாகத்தின்மீது கவனத்தைச் செலுத்திச் சிகிச்சை செய்யும்பொழுதும், அல்லது ஓர் உறுப்பைமாத்திரம் பலப்படுத்தி அதிகவேலை புரியச் செய்யும் பொழுதும், அல்லது தக்க மருந்துகொடுத்து நோயைத் தீர்த்தபோதிலும் அந்நோய் அத்தேகத்தை மறுபடியும் சார்ந்து துன்புறுத்தாவண்ணம் பாதுகாத்தற்கான ஏற்பாடு செய்யாமல் விடும் பொழுதும், எவ்வாறு கெட்டுப்போன உறுப்பு மேன்மேல் கெட்டு இதர அவயவங்களையும் தாக்கித் தேகத்திற்கு தீங்கு விளைத்தற்போலும், அல்லது பழையகாரண ஸ்திதியினால் தேகமானது மீண்டும் நோய் வசப்படுதல் போலும், சமூக வாழ்க்கையில் அவ்வப்போது தோன்றும் இன்னவிடர்களையும் மாற்றங்களையும் மேற் காட்டியபடிக்கு இருதிறக் குணங்களாகப் பிரித்துத் தீமை எனப்பட்டவைகளை அடக்கி நன்மை எனப்பட்டவைகளை வளர்த்து உயர்த்துவதற்காகச் செய்யும் முயற்சிகளெல்லாம் வீணாகித் தீமை எனப்பட்டவை எதிர்பாராத விதங்களிலும் சமயங்களிலும் நம்மை அலப்புறுத்துவதுடன் நிற்காமல் நன்மை எனப்பட்டவைகளையும் தாக்கி இழித்துச் சமூக வாழ்க்கையை அல்லோல கல்லோலப் படுத்துகின்றன. இது போலவே ஒரு இனம் அல்லது வகுப்பு, அல்லது கக்ஷியின் நிலைமையானது இதர இனங்களையும், வகுப்புகளையும், கட்சிகளையும் பாதித்து மாற்றுகின்றது.

நன்மை தீமை, தனம் தரித்திரம், நட்பு பகைமை என்பனவாதிகள் தரிக்கப் படுவனவன்று; பின்னவைகளைக் களைந்து முன்னவைகளைப் பெருக்குதற்கான உபாயம் யாதெனின், வெறும் உபதேசங்கள் செய்வதும் கணக்கற்ற ஆக்ஞா சட்டங்களையும் நூற்களையும் பிரசுரிப்பதும், நியாய ஸ்தலங்களையும் பாடசாலைகளையும் நிருமிப்பதும் மாத்திரமன்று. பின்னவைகள் உண்டாகி வளர்ந்து பரவுதற்கு ஹேது அல்லது காரணமானவைகளைப் போக்கி அவைகள் மீண்டும் எழாவண்ணம் சமூக அமைப்பையும் போக்கு முறைகளையும் முற்றிலும் சீர்திருத்தலே நல்லுபாயமாவது போலும்! வேரிலிருந்து ஊறிப்பெருகும் விஷமானது வேரை எரித்தால் போகுமேயல்லாமல், மேற்கிளைகளை மாத்திரம் பன்முறை வெட்டி யெறிந்துகொண் டிருந்தால் போகுமோ?

உள்ளபடிக்கு மனிதன் பாபியுமன்று; சுசீலனுமன்று; குரூபியுமன்று; தயாநிதியுமன்று. உண்டுறங்கி இனத்தைப் பெருக்கிவரும் பிராணிகளில் இவனும் ஒன்றாகத் தோன்றினும், பசிதாகம் காமமாகிய வேட்கைகளால் தூண்டப்பட்டு அவைகளைப் பூர்த்திப்பதற்காகி அந்நாள்தொட்டு இந்நாள் வரையிலும் படாத பாடுகள்பட்டு விதம் விதமான உபாயங்களையும் கருவிகளையும் கண்டுபிடித்துக் கையாண்டு வந்தபோதிலும், அப்பாடுகளெல்லாம் அவ்வேட்கைகளைப் பூர்த்தி செய்ததுடன் நின்றுவிட்டனவன்று. விலங்குகளின் வாழ்க்கையில் தோன்றாத சில அபூர்வக் குணமாற்றங்கள் மானுடருலகில் தோன்றின. சரீராக்கமும், விவேக வளர்ச்சியும், மன விரிவும், கூட்டுறவு வாழ்க்கையும் உண்டாகி, உடைமை உரிமைகளென்ற பாவனைகள் முளைக்கிளம்பின. பிரகிருதிப் பொருட்களின் தாரதம்மியங்களையும் போக்கையும் கவனித்துப் பார்க்கையில், அறிவு விசாலித்துப் பிர-

கிருதி நிகழ்ச்சிகளையும் பொருட்களையும் தனக்கு உபயோக முள்ளனவாக மாற்றுதற்கான சக்தி விருத்தியாயிற்று.

மானுடச் சுபாவம் சதா காலமும் மாறிக் கொண்டிருப்பதாகும். அம் மாற்றங்களுக்குக் காரணம் யாதெனின், உலக வாழ்க்கையைப் பற்றிய அவனுடைய ஆதர்சங்களின் தன்மையாம்; முறையே அவ்வாதர்சங்களின் தன்மையானது வாழ்க்கைக்கான சாதனங்களின் வளர்ச்சியையும் குறைவையும், அபரிமிதத்தையும் இன்மையையும் பொறுத்துள்ளது.

உயர்வு தாழ்வுகளென்ற வித்தியாசங்களை மாந்தருலகில் புகுத்திப் போற்றுபவர் எவரெனின் செல்வச் செருக்கினரும் வீர சூரர்களுமேயாம். சில நூற்றுவர் மாத்திரம் போகித்து ரமித்து வருகையில், பற்பல வாயிரம் பேர்கள் வருந்தித் துடித்தற்குக் காரணம் யாதெனின், ஒருவர்க்கு 'லக்ஷ்மி கடாக்ஷம்' இருப்பதும், மற்றவர்க்கு அக் கடாக்ஷ மின்மையுமன்று. சிலர் பெரும் படிப்புகள் படித்து, உயர்ந்த பட்டங்கள் பெற்று, உன்னத ஸ்தானங்களிலமர்ந்து ஆக்ஞா சக்கிரத்தை உருட்டுகையில், ஏனையோர் எழுதப் படிக்கத் தெரியாது நாள்தோறும் இடுப்பொடிய ஊழியஞ் செய்தும் கஞ்சியும் கந்தையுமில்லாது ஏங்கி வாடுதற்குக் காரணம் யாதெனின், ஒருவர்க்கு "சரஸ்வதியின் கிருபை" இருப்பதும், மற்றவர்க்கு அக் கிருபை இன்மையுமன்று. ஒருவர் சுகிப்பதும் மற்றவர்கள் துக்கிப்பதும் "பண்டை வினைப் பயன்" என்று, சுருக்கத்தில், இன்னவிடர்கள், வலி வருத்த மேக்கங்கள், வேற்றுமை விபரீதங்களெல்லாம் பின்வருமாறு மாந்தருலகில் தோன்றிப் பரவின.

ஆரம்பத்தில் "இயற்கை அன்னை"யின் அடிமையாகப் பாடுபட்ட "அநாகரீகன்" படிப்படியாக அவள் போக்குகளை ஒருவாறு அறிந்து அவளைத் தன்னுடைய தோழியாக மாற்றினன். நாட்குநாள் ஜனத்தொகை அதிகரித்துச் சமூக வாழ்க்கை பலமுற்று தொழிற்கள் பெருகிவரவே, தன்னுடைமை—தன்னுரிமைகளென்ற பாவனைகள் முளைத்தன. ஆதியில் இயற்கை அன்னையோடு அதி உக்கிரத்துடன் தொடுக்கப்பட்ட போரானது காலாவட்டத்தில் மாந்தருலகில் புகுந்து, மானுடராசியை வருப்புக்களாகவும் ஜாதிகளாகவும் பிரித்து ஒருவரை யொருவர் பகைக்கச் செய்தது. "ஜீவாதாரப் போரானது பொருளாதாரப் போராகப் பரிணமித்தது. வேட்கை விருப்பமாகவும், விருப்பம் ஆசையாகவும் செழிக்கவே, வழக்குகளும் புரட்சிகளும் உண்டாகிப் பெருகின; இன்னமும் பெருகி வருகின்றன.

நாளேற நாளேற நூதனப் பிரதேசங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. பற்பல ஜாதியர்களுக்குள் அறிமுகம் ஏற்பட்டது. கப்பல் போக்குவரத்துக்களும், பண்டங்கள் மாற்றமும், வர்த்தகமும் பிரபலமாயின. விஞ்ஞான சாஸ்திரப் பயிற்சிகளும் தேர்ச்சிகளும் அபிவிருத்தியாயின. இதனின்று இயந்திரங்களும், இயந்திரத் தொழில்களும், தொழிற் சாலைகளும் ஓங்கி வளர்ந்து பரவின. வியாபாரிகள் தலை யெடுத்தனர். பற்பல தேசத்தினர்க்குள் கூட்டுறவும், பண்டங்களின் ஏற்றுமதி இறக்குமதிகளும் பெருகவே அவ் வியாபாரிகள் வர்த்தக அதிபதிகளாகவும், முதலாளிகளாகவும் மாறி செல்வாக்குற்று உயர்ந்தனர். சுயநலத்தின் பொருட்டு அவ் வர்த்தகர்களும் முதலாளிகளும் தமக்கு அநுகூலமான அரசு முறைகளையும் சட்-

டங்களையும் வரம்புகளையும் நியமித்து, ஏனையோர்களைப் பாமரர்களாகவும் எளியர்களாகவும் இருத்தி மேலெழாவண்ணம் அவர்களை அடக்கினர். இன்னமும் அடக்கி வருகின்றனர்.

மேற் சொல்லிய வேற்றுமை விபரீதங்களெல்லாம் தற்காலத்திற்றான் தோன்றியுள்ளன எனக் கொள்ளக் கூடாது. பற்பல ஆயிரவாண்டுகளாக அவைகள் நிலவி நின்று வருகின்றன. அக் காலங்களுக்கும் இக் காலத்திற்குமுள்ள பேதம் அளவிற்றானே யல்லாது தன்மையி லன்று.

விஞ்ஞான சாஸ்திரப்பயிற்சிகள்-தத்துவ விசாரணைகள்—வித்தகக் கற்பனைகள்—பலதிறக் கலைகளின் நோக்கங்கள்—இலக்கிய இலக்கணங்களின் போக்குகளிற் பெரும்பான்மையும் அவ்வக்காலத்தின் நிலைமையை அடிப்படையாகக்கொண்டு, அவ்வக்காலத்திய செல்வாக்கினரின் மனோபீஷ்டங்களுக்கு அனுகூலமாக வளர்ந்து வியாபித்தன. இன்னமும், ஒரு சமயத்தில் சமூக மாற்றங்களின் பிம்பங்களாகவும், மற்றொரு சமயத்தில் பிரதிபிம்பங்களாகவும் விளங்கின. சிற்சில சமயங்களில், அவைகள் பொது ஜனங்களின் எழுச்சிக்கும் புரட்சிக்கும் சீர்திருத்தங்களுக்கும் தூண்டுகோலாகவும் வழிகாட்டிகளாகவும் விளங்கிய போதிலும், அவைகளிற் பெரும்பான்மையும், அந்நாள் தொட்டு இந்நாள் வரையிலும், மேற்காட்டியபடிக்கு ராஜாங்கங்களின் ஊதுகுழாய்களாகவும், செல்வாக்கினரின் தோழராகவும், தனவான்களின் ஊழியராகவும் நடித்து வந்தனவே யல்லாமல், பாமரர்களின் நல்லாசிரியராகவும், ஏழைகளின் நண்பர்களாகவும், சுயமதிப்புடையவர்களாகவும் நின்று உதவி புரிந்தன வன்று.

மானுடருலகில் விரவிநிற்கும் இடையூறு இடுக்கண்களும், வேற்றுமை விபரீதங்களும் ஆகாயத்தினின்று அகோசரவிதத்தில் குதித்தன வன்று; ஆனால், மண்ணுலகி லிருந்தே, மண்ணுலக வாழ்க்கைப் போக்கிற்கும் தேவைக்கு மானபடிக்கு உண்டாகி வளர்ந்து மாறிப் பெருகினவென்றே கூறவேண்டும். மாந்தர் தம் சுகதுக்கங்களுக்கும் உயர்வு இழிவுகளுக்கும் அதிகாரியும் உத்தரவாதியும் ஆனவர் மாந்தரே யல்லாமல், சூக்ஷ்மதேவதைகளன்று. மௌட்டியத்திற்கும் ஞானத்திற்கும், தனத்திற்கும் நல்குரவிற்கும் சமூக அமைப்பும், கட்டுப்பாடுகளும் சம்பிரதாயங்களுமே தான் காரணமாவன. பிராமணன் முதல் தீண்டாதான் வரையிலும், மன்னவர் மன்னன் முதல் நித்திய தரித்திரன் ஈறாக யாவரும் ஒரே ராசியைச் சேர்ந்தவராயினும், ஒரே விதச் சத்திபெற்றவ ராயினும், சமூக வாழ்க்கைப் போக்கில் சில மானுடத் துரோகிகளால் ஏற்படுத்தப்பட்ட வகுப்புக்களும், நியதிகளும், உடைமை யுரிமைகளுமேதான் மாந்தர் பெரும்பாலோரின் சுகதுக்கங்களுக்கும் வேற்றுமை விபரீதங்களுக்கும் காரணமே யல்லாது, வேறில்லை.

தற்காலக் கல்வியின் சீர்கேடு

(டர்பன்-திரு. ச. முனிஸ்வாமி பிள்ளை.)

நமது நாடு வறுமையுற்றதற்கும், கைத்தொழில் குறைந்ததற்கும், வாணிகங் குன்றியதற்கும், இளைஞர்கள் பலர் வேலையின்றி அலைந்து திரிதற்கும் ஏதுவாய் நிற்பது நமது இளஞ்சிறார்க்கு ஊட்டப்பட்டு வந்ததும், வருவதுமாகிய கல்வியின் குறைபாடே யென்பது யாவரும் ஒப்ப முடிந்ததொன்று.

எருவிடப்படலால், வளஞ்செறிந்த நிலத்தினிடத்தே விதைத்த வித்தானது தண்ணீரால் வீறெய்தி பயனிருக்குமாப்போல், வாழ்க்கை நிலைக்கின்றியமையாத தொழிற் பயிற்சியோடு இளஞ்சிறார் பொதுக்கல்வியும் பயின்று பயன்பெறச் செய்தல், தற்கால உலகத்தின் போக்கினை உற்று நோக்கி இரங்குகின்ற உள்ளத்தினர் எவர்மேலும் பொறுத்த கடமையன்றோ?

எத்தேயத்திலும் தாய் மொழியை யொதுக்கிவிடுத்து பிறமொழியை ஏற்று அதனை வளரச்செய்ய எத்தனித்தல், தாய்வேரில்லாது தயங்கும் மரமானது வளர்ந்து பயனுதவியதை யொக்கும். கண்டன யாவும் உணவே யெனக் கருதும் பகுத்தறிவில்லாப் பிள்ளைப்பருவத்தும், அதன் பின்னும் தனக்கு அன்பு குழைத்துப் பாலூட்டி, அருள் நிறைத்துத்தாலாட்டி வளர்த்தெடுத்த தாய் தனக்கு வேறெவர்தான் ஒப்பாவர் ?

சிறுவயது தொடங்கியே வீட்டிலும், வெளியிலும் அல்லும் பகலும் ஆங்கிலத்தையே முற்றுங்கற்று, தமிழைச் சிறிதளவேனும் கல்லாதுவிடுத்த—அதைக்கற்றல் தமது போலிப் புகழுடை நிலைமைக்கோர் இகழ்வாமென விடுத்த—மாணவர்கள் யாவரும், ஆங்கிலத்தில் அரும்பெரும் அறிஞர்களாய்த் துலங்கிவிடவில்லை. மற்று இவர்தாமே தாய்மொழியிற் பயின்ற நமது முன்னோரினும் பல்லாற்றானும் இழிவு நிலைமையி லிருக்கின்றனர். தாய் மொழியிற் பயின்றானொருவன் அன்னியமொழியைப் பயிலுதற்காகத் தனது மனவலிமையைச் சிறுவயது தொடங்கியே வருத்திய மாணவனினும், அறிவு முதிர்ச்சியால் ஒப்பற்று விளங்குவானென்பது திண்ணம். இதற்கு எடுத்துக்காட்டாக கவிச் சக்கிரவர்த்தி தாகூர் அவர்களின் ஜீவிய சரித்திரத்தை உற்று நோக்குவோம்.

அவர் பதினான்கு வயதுவரை ஆங்கிலமே சிறிதுந் தெரியாதிருந்ததுமன்றித் தாய்மொழியில் ஊக்கத்துடன் பயிற்றப்பட்டு வந்தாரெனவு மறிகிறோம். நாட்டுப் பள்ளிக்கூடத்தின் தாய்மொழியில் நன்கு கற்ற மாணவனொருவன், பட்டினத்துக் கல்லூரியில் சேர்ந்து ஆங்கிலம் படிக்கத்தொடங்கிய சிறிது காலத்திற்றானே ஆங்கிலமே பிறந்த நாள் தொடங்கிப் பேசிப் பழகிய மாணவரைப் பார்க்கிலும் முதன்மை பெற்றும், ஆசிரியரால் நன்கு மதிக்கப்பட்டும் விளங்குதலே போதிய சான்றாம்.

நமது நாட்டில், தீவினை ஒரு சிறிது மில்லாத நெய்தற்றொழிலும், உழவுத் தொழிலும் வாணிகமு மடைந்திருக்கும் இழிநிலைமை கூறவும் மனம் கூசுகின்றது.

எழுதப் படிக்க சிறிது தெரிந்தவர்களும், அது தானு மில்லாதவர்களுமே கைத்தொழில்களை நடாத்தி வருகின்றனரே யன்றி, கற்றவர்கள் இம் முயற்சிகளில் தலையிடுதலைக் காணோம். நமது நாடு பண்டைக்காலத்து செப்புதற்கரிய செழிப்புற்று விளங்கியதா மென்ற உண்மைதானும், பொய்யாய் பழங் கதையாய் மறைந்து படுமன்றோ? ஆகையால் நம்முடைய கல்வி சீரியதாகவும் கைத்தொழில்களை விருத்தி செய்வதற் குதவியாயு மிருத்தலவசியம். அரசாட்சியினரின் காரியாலயங்களில் லிகிதர் வேலையே பெரும் பேருக மதிக்கும் கல்வி முறையை முற்றிலும் வேருடன் களைந் தெறிந்து, உழவு, நெசவு, வாணிபம் முதலிய கைத்தொழில் முயற்சிகளை மன நிறைவுடன் புதிய வழிகளில் செய்தற்குரிய கல்வியை நமது நாட்டவர்க்கு, தாய் மொழியாம் தமிழ் மொழியில் ஊட்டல் வேண்டும். மேனாட்டார் தங்களுக்குள்ள கல்வியறிவின் மேன்மையால் நாளுக்கு நாள் எல்லா முயற்சியிலும் பிறை போல் வளர்ந்தோங்கி வருதலையும், அஃதில்லா நம்மனோர் அம் முயற்சிகளில் குறை மதிபோல் தேய்ந்து போதலையும் அறியார் யார்?

இப்பொழுது பள்ளிக்கூடங்களிற் பயன்படுதற் பொருட்டு வெளியிடப்பட்ட நூல்களோ அளவில் மலிவுடைமை பற்றி ஆழ்ந்த கருத்துடையனவாய்த் தோற்றவில்லை. இன்மை மறுமைக் கேற்றன யாவற்றையும், கட்டிக்கரும்பை இறுக்கக் காய்ச்சிய பாகெனத் தித்திக்கும் முறையால் விளக்கிக் காட்டிய நூல்கள் மறைந்து பயனற்ற நூல்கள் பல பெருகி வருகின்றன.

'கன்னடமுங் களி தெலுங்குங் கவின் மலையாள முந்துளுவும்' தோன்றுதற்குக் காரணமாய் நின்ற தாய் மொழியாம் அமிழ்தினுமினிய உயர்தனித் தமிழ் மொழியைக் கற்றல் இகழாமென விடுத்த தமிழ் இளைஞர்காள்! சன நெருக்கத்தினாலும், தூசியினாலும் கெட்ட காற்றை உட்கொண்டு, வாழ் நாட்களை குறுகச் செய்து அரசாட்சியினரின் காரியாலங்களிலிருந்து அறிவு வளர்ச்சி யற்றிருக்க விரும்பியும், இளந்தென்றல் வீசும் இயற்கை வனப்பு வாய்ந்த சிற்றூர்களிலிருந்து கைத்தொழில் வேலைகளைச் சிறப்புடன் நடத்தவும் ஒருப்படாத இளங்காளைகாள்!! தமிழ் மொழி மடவாள் ஈன்ற மாசிலா மக்காள்!!! இனியேனும் உங்கள் உறக்கம் ஒழிந்தும், மயக்கந் தீர்ந்தும் விழித்துக் கொள்வீர்களாக. உங்கள் வழித் தோன்றல்களையாயினும் தக்க முறையில் கல்வி யூட்டுவித்தல் வேண்டும். அன்றேல் நமது நாடு வலிகுன்றிச் சிறப்புக் கெடுமேயன்றி முன்னேற மாட்டா தென்பது திண்ணம்.

சோபியாவின் காதல்.

(பீ. எம். அப்துல்மஜீது.)

அழகிய மாளிகை. மதில் சூழ்ந்த கோட்டைக்குள் அதிவிரைவுடன், பருத்த கொழுத்ததொரு கனவான் கம்பீரமுடன் நுழைந்தார். அவர்தான் ஜெல் பிரபு. ஹனோவர் அரசர் எர்னஸ்ட் அகஸ்டஸின் சகோதரர். ஜார்ஜ் வில்லியம் என்ற பெயர் புனைந்தவர். அவர் கீழ் மாடியிலிருந்தபடியே, "சோபியா! சோபியா!" என்று அழைத்தார்.— சில நிமிடங்கள் சென்று 'சோபியா,' என்று மீண்டும் கூப்பிட்டார்.

சில விநாடிக்குப்பிறகு மாடிப்படியில் தடதடவென்ற சப்தம் கேட்டது. வேட்டை உடையுடன் நின்றுகொண்டிருந்த பிரபுவுக்குமுன்பு, அழகே உருவெடுத்ததுபோல் மான் போன்ற மருண்ட பார்வையுடன் கூடியதொரு சோபித மங்கை நடுங்கிக்கொண்டே நின்றாள்.

வணக்கத்துடன், "என் அப்பா, என்னை அழைத்தீர்கள்? என்ன, அப்பா" என்று அவள் தழுதழுத்த குரலில் கேட்டாள்.

"ஒன்றுமில்லை......சோபியா கேள், நான் உன் பெரிய தந்தையுடன் வெகுநேரம் சம்பாஷணை செய்து கொண்டிருந்தேன். நாங்கள் இருவரும் ....உன்னை, அண்ணன் ஜார்ஜுக்கு விவாகம் செய்வதென ஏற்பாடு செய்துவிட்டோம்; தெரியுமா?" என்றார் பிரபு.

"அப்படியா அப்பா, என்னையா......?" என்று கேட்டாள் சோபியா.

"ஆம்; நாங்கள் கூடியசீக்கிரம் விவாகம் நடத்திவைக்க ஏற்பாடு செய்திருக்கிறோம்" என்று சொல்லிவிட்டு அப்பிரபு குதிரை லாயத்திற்கு அவசரமாகச் சென்று விட்டார்.

தந்தையின் மொழிகளைக் கேட்ட கன்னி சோபியா இடியோசை கேட்ட நாகம்போல், அங்கேயே ஸ்தம்பித்து நின்றாள். அப்போது அவள் மரப் பதுமைபோல் தோன்றினாள்.

ஒருநாள் தான் யாரையேனும் ஒருவரை மணக்க வேண்டுமென்றும் இந்திய ராஜகுமாரிகள் போன்று தனது மனதிற்குகந்த நாயகனை தெரிந்தெடுத்துக்கொள்ளும் உரிமை தனக்கு கிடையாதென்றும் அவளுக்கு நன்கு

தெரியும். ஆனால் துர்க்குணரும், ஸ்திரீலோலருமான ஜார்ஜை மணக்க, அழகும் புத்தி கூர்மையும் நல்ல படிப்பும் வாய்ந்த இளங்கட்டழகிக்கு எப்படி மனம் வரும்? இவனை மணந்தால் தன் கதி என்னவாகுமென்பதை நினைந்து நினைந்து நெஞ்சம் கலங்கினாள். ஆனால் பெற்றோர் முடிவை மறுக்க 17-ம் நூற்றாண்டில் ஜெர்மன் பெண்களுக்கு உரிமையேது? எல்லாம் விதிவிட்ட வழி நடக்கட்டும் என்று அவள் விட்டுவிட்டாள்.

விவாகமும் நடந்தேறியது. விவாகத்தின் பிறகு ஜார்ஜ் வீட்டில் தங்குவதே இல்லை. வேறு மங்கையர் கூட்டுறவு இருக்கையில் அவனுக்கு மனைவியைப்பற்றி கவலை எதற்கு? அவன் தன்னை தீராப் பொறியாகவே மணந்திருக்கிறான். ஆதலால்தான் தன்னை அவன் அலக்ஷியஞ் செய்கிறான் என்று கருதி சோபியா வருந்தினாள். இப்படி இருப்பினும் ஜார்ஜினிடமாக அவளுக்கு ஒரு மகனும் மகளும் பிறந்தனர். பின் ஜார்ஜ் அவளைக் கண்ணெடுத்தும் பார்ப்பதில்லை.

கோணிக்ஸ் மார்க் பிரபுவான பிலிப் கிறிஸ்டாபரைச் சந்தியாம லிருந்தால் சோபியாவின் வாழ்க்கையே, வேறுவிதமாக முடிந்திருக்கும். ஆனால் விதி யாரைவிட்டது?

பிலிப் பிராண்டன்பர்க் பிரபுக்களது வம்சத்தைச் சேர்ந்தவர். இவ்வம்சத்தினர் ஸ்வீடன் தேசத்தில் வசித்து பெரும் வீரர்களாய் திகழ்ந்தனர். பிலிப் பிழைப்புக்காக ஹனோவர் வந்தார். ஹனோவர் அரசர் இவரை பட்டாளத்துக்கு கர்னலாக நியமித்தார். பிலிப் மிக்க அழகும் துணிவும் வீரமும் வாய்ந்தவர். காதலற்ற வாழ்க்கையால் வாடி மெலிந்த 'சோபியா, அந்த கட்டழகனை சந்திக்க நேர்ந்தது. அழகிற் சிறந்த இருவர் கண்களும் ஒன்றோடொன்று சந்தித்து உறவாடின. இருவர் மனமும் ஒன்றுபட்டன, பிலிப் சோபியாவை முத்தமிட்டுத் தன் அடங்கா காதலை தெரிவித்தார். பாவம், சோபியா, 'எனது கணவன், தந்தை, மாமனார் முதலியவர்கள் களவின்பம் அனுபவிக்க, நான்மட்டும் ஏன் அதனை அனுபவிக்ககூடாது? இன்பம் அனுபவிப்பதில் கூட பெண்களுக்கொரு விதி; ஆண்களுக்கு ஒரு விதி ஏன் இருக்க வேண்டும்?'' என்று நினைத்தாள். களவின்பம் அனுபவித்ததும் பிலிப்பிற்கு அடிமையாகி பதிதையானாள். சிறிது காலம் பிலிப்பும் சோபியாவும் இந்திரன் இந்திராணிக்கு ஒப்பாக இன்பம் அனுபவித்தனர். பிலிப் வரமுடியாத சமயா சமயங்களில் சோபியா அவருக்கு காதல்கனிந்தொழுகும்படியான கடிதங்களெழுதி தன் ஆவலைத் தீர்த்து கொள்வாள்.

சோபியா தனது கணவர் ஜார்ஜ் பர்லினுக்கு சென்றிருந்தபோது பிலிப்புடன் பிரான்சுக்கு ஓடிப்போய் இன்பமாய் வாழ வேண்டிய ஏற்பாடுகளை செய்து முடித்தாள். இவளது சாரட்டு இதற்கு தயாராகியது. ஆனால் பிளாடின் சீமாட்டி, இவளுக்கு சனியனாக வந்து சேர்ந்தாள்.

அவள் தன் ஒற்றர்கள் மூலம் சோபியா, பிலிப்பிற்கு எழுதிய கடிதங்களைப் பெற்று ஹனோவர் அரசனிடம் பிலிப்பைக் கைதுசெய்ய உத்தரவு பெற்றாள். சீமாட்டி, பிலிப் வரவேண்டிய வழியில் நான்கு போர் வீரர்களை நிறுத்தி இருந்தாள். பிலிப் அஞ்சாத வீரரல்லவா? இவர்களை லக்ஷியம் செய்யாமல் தன் காதலி குறித்த இடத்தை யடைய முயன்றார். அப்போது ஏற்பட்ட சண்டையில் அவர் எதிரிகளில் சிலரைக் காயப்படுத்தினார். ஆனால் முண்டனுக்கு இரண்டாள் போதுமன்றோ? நான்கு வீரர்களும் பிலிப்பின்மீது பாய்ந்து அவரை வெட்டி எமலோகத்துக்கு டிக்கட் கொடுத்தனுப்பினார்கள். பிலிப்பின் சவம் மறுநாள் தகனம் செய்யப்பட்டது. இது 1694-ம் ஆண்டில் நடந்த நிகழ்ச்சியாகும். ஹனோவரிலிருந்து 7 மைல் தூரத்திலுள்ள ஆஸ்டன் கோட்டையில் 'சோபியாவை, அவளது கணவர்' 1694-ம் வருஷம் சிறை வைத்தார். அவள் தப்பி ஓடாதபடி காவலர்கள் நியமிக்க பட்டார்கள். காவலாளிகளை தவிர வேறு எவரையும் காண, அவளுக்கு அனுமதியளிக்கப்படவில்லை. பல வருஷங்கள் ஒன்றன் பின் ஒன்றாய் ஓடிமறைந்தன. தனது கணவனுக்கு இங்கிலாந்து அரசர் பதவியளிக்கப்பட்டு தனது குமாரனுடன் இங்கிலாந்துக்கு அதனை ஏற்கச்செல்வதாக வதந்தி உலாவியது. முதலாவது ஜார்ஜுக்கு மகுடாபிஷேகம் ஆகி விட்டதாயும் கேள்விப்பட்டாள். தனக்கு இனியாவது விடுதலை நிச்சயம் கிடைக்குமென்று கருதினாள். சிலர், சோபியா, இதுவரை அனுபவித்த தண்டனை போதுமென்றும் அவளைத் திரும்ப மனைவியாக அங்கீகரிக்க வேண்டுமென்றும் ஜார்ஜிடம் விண்ணப்பித்து கொண்டார்கள். ஆனால், ஜார்ஜ் புனராலோசனை' செய்ய மறுத்து விட்டார். அவர் 2 ஜெர்மன் வைப்பாட்டிகளுடன் இங்கிலாந்தில் காலத்தைக் கழித்தார்.

சிறை வாசத்தால் வாடி வதங்கிய சோபியா அழகு குன்றினாள். தனது இன்னல்கள் தீர யமனை அனுப்பி உதவி செய்ய கூடாதா என்று கடவுளை வேண்டினாள். உயிருடன் அவள் 32 வருஷம் சிறையிலிருந்ததே போதுமென கருதி அந்த கருணா நிதியான கடவுளுங் கருதினார் போலும். 1726-ம் வருஷம் இச் சித்திரவதையிலிருந்து யமதர்மராஜன் சோபியாவை விடுதலை செய்தான். ' ஆணுக்கொரு நீதி,. பெண்ணுக்கொரு நீதி என்ற மிக பிற்போக்கான உணர்ச்சி ஆங்கில நாட்டிலும் இருந்திருக்கிறது.

ஆண் மக்களுக்கு நீல நிறத்திலும், பெண்மணிகளுக்குச் செந்நிறத்திலும் ஆசையதிகமாம்.

* * * *

சிவப்பும், நீலமும் கலந்த நிறம் ஆண்களுக்கோ, பெண்களுக்கோ பிடிப்பதே யில்லையாம்.

* * * *

கிரேட் பிரிட்டனில் 25,11,117 டெலிபோன்களும், ஜெர்மனியில் 32,69,952 டெலிபோன்களும் இருக்கின்றனவாம்.

* * * *

அமெரிக்காவில் உலகிலுள்ள டெலிபோன்களில் பாதி அதாவது 1,74,23,871 டெலிபோன்கள் இருக்கின்றனவாம்.

* * * *

இந்தியாவில் 1925-ம் ஆண்டில் 60 இன்ஷியூரன்ஸ் கம்பெனிகளே இருந்தனவாம். அதற்குப் பின் இந்த பத்து ஆண்டுகளுக்குள் 150 கம்பெனிகள் ஏற்பட்டு விட்டனவாம்.

* * * *

உலக முழுவதிலும் 3,50,28,682 டெலிபோன்கள் இருப்பதாக அமெரிக்க டெலிபோன்கம்பெனி புள்ளி விவரம் ஒன்றில் வெளியாகியிருக்கிறது.

* * * *

பதின்மூன்று கோடியே ஏழு லட்சம் ஜனங்கள் வாழும் அமெரிக்காவில் ஏறக்குறைய 9 கோடி பேர் ரேடியோ சங்கீதம் கேட்கின்றனராம்.

* * * *

ருஷிய மக்கள் ஸார் சக்கரவர்த்தி காலத்தில் எவ்வளவு சோப் உபயோகித்தார்களோ அதைப் போல மும்மடங்கு சோப்பை இப்போது உபயோகிக்கிறார்களாம்.

* * * *

சமீபத்தில் ஜெர்மனிக்கு விஜயஞ் செய்த இத்தாலி சர்வாதிகாரி முஸோலினியை வரவேற்பதற்கு 5 லட்சம் பவுன் செலவாயிற்று என்றும் அவர் போகும் வழியெங்கும் ஆயுதபாணிகளாக வீரர்களை நிறுத்தி வைப்பதற்கு மட்டும் 1½ லட்சம் பவுன் செலவாயிற்று என்றும் கூறப்படுகிறது.

* * * *

நியூயார்க்கில் வாலிபர்களோ மங்கைகளோ தூர தேசத்திலுள்ள தங்கள் காதலிகளுக்கோ அல்லது, காதலர்களுக்கோ தங்களுடைய அடங்காக் காதலைத் தெரிவிக்க வேண்டி, தந்தி மூலமாக முத்தமளிப்பதாகத் தெரிவிப்பார்களாம். அவர்கள் அளிப்பதாகக் கூறிய முத்தங்களைத் தந்தியை யெடுத்துச் செல்லும் தந்திச் சேவகனே உரியவர்களுக்கு முத்தமளிப்பானும். ஐரோப்பாவில் நடைபெறும் நவநாகரீகக் கூத்துக்கு இந்த ஒரு சிறு உதாரணமே போதுமல்லவா !

டாக்டர்:—“நீ சைவ உணவைக் கண்டிப்பாய்க் கடைப்பிடிக்க வேண்டுமென்று நான் உனக்குப் புத்திமதி சொல்லி யிருக்கிறேன். ஆனால், நீ ஆட்டுமாமிசம் சாப்பிட்டதாகச் சொல்லுகிறாய் ?”

நோயாளி.—ஆனால், நீங்கள் பாருங்கள் டாக்டர்? ஆடுகள் வெறும் புல்லைத்தான் தின்கின்றன.

***

தகப்பனார்:-ஏண்டா பயலே, குழந்தை அழறான்.

பையன்:—நீ வாங்கிக் கொடுத்த ஜிலேபியே அவனுக்குத் தின்க தெரிலே. அதே நான் தின்னு காண்பிச்சேன் அப்பா!

***

சாரணை உபாத்தியாயர்:—(சாரணை சிறுவர்களைப் பார்த்து) பிள்ளைகாள்! நீங்கள் உமது சொந்த சகோதரி, தாய் தந்தையர்களிடம் எப்படி நடந்து வருகின்றீர்களோ அது போல பிறரிடமும் நடக்க வேண்டும்.

ஒரு சாரணன்:—சார்! நான் எப்பொழுதும் வீட்டிலுள்ளவர்களை அதட்டுவேனே, சார்!

***

நாடக கொட்டகை சொந்தக்காரர்.—நேற்றைய தினம் ஆட்டத்திற்கு வந்த இருபது, முப்பது பேர்வழிகளும் திரும்பிச்செல்ல நேர்ந்தது.

அவர் சிநேகிதரில் ஒருவர்:—என்ன! இடமில்லையென்று சீட்டுக் கொடுக்க வில்லையா ?

நாடகக் கொட்டகை சொந்தக்காரர்:—நல்ல வெட்கக்கேடு. வந்திருந்தவர்களே அவ்வளவுதான். அவர்களுக்காக ஆட்டம் நடத்த இஷ்டமில்லை. ஆகவே துட்டைக் கொடுத்து திருப்பிவிட்டோம்.

உபாத்தியாயர்:—கோபாலா! நம் கிளாசில் எத்தனை 'பாய்ஸ்' இருக்கிறார்கள்.

கோபால்.—ஸார்! இருபது 'பாய்ஸ்' இருக்கிறார்கள்.

உபாத்தியாயர் :—அடே! மூன்று பெண்கள் இருப்பது தெரியவில்லையா?

கோபால்:—கமலாபாய், ரெத்னபாய், ரமாமணிபாய் மூன்றுபேரும் 'பாய்ஸ்'தானே ஸார்!

***

டிக்கெட் பரிசோதகர்:—என்ன பாட்டி, தெற்கே மாயவரத்திற்கு டிக்கெட் வாங்கிக்கொண்டு வடக்கே பட்டினம் போகும் ரயிலில் ஏறிவிட்டீர்களே.

பாட்டி:—அப்பா, என் கண்ணே! தயவுசெய்து டிரைவரிடம் சொல்லி ரயிலைத் திருப்பி ஓட்டச்சொல்லு.

***



விருந்தாளி:—ஹாலில் இருக்கும் கடிகாரம் பார்ப்பதற்கு விசித்திரமாய் இருக்கிறது.

விருந்தளிப்பவன் :— ஆமாம்; அதை நாங்கள் 'விருந்தாளி' என்று அழைக்கிறோம்.

விருந்தாளி:—ஏன்?

விருந்தளிப்பவன்:—அது போகவே மாட்டேன்கிறது.

***

மனைவி:—'நாதா! நீங்கள் என்னைக் கலியாணம் கொண்டிருக்காவிடில் எந் நிலையிலிருப்பீர்?'

புருஷன்:—'இது தெரியாதா! வேறொருவளைக் கலியாணம் செய்து கொண்டிருப்பேன்?'

***

இலக்கண உபாத்தியாயர்:—மொழிக்கு முதலில் வரும் எழுத்துக்கள் யாவை?

கோபாலன்:—பன்னிரெண்டுயிரும், க, ச, த, ந, ப, ம, வ, ய, ஞ, ங, என்னும் இருபத்திரெண்டெழுத்துக்களும் முதலில் வரும் சார்.

பிரகஸ்பதி:—இல்லீங்க சார்! மொழிக்கு முதலில் "மொ" வரும் சார்.

ராமு (தன் தகப்பனாரைப் பார்த்து):—அப்பா! எனக்கு ஏரோப்ளேன வாங்கித் தரேன்னியே. எப்போ அப்பா வாங்கித் தரே?

தகப்பனார்:—ஏண்டா ராமு! டாக்டர் ரங்காச்சாரியார் வெச்சிண்டு இருந்தாரே அந்தமாதிரி நெஜ ஏரோப்ளேனா? இல்லாப்போனா நவராத்திரி கொலுவன்னிக்கு கோபாலய்ய ராத்திலே பாத்தியே அந்தமாதிரி வெளையாட்டு ஏரோப்ளேனா?

ராமு:—ஏம்பா! நேத்திக்கு நீ எதிராத்து வேம்புகிட்டே "நாளேலிருந்து எனக்குத் தினமும் 'மெயிலே உன் வேலைக்காரனிடம் கொடுத்தனுப்பு; அதுக்குக் கொடுக்க வேண்டிய சில்லரையே அடுத்த மாதம் மொதல்தேதி தரேன்" ன்னியே. அது ஸ்டேஷனிலே இருக்கே அந்தமாதிரி நெஜ ரெயில் வண்டியா? இல்லாப்போனா அன்னிக்கு எக்ஸிபிஷனில் பாத்தோமே அந்தமாதிரி வெளையாட்டு ரெயிலா?

***

தாய்;—மகனே! ஏன் இவ்வளவு கூச்சல் போட்டழுகிறாய்? உனக்கு என்ன நேர்ந்தது?

மகன்:—அம்மா! எ—எ—ன்—ன்—வாத்—தி—யார்—ர்—அம்மா—ஆங்—ஆங்—(தேம்பித் தேம்பி யழுதுகொண்டு) ஒரு—ஒரு—ஒரு—மாதமாக அதிக வியாதியா யிருந்தார். அப்பால் எனக்கு பேச நா எழவில்லையே. (என்று அதிகமாக தேம்பி யழுதான்.)

தாய்:—என் சாமி! உன் வாத்தியார் காலகதி அடைந்து விட்டாரா! ஆஹா! வெகு நல்ல மனிதராயிற்றே!

மகன்:—இல்லை அம்மா இல்லை. சவுக்கிய மடைந்து இன்று காலையில் பள்ளிக் கூடத்துக்கு வந்து விட்டாரே—என்று சொல்லி மறுபடியம் அழுதான்.

***

வக்கீல்:—(வைக்கோல்காரனை) அடே ரூபாய்க்கு எத்தனை புரியடா.

வைக்கோற் காரன்:—ரூபாய்க்கு 62 புரிங்க. நல்ல வைக்கலுங்க வேண்டும்னா இரண்டுபுரி மாதிரிக்கு கொண்டு வரேங்க.

வக்கீல்:—அடேய்! என்னை நீ மாடுன்னு நினைச்சுண்டே.

***

குறும்பன்:—ஏண்டா இடும்பா? ஸ்திரீகளுக்கு ஏன் பொம்மனாட்டி என்று பெயர் வந்தது?

இடும்பன்:—இது தெரியாதா! அவர்கள் வருஷா வருஷம் புரட்டாசி மாசம் நவராத்திரி கொலுவின் பொழுது பொம்மையை காட்டுவதால் (வைப்பதால்) தான் அவர்களுக்கு பொம்மைநாட்டி (பொம்மநாட்டி) என்று பெயர் வந்தது.

ஆசிரியர் குறிப்புக்கள்

கல்வி முறையில் மாறுதல் தேவை

சென்ற நூற்றைம்பது ஆண்டுகளுக்கு மேலாகப் பிரிட்டிஷ் ஆட்சி நடந்து வந்தும் நம் நாட்டில் எழுதப் படிக்கத் தெரிந்தவர்களின் தொகை மிகக் குறைவாகவே இருக்கிறது. நூற்றுக்கு ஏழு அல்லது எட்டு பேருக்குத் தான் சாதாரணமாக எழுத்து வாசனை உண்டு. ஆனால் உண்மையில் நல்ல நாகரிகமும் முன்னேற்றமும் அடைந்துள்ள ஒவ்வொரு தேசத்திலும் குறைந்தது 80 சதவிகிதம் பேருக்காவது எழுதப் படிக்கத் தெரிந்திருக்க வேண்டும். மக்களில் பெரும்பாலோருக்கு எழுத்து வாசனை கூட இல்லையென்றால் அந்த தேசம் இதர துறைகளில் முன்னேறுவ தெப்படி? அதிலும் இந்தியர்களாகிய நாம் சுதந்தரக் கோட்டையை நாடி வெகு வேகமாகச் சென்று கொண்டிருக்கிறோம். அக் கோட்டையில் நுழையும் போதேனும் நம்மில் பலரும் கற்றிருந்தால் தானே அக் கோட்டையைச் சரிவரப் பிடித்து அதை ஒழுங்காக நிர்வகிக்க முடியும். ஆகவே புதிய அரசியல் முறைப்படி ஏற்பட்டுள்ள மாகாண சுய ஆட்சியில், அதிலும் காங்கிரஸ் மந்திரிகள் ஏழு மாகாணங்களில் அதிகாரம் பெற்றிருக்கையில் முதலில் கவனிக்க வேண்டிய விஷயம் இந்தக் கல்வி வாசனையைப் பெருக்கும் விஷயமே யாகும். மேலும் கல்வியைப் பரப்புவதாகச் சொல்லிக் கொண்டு இப்போதைய கல்வி முறையையே பின் பற்றுவதிலும் பயனில்லை. இன்றைய கல்வி முறையானது பிரிட்டிஷ் சர்க்காருக்குக் குமாஸ்தாக்களை உண்டாக்குவதற்காக ஏற்பட்டிருக்கிற தென்பது உண்மையே யாயினும், இம் முறையானது நமது தேசத்தின் நிலைமைக்கேற்ற தேசீயக் கல்வித் திட்டமாகாது. இப்போதைய கல்வி முறையால் படித்தும் வேலையில்லாதார் திண்டாட்டம் அதிகரிக்கின்றது. மக்களுக்கு வேறு கைத்தொழில்கள் ஒன்றும் தெரிவதில்லை. அன்றியும் படித்தவர், படிக்காதவர் என்னும் ஒரு நூதன ஜாதியை உற்பத்தி செய்து விடுகின்றது. ஆதலின் காங்கிரஸ் சர்க்கார் இப்போதுதற்கால கல்வி முறையை மாற்றித் தேசீய முறையில் அதை அமைத்து அம் முறையின் மூலம் எழுதப் படிக்கத் தெரிந்தவர் தொகை அதிகமாகும்படி செய்ய வேண்டும். அறியாமையைப் போக்கி அறிவுச் சுடர் பாமர மக்களிடையே பிரகாசிக்கும்படி செய்தால் தான் நாம் அரசியலிலும் மற்றத் துறைகளிலும் விரைவில் முன்னேற்ற மடைதல் சாத்தியமாகும்.

***

வார்தா கல்வி திட்டப் பரிசீலனை

கல்வி அறிவை நாட்டில் பரவச் செய்து மக்களிடையே வாழ்க்கைக்கு அவசியமான அறிவைப் பரப்ப வேண்டு மென்பதற்காக மகாத்மா காந்தியடிகள் சரியான திட்டம் போட்டு வருகின்றார். சமீபத்தில் அவர் வார்தாவில் ஒரு மகாநாட்டைக் கூட்டினார். எல்லா காங்கிரஸ் மாகாணங்களிலுமுள்ள கல்வி இலாகாமந்திரிகளும் மற்றும் பல கல்வி ஸ்தாபனங்களைச் சேர்ந்த அறிஞர்களும் கூடி ஆலோசித்தார்கள். கடைசியாக அவர்களனைவரும் சேர்ந்து ஒரு முடிவுக்கு வந்தனர். அதாவது ஆரம்பக் கல்வியை இலவசமாகவும் கட்டாயமாகவும் முதல் ஏழு வருஷங்களுக்கு நாட்டு மக்க

ளனைவருக்கும் கொடுப்ப தென்றும், கல்வி முழுதும் தாய் பாஷையிலேயே போதிப்ப தென்றும், சாதாரண எண், எழுத்து இவற்றுடன் ஆங்காங்கு முக்கியமாகவுள்ள கைத்தொழில்களையும் போதிப்ப தென்றும், மாணவர்கள் செய்யும் சாமான்களை விற்று அதன் மூலம் கிடைக்கும் பணத்தைக் கொண்டே இந்த ஆரம்பக் கல்விக்கான செலவை சரிக் கட்டிக கொள்வ தென்றும் தீர்மானித்தார்கள். அதற்கான திட்டங்களை வகுக்கவும் ஒரு கமிட்டியை நியமித்திருக்கிறார்கள். இந்த வார்தா திட்டத்தைப் பற்றித் தான் இப்போது கல்வி உலகில் எங்கும் பேச்சாக இருக்கிறது. மகாத்மாவும் மற்ற அறிஞர்களும் சேர்ந்து இத் திட்டத்தை வகுத்திருப்பதால் இது தேசத்திற்கு நன்மையைச் செய்யக் கூடியதாகவே இருக்கும் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் பலரும் அதைப்பற்றிப் பரிசீலனை செய்து தங்கள் அபிப்பிராயங்களைத் தெரிவிப்பது வரவேற்கத் தக்கதே. சில கல்விமான்கள் தங்கள் கருத்துக்களைத் தெரிவித்தும் வருகிறார்கள். ஆரம்பக் கல்வியை ஏழு வருஷ காலத்துக்கு இலவசமாகவும் கட்டாயமாகவும் தாய் பாஷையிலேயே அளிக்க வேண்டும் என்பதையும், கைத்தொழில்களையும் கற்பிக்க வேண்டு மென்பதையும் எவரும் ஆக்ஷேபிக்க வில்லை. தேசீய முறையில் பாடங்களை அமைத்து கட்டாயமாக ஆரம்பக் கல்வியைப் போதிக்க வேண்டியது அவசியம். கைத்தொழில்களும் கற்பிக்கப் படவேண்டியதுதான். ஆனால் ஆரம்பக் கல்வி தன் செலவைத்தானே சரிக் கட்டிக் கொள்ளும்படி மாணவர்களிடமிருந்து வேலை வாங்க வேண்டும் என்னும் கொள்கையைத் தான் பலரும் ஆதரிக்கவில்லை. இதனால் கல்வியே ஒரு வியாபார முறையாகப் போய்விடுமே என்பதுதான் அவர்களுடைய கவலை. ஆரம்பக் கல்வியின் செலவை அரசாங்கமே ஏற்றுக் கொள்ளவேண்டும். ஆனால் இப்போதைய காங்கிரஸ் சர்க்காரோ, மதுவை விலக்கியும் வரிகளைக் குறைத்தும் வருவாயைக் குறைத்துக் கொள்வதால் கல்விக்காக அதிகம் செலவிட முடியாது என்பதும் சிந்திக்கத்தக்க விஷயமே. ஆகவே வருமானத்தை அவர்கள் செல்வர்களுக்கு அதிக வரி விதித்தல், நிர்வாகச் செலவைக் குறைத்தல் முதலியவற்றால் சரிப்படுத்திக் கொண்டேனும் ஆரம்பக் கல்வியை இலவசமாகவே கல்ல முறையில் அளித்தல் சர்க்காரின் கடமையாகும்.

***

சென்னை நகரசபையிலும் ஊழல்

சென்னை நகரசபையைப் பற்றிச் சில நாட்களாகப் பத்திரிகைகளில் அடிபட்டு வருவதை வாசகர்கள் அறிந்திருப்பார்கள். சமீபத்தில் அச்சபை கல்வி யதிகாரி யொருவரை நியமிக்கும் விஷயத்தில் நடந்து கொண்ட விதத்தால் தன்னை இன்னும் அதிகமாகப் பிரபலப்படுத்திக் கொண்டது. காங்கிரஸ்காரர்கள் பெரும்பான்மையாக இருக்கும் இந் நகர சபையிலும் லஞ்சப்பேய் தாண்டவமாடி வருகிற தென்பதைக் கேட்க வாசகர்கள் ஆச்சரியப்படாமலிருக்க முடியாது. காங்கிரஸ்காரர்கள் என்று கருதப்படுபவர்களில் ஒரு சிலரே நகர சபையில் நடைபெறும் ஊழல்களுக்கும் மூலகாரணர்களாய் இருக்கிறார்கள் என்பதை அறியும்போது நாம் வருந்தமாலிருக்க முடியவில்லை. கல்வி யதிகாரியைத் தேர்ந்தெடுக்கும் விஷயத்தில் காங்கிரஸ் கட்சியிலுள்ள ஒரு சிலர் நேர்மையாக நடந்து கொள்ளாததுடன், காங்கிரஸ் கொள்கைக்கே முரண்பாடாகவும் செயலாற்றியது கண்

டிக்கத் தக்கதாகும். இவ்வித ஊழல்களை யெல்லாம் கண்டு சகியாமலே நகரசபையில் டிப்டி மேயராக விருந்துவந்த ஸ்ரீ. எம். பக்தவத்சல முதலியார் தமது பதவியை உடனே ராஜிநாமா செய்து விட்டார். இவ் ஊழல்களுக்கெல்லாம் காரணகர்த்தாக்களாய் இருப்பவர்கள் நாலைந்து நபர்களே எனத் தெரிகிறது. தங்களது சுயநலங் காரணமாக, தேச மகாசபையாகிய காங்கிரஸுக்குக் களங்கத்தை யுண்டு பண்ணிய அந் நபர்கள்மீது உடனே ஒழுங்கு நடவடிக்கை யெடுத்துக் கொள்ளவேண்டிய தவசியம். இவ்வகையில், தமிழ்நாடு காங்கிரஸ்கமிட்டித்தலைவர் ஸ்ரீ முத்துரங்க முதலியார் ஒரு விசாரணைக்கமிட்டி யேற்படுத்தி விசாரணை செய்து அதில் குற்றவாளிக ளெனக் கருதப்பட்டவர்கள்மீது நடவடிக்கை யெடுத்துக் கொள்ள முன் வந்திருப்பது பாராட்டத் தக்கதாகும். மேற்படி ஊழலைப் பத்திரிகைகளிலும், கூட்டங்களிலும், வெளிப்படுத்தி வருவதும், தமிழ்நாடு காங்கிரஸ்கமிட்டி நடவடிக்கை யெடுத்துக் கொள்ளுவதும் அவசரப்பட்டுச் செய்வதாகவும், அவ்விதஞ் செய்து பகிரங்கப்படுத்தாது இரகசியமாகவே வைத்துவர வேண்டுமென்றும் ஒரு சிலர் கூறி வந்தது விந்தையாக இருக்கிறது. அவ் வபிப்பிராயத்தை ஆதரிக்கும் முறையில் சென்னை ஜில்லா காங்கிரஸ்கமிட்டி தீர்மானஞ் செய்திருப்பதும் நமக்கு ஆச்சரியத்தைத் தருகிறது. நகரசபையில் சில காங்கிரஸ்காரர்கள் செய்து வரும் ஊழலை ஏன் வெளிப்படுத்தி கண்டிக்கக் கூடாது என்று நமக்குத் தெரியவில்லை.

***

ஸ்தல ஸ்தாபனங்களைக் கைப்பற்றியதன் நோக்கம்

காங்கிரஸ்காரர்கள் எதற்காக முனிசிபாலிடிகளையும், ஜில்லா போர்டு முதலியவைகளையும் கைப்பற்றினார்கள்? மாகாண சட்டசபை, இந்தியா சட்டசபைகளில் சர்க்காரின் தவறான கொள்கைகளை எடுத்துப் போராடுவதற்காக அங்கம் வகித்து வருகிறார்களே; அதுபோல இந்த ஸ்தாபனங்களிலும் செய்யவா? அல்லவே அல்ல. முனிசிபாலிடிகளும், ஜில்லா போர்டுகளும் பொதுஜனங்களுக்கு நன்மை செய்வதற்காக ஜனநாயக முறையில் ஏற்பட்ட ஸ்தாபனங்களாகும். அவைகளில் சுயநலமிகள் பலர் புகுந்துகொண்டு, கண்டிராக்டு ராஜ்யத்தை நடத்தி லஞ்சம் முதலியன வாங்கி ஊழல்களைச் செய்து பாழ்படுத்தி விட்டனர். இதனால், பொதுமக்களுக்கு நன்மையேற்படுவதற்குப் பதிலாக தீமையே அதிகமாக உண்டாயிற்று. ஆகவே, அந்நிலைமையை நீக்கிப் பொதுமக்களுக்கு நன்மை செய்யவே, காங்கிரஸ் மகாசபை, காங்கிரஸ்காரர்களை முனிசிபாலிடி, ஜில்லா போர்டுகளிலும் ஈடுபடச் செய்தது. அவ்விதமிருக்க, பொதுநல சேவைக்கென அனுப்பப்பட்ட காங்கிரஸ்காரர்களில் சிலர் சுயநல மேலீட்டால் லஞ்சம் வாங்குதல் முதலிய ஊழல்களைச் செய்து காங்கிரஸ் மகாசபைக்கு அபகீர்த்தியை யுண்டு பண்ணுவார்களானால், அவர்கள் செயலைக் கண்டிக்காமலோ, தக்கபடி செய்யப்படும் விசாரணையில் குற்றவாளிகளாக்க கருதப்படுபவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை யெடுத்துக் கொள்ளாமலோ எப்படி இருக்க முடியும்? இதற்கு முன் ஸ்தலஸ்தாபனங்களிலும் சட்டசபைகளிலும் இருந்து வந்தவர்கள் பலவிதமான ஊழல்களைச் செய்து வந்தார்கள் என்ற காரணத்திற்காக அவர்களைப் பொது மக்களும் நாமும் தூற்றி வந்தோம்? வெறுத்தோம்? அதே காரியங்களை காங்கிரஸ்காரர்கள்

செய்தால் மட்டும் பொது மக்கள் எப்படி விரும்புவார்கள்? நாம்தான் எப்படி அநுமதிக்க முடியும்? பிறகட்சியார் செய்தால் மட்டும் குற்றம்? காங்கிரஸ்காரர் செய்தால் குற்றமில்லையா? குற்றஞ் செய்தவர்கள் யாராயிருப்பினும், அவர்களைக் கண்டிப்பதுதான் முறை? அவர்கள் மீது தக்க நடவடிக்கை யெடுத்து, மேலும் அவ்வித குற்றங்களை அவர்கள் செய்யாதவாறு தடுப்பதுதான் நியாயமாகும். இவ்விதஞ் செய்வது மற்றவர்களும் தவறான காரியங்களைச் செய்யாது தடுப்பதற்கு ஒரு மார்க்கமாகும். ஆகவே தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியார் சென்னை நகரசபை ஊழல்களைப் பாரபட்சமற்ற முறையில் விசாரணை செய்து, அதற்குக் காரணஸ்தர்களா யிருந்தவர்கள்மீது தயவு தாட்சண்யமின்றி ஒழுங்கு நடவடிக்கை யெடுத்து பொதுநல வாழ்க்கையில் பரிசுத்தத்தை நிலைநாட்ட முன்வந்ததைப் போற்றுகிறோம்.

***

இன்ஷியூரன்ஸ் முறையும் ஏழைகளும்

மரணபண்டு என்று சாதாரண மக்களால் சொல்லப்படும் இன்ஷியூரன்சு முறையால் மக்களுக்கு நல்ல பலன் உண்டு. ஒரு யானை இருந்தாலும் ஆயிரம் பொன்; இறந்தாலும் ஆயிரம் பொன் என்பதுபோலத் தமது ஜீவியத்தை இன்ஷியூர் செய்தவர்கள் இருந்தாலும், இறந்தாலும் இன்ஷியூர் தொகையைப் பெறுவார்கள். ஒருவரது மரணத்தால் அக்குடும்பத்துக்கு ஏற்படும் துக்கத்தையும் பொருளாதாரக் கஷ்டத்தையும் நிவர்த்தி செய்யக் கூடியது இந்த இன்ஷியூரன்ஸ் திட்டமே. இம்முறையானது பணக்காரர்களைவிட ஏழைகளுக்குத்தான் மிக அவசியமானது. ஆனால் இப்போது உள்ள இன்ஷியூரன்ஸ் முறைகளையும், இதர நிர்ப்பந்தங்களையும், விதிகளையும் பார்க்கும்போது சாதாரணமாக ஏழைகள் இந்த திட்டத்தால் தக்க பலன் அனுபவிக்க முடியாமல் இருக்கின்றனர். இதனால் தேசத்தில் உள்ள பெரும்பான்மையோரான பாமர மக்கள் இந்த வசதியைப் பயன் படுத்திக் கொள்ள இன்னமும் துணிந்து முன்வரவில்லை. ஆகவே இன்ஷியூரன்ஸ் இயக்கம் அபிவிருத்தியடைய வேண்டுமென்றும், அதனால் மக்கள் நன்மை பெற வேண்டுமென்றும் விரும்புவோர் அனைவரும் எளிய முறைகளையும் சௌக்கியமான விதிகளையும் ஏற்படுத்துவதுடன் அவற்றைத் தாய்ப் பாஷை பிரசுரங்கள் மூலம் பிரசாரம் செய்யவேண்டும். இவ்விஷயத்தில் இந்தியா சட்டசபை மெம்பர் ஸ்ரீ. சத்தியமூர்த்தி கூறியுள்ள யோசனையை இன்ஷியூரன்ஸ் கம்பெனிகள் கவனித்தல் நலம். இந்தியா சட்டசபையில் நிறைவேறியுள்ள இன்ஷியூரன்ஸ் மசோதாவைப்பற்றி அவர் சமீபத்தில் சென்னையில் ஓரியண்டல் இன்ஷியூரன்ஸ் கம்பெனி கட்டடத்தில் பேசியபோது தெரிவித்த அபிப்பிராயம் வரவேற்கத் தக்கது. இக் கம்பெனிகாரர்கள் பலரும் கூடி யோசித்து ஏழைகளிடமிருந்து மாதம் ஒரு ரூபாய் வீதம் வாங்க அவர்களுக்கு 500 ரூபாயைப் பாலிசியாகக் கொடுக்கத்தக்க சுலபமான முறையைக் கண்டு பிடிக்கவேண்டும். மேலும் தாங்கள் செலுத்தும் பணம் எவ்வகையிலும் விரயமாகாமல் தங்களுக்குக் கிடைக்கும் என்னும் நம்பிக்கை அவர்களுக்கு ஏற்படும்படியான விதிகளை நிர்ணயிக்கவேண்டும். இன்ஷியூரன்ஸ் சட்டத்தை எல்லா பாஷைகளிலும் மொழி பெயர்த்து வெளியிட்டு மகாஜனங்களுக்கு இலவசமாக வினியோகிக்க வேண்டும். பாலிசி எக்காரணத்தைக் கொண்டும் பறிமுதல் ஆகக்கூடாது. 'சரெண்

டர் வால்யூ' என்று சொல்லப்படும் தொகை மிகக் குறைவாக இருக்கக் கூடாது. மரணத்துக்குப் பின் வீண் சிக்கல்களைக் கிளப்பாமல் எளிதில் பணத்தைக் கொடுக்கவேண்டும். இத்தகைய முறைகள் ஏற்பட்டால் தான் ஏழைகள் இன்ஷியூரன்ஸ் இயக்கத்தால் நன்மையடைய முடியும்; அந்த இயக்கமும் நாட்டில் வலுக்கும் இன்ஷியூரன்ஸ் கம்பெனிக்காரர்களும், ஏஜெண்டுகளும் ஸ்ரீ சத்தியமூர்த்தியின் யோசனையை அமுலில் கொண்டுவர முயற்சிப்பார்களென்று நம்புகிறோம். முடிவாக இன்ஷியூரன்ஸ் திட்டத்தையே அரசாங்கம் ஏற்று நடத்தினாலன்றி அனைவரும் அதனால் பயன்பெற முடியாதென்பது உலகறிந்த விஷயம்.

***

சுகாதார இலாகா மந்திரியின் உபதேசம்

நமது சுகாதார இலாகா மந்திரி கனம். ராஜன் எப்போதுமே துணிச்சல் உடையவர். தாம் சரி என்று நினைப்பதை எப்படிப்பட்ட சந்தர்ப்பத்திலும் தைரியமாக எடுத்துக் கூறுவதுடன் அவசியம் நேரும்போது காரியத்திலும் சாதித்து விடுவார். இந்த இருபதாம் நூற்றாண்டில், மேல்நாட்டு நாகரிகம் ஓங்கியிருக்கும் இச்சமயத்தில், சென்னை சர்வகலாசாலை மாணவர்களிடையே அவர் கேழ்வரகுக் கஞ்சியைப்பற்றியும் மோரின் மகிமையைப் பற்றியும் பிரசாரம் செய்யத் துணிகிறாரென்றால் அவரது மனோ உறுதியைப் பாராட்டாமல் இருக்க முடியுமா? பிரதமமந்திரி கனம். ராஜாஜி தினசரி விடியற் காலையில் துணி தோய்ப்பதை வீண் வேலையென்று கருதும் மாணவர்கள், டாக்டர். ராஜனின் இப்பிரசங்கத்தைக் கண்டதும் அவரை பதினேழாம் நூற்றாண்டுப் பேர்வழி என்றுதான் எண்ணியிருக்க வேண்டும். சுகாதார இலாகாவைத் தமது நிர்வாகத்தில் வைத்துக்கொண்டிருக்கும் அவர் மக்களுக்குச் சுகாதாரத்தைப் போதித்து அவர்கள் வியாதிகளால் அவதியுறாதபடி எச்சரிக்கையுடன் இருக்கும்படி செய்ய வேண்டியது அவருடைய கடமையாகும். ஆதலின் அவர் மாணவர்களிடையே இப்போது சகஜமாகப் பரவிக்கிடக்கும் பல தீய பழக்கங்களைப் பற்றியும் பிரஸ்தாபித்து அவர்கள் நற்குண நற்சீலர்களாக வாழவேண்டும் என்று உபதேசித்தார். புகையிலை உபயோகிப்பதன் தீமையை அவர் நன்கு விளக்கினார். மாணவர்களும் மற்றவர்களும் புகையிலையாகவும், சுருட்டாகவும், பொடியாகவும் அப்பாஷாணத்தை உட்கொள்கிறார்கள். அதனால் ஏற்படும் தீமைகளை அனைவரும் உணரவேண்டுவது அவசியம். நம் நாட்டு மாணவர்கள் பலவிதத்திலும் மேனாட்டு மாணவர்களைவிடக் கேவலமான நிலைமையில் இருக்கிறார்களென்றும், இதற்குக் காரணம் சுகாதார விஷயத்தில் சரியான சிரத்தை எடுத்துக் கொள்ளாததே காரணமென்றும் கனம் மந்திரி கூறுவது கவனிக்கத்தக்கது. தற்காலீக உற்சாகத்தைக் கொடுக்கும் மேனாட்டு ஆகாரவகைகள் பானங்கள் ஆகியவை நமக்குக் கூடாதென்றும், கேழ்வரகுக் கஞ்சி, மோர் ஆகியவையே உபயோகிக்க வேண்டுமென்றும் கூறுகிறார். இவை சாப்பிடுவது ஏழைகளின் வேலை என்று பலர் தவறாகக் கருதுகின்றனர். நாகரிகம் என்னும் பெயரால் நம் மாணவர்களும் இதரர்களும் பல துரப்பியாசங்களையும், தகாத முறையில் அனுஷ்டிக்கும் விஷயத்தில் டாக்டர் ராஜன் தக்க எச்சரிக்கை செய்துள்ளார். நம் நாட்டு உணவுகளும், சுகாதார முறைகளும் சத்துள்ளவை என்பதை நாம் அறியவேண்டும்.

கிராமப் பஞ்சாயத்துகளுக்கு உயிர்

பண்டைக்காலத்தில் நமது நாட்டில் கிராமப் பஞ்சாயத்துகள் மிக அதிகாரத்துடனும் செல்வாக்குடனும் விளங்கியதால் தேசத்தின் நிர்வாகம் செலவு அதிகமில்லாமல் அந்தந்த கிராமத்தின் வருமானத்தில் பெரும்பாகம் அங்கேயிருந்ததால் கிராமவாசிகள் சுபீட்சத்துடன் இருந்தனர். கிராமப் பஞ்சாயத்து சபைகளுக்கே சகல அதிகாரங்களும் இருந்தன. அந்தக காலப் பஞ்சாயத்து முறைகளின் சிறப்பை ஸ்ரீமதி. அன்னிபெசண்ட் அம்மையார் முதலிய பல அறிஞர்களும் பாராட்டி இருக்கிறார்கள். இப்போதும் மிகப் புகழுடன் கூறப்படும் ரஷ்யாவில் சோவியத் ஆட்சி நடைபெறுகிறதல்லவா! ஒவ்வொரு சோவியத்தும் ஒவ்வொரு கிராமப் பஞ்சாயத்து போலத்தான் இருக்கிறது. உண்மையில் சமதர்ம ஆட்சிக்கு அஸ்திவாரம் கிராமப் பஞ்சாயத்துகளுக்கு உயிர் அளிப்பதேயாகும். பிரிட்டிஷ் அரசாங்கம் நிலைத்த பிறகு கிராமப் பஞ்சாயத்துகளுக்கு மதிப்பு இல்லாமற் போனதால் அவை சீரழிந்துவிட்டன. கிராமங்கள் வரிப்பணத்தின் மூலம் சர்க்கார் நிர்வாகத்திற்கு வேண்டிய வருமானத்தை அளிக்கின்றனவே யொழிய அவை ஒன்றும் திரும்பப் பெறுவதில்லை. கிராமங்களே தேசத்தின் முதுகெலும்பாக இருந்தும் அவற்றைக் கேட்பார் யாருமில்லை. தேசத்தின் சுபீட்சத்திற்கும் சுகவாழ்வுக்கும் காரணர்களான கிராமவாசிகள் இன்று தாங்க முடியாத வரிப்பளுவாலும், கோரமான வறுமையினாலும் அவஸ்தைப் படுகிறார்கள். கிராமவாசிகள் இவ்வளவு மகத்தான சங்கடத்தில் இருக்கும்போது தேசம் எப்படி முன்னேற்றமடைய முடியும்? சர்க்காரின் நிர்வாகச் செலவு அதிகமாக இருக்கின்றது. சர்க்கார் வருமானத்தில் பெரும்பாகம் நிர்வாகத்துக்கே செலவாகி விடுவதால் தேசோத்தாரண வேலைகள், பொது ஜன வசதிகள் இவைகளுக்காகச் செலவிடப் போதுமான பணம் இருப்பதில்லை. இதனால் ஏதோ அரசாங்கம் பெருமையாகவும், ஆடம்பரமாகவும் நடக்கிறதே யொழிய தேசம் சரியான பலனை அடையாமல் நாளுக்கு நாள் வறுமையிலும் மூழ்கிக் கொண்டிருக்கிறது. ஆதலினால்தான் பக்தர்கள் ஜனநாயக ஆட்சி ஏற்படவேண்டும் என்று கூறுகிறார்கள். சரியான ஜனநாயக ஆட்சிக்கு அஸ்திவாரம் கிராமப் பஞ்சாயத்து சபைகளை உயிர்ப்பிப்பதேயாகும். இதனால் நிர்வாகச்செலவும் குறையும்; பொதுஜனங்கள் ஆட்சியில் பங்கெடுத்துக் கொள்வது அதிகமாகும். காங்கிரஸ் மந்திரிகள் அதிகாரத்தில் வந்திருப்பதால் இச்சமயத்தில் கிராமப் பஞ்சாயத்து சபைகளை நல்ல முறையில் அமைத்துவிட வேண்டியது அவசியமும் அவசரமுமான வேலையாகும். கிராமத்தின் வருமானத்தில் பெரும்பாகம் அங்கேயே தங்கி அவர்களுக்கே உபயோகப்பட வேண்டும். கிராமத் தொழில்களும் விவசாயமும் அபிவிருத்தி யடையவேண்டும். காங்கிரஸ் மந்திரிகளும் இதை உணர்ந்திருப்பதாகவே தெரிகிறது. நமது மாகாண ரெவினியூ மந்திரி கனம். பிரகாசம் அவர்கள் விருதுநகரில் பேசுகையில் கிராமப் பஞ்சாயத்துகளுக்கு உயிர் அளிப்பதுபற்றிப் பேசியிருக்கிறார். இதை நாம் மனமார வரவேற்கிறோம். பண்டை முறையில் நல்ல பஞ்சாயத்துகளை அமைத்தல் நாட்டு முன்னேற்றத்திற்கு மிக அவசியமாகும்.

தொடர் கதை.

மாயா விரோதி

(ஸி. எஸ். இராமன், எம். ஏ., எல். டி.)

(Rights Reserved)

(319-வது பக்கத் தொடர்ச்சி.)

அம்மாளிகையின் ஒரு பெரிய அறையில் செங்கோட்டை ஜெமீந்தாரிணி இந்திரா தனது சிறிய பையனுடன் விளையாடிக்கொண்டிருந்தாள். அம் மோகனவல்லியின் எழில் வெள்ளம் கரைபுரண்டோடுவது போல் அவள் குழந்தையுடன் பேசும் பொழுதெல்லாம் அழகோடு பிரகாசித்துக் கொண்டிருந்தது. அந்த மின்னற் கொடியாளுடைய முகம் சௌந்தரியமும் புத்தி நுட்பத்தையும் தோற்றுவித்துக் கொண்டிருந்தது. முப்பத்து நான்கு ஆண்டுகள் ஆகியும் அம்மாது அப்பொழுது ரதிதேவி போல் தோற்றினாள். அவளுடைய நீண்ட கருமையான கூந்தல் மிகவும் சிறப்பாக வாரி வைக்கப்பட்டு, பிரகாசித்துக் கொண்டிருந்தது. அவள் போட்டுக்கொண்டிருந்த பின்னலில் சில வாசனை தரும் புஷ்பங்கள் அழகு செய்துகொண்டிருந்தன. பரந்த நெற்றியும் கெம்பீரமான புருவங்களும் பார்ப்போர் உள்ளத்தைக் கவர்வனவாக இருந்தன. கண்கள் அவளுடைய தயாள குணத்தையும் அறிவின் விசாலத்தையும் தோற்றுவிக்கும் கண்ணாடி போல் பிரகாசமாய் இருந்தன. அவளுடைய நீண்ட நாசி அம்மாதினைக் கண்ணுறும் காமுகர்கட்கும் ஏனையோர்க்கும் ஒருவகையான இன்ப மகிழ்ச்சியைக் கொடுத்தது. அவளுடைய சிவந்த அதரங்களும் நல்ல முத்துப் போன்ற பற்களும் சிறந்து விளங்கின. அம் மகா லட்சுமியின் பற்களைக் கண்டோர் தமக்கும் அத்தகைய தந்த வரிசைகள் இல்லாமற் போயினவே என்று ஏக்கங் கொள்ளுவர். சுருங்கச் சொல்லில் அவ்வடிவழகியின் சுந்தரவதனம் கம்பீரமாகவும் சோபையோடும் இருந்தது. அவள் தனது இரண்டு காதுகளிலும் வைரக் கம்மல்கள் அணிந்திருந்தாள். சூரிய ஒளியில் அவை பல வருணங்களை வாரியிறைத்தவாறுடால் வீசிக் கொண்டிருந்தன.

அந்த ஸ்திரீகள் ரத்தினம் கழுத்தில் ஒரு சிறிய பொற் சங்கிலியை மட்டும் அணிந்திருந்தாள். தற்காலத்திய "ஜாக்கெட்"டையும் பம்பாய் சேலையையும் தரித்திருந்தாள்.

அத்தகைய சுந்தரவதியின் எழில் மிக்க வதனத்தில் கொஞ்சம் விசனம் குடிகொண்டிருப்பதாகத் தோன்றிற்று. காரணம் என்ன? கலியாணம் ஆன நாள்முதல் இந்திரா தனது புருஷனுடைய நடத்தையை மனமார வெறுத்து வந்தாள். ஜெமீந்தார் உள்ளன்போடு இந்திராவை நேசிக்கவில்லை. அவளுடைய பணத்தின் பொருட்டு அவர் அவளைக் கலியாணம் செய்துகொண்டிருந்தார். அதை அந்தப் பேழகி அறிந்திருந்தாள், விசனம் அடைந்தாள்.

அவள் தனது பையன் பாலகிருஷ்ணனைப் பெரிய செல்வம் என மதித்து அப்பாலனோடு விளையாடி வருவாள். அக்குழந்தை தகப்பனுருடைய சாயலைப் பெற்றிருக்கவே இல்லை. இருந்தாலும் அவன் லட்சணமாக இருந்தான்.

தாயும் மகனும் விளையாடிக்கொண்டிருக்கையில் இந்திரா பாலனைத் தனது மார்போடு சேர்த்துத் தழுவிக்கொண்டாள்.

"அம்மா, நீ ஏன் அழுகிறாய்? என்ன?" என்று எழுவயதான பாலகிருஷ்ணன் தனது தயாரைக் கேட்டான். தாயார் அழுவதுபோல் முகத்தைக் கொண்டிருந்ததை அச் சிறுவன் விரும்பவில்லை.

இந்திரா மற்றொருபுறம் தனது முகத்தைத் திருப்பிக்கொண்டதைக் கண்ட பாலகிருஷ்ணன் மனம் புண்பட்டான். எனவே, அச்சிறுவன் தான் விளையாடிக் கொண்டிருந்த மரக்குதிரையை உதைத்துத் தள்ளினான்.

"நான் கொஞ்சம் மனவேதனை யடைந்தால் பாலகிருஷ்ணன் அதை அறிந்து விளையாடும் சாமான்களைத் தூக்கி எறிந்து விடுகிறான். பாவம்! எனது மனோவேதனை அவனுக்கு அமைதியின்மையைக் கொடுத்து விடுகிறது," என்று சொல்லிக்கொண்டாள்.

இந்திரா அவனுக்கு தன்னால் இயன்ற மட்டும் கல்வி போதித்து வந்தாள். தன் அருமை செல்வமாக அவனை நினைத்து வளர்த்தாள். ஜெமீந்தாரை மணந்தபின் அவள் முன்பு கொண்டிருந்த சுகமும் மனவமைதியும் மரித்துப் போனதால், உலகத்தில் பற்று அற்றவளாகத் தோன்றினாள். ஆனால் குழந்தையைக் காணுந்தோறும் புத்துயிரும் புதிய உணர்ச்சியும் பெற்றவள்போல் மாறி விடுவாள். தேசீயக்கவி சுப்ரமண்ய பாரதியாருடைய "ஓடி விளையாடு பாப்பா!" எனும் பாட்டைப் பன்முறை இன்பம் தருமாறு பாடி, அவனுக்கு மகிழ்வுணவு ஊட்டுவாள். அன்பு முத்தங்களை ஈவாள்.

இப்பொழுது பாலகிருஷ்ணனை நோக்கினாள். "கிருஷ்ணா, எனக்கு முத்தம் கொடு," என்றாள்.

"அம்மா, இப்போதுதான் நீ பார்க்க அழகாக இருக்கிறாய்," என்றான் பாலகிருஷ்ணன். அதைச் சொல்லுகையில் அவனுடைய நயனங்களில் பிரகாசம் புலப்பட்டது.

அப்பொழுது ஒரு வேலையாள் உள்ளே தோன்றி, மரியாதையாக வந்தனம் செய்து. "வக்கீல் மோகனரங்கம் வந்திருக்கிறார்," என்றான்.

"ஓ! அவரா? நமக்கு நண்பர். அம்மா, நீயும் நானும் ஓடிச்சென்று அவரை யடைவோம்," என்று பாலகிருஷ்ணன் மிகவும் சந்தோஷமாகச் சொல்லிக் குதித்தான். மோகனரங்கம் பையனுடைய மனதைக் கவர மிட்டாயும் பொம்மைகளும் கொடுப்பதை வழக்கமாகச் செய்து கொண்டிருந்தார்.

இந்திரா தனது குழந்தையின் பேச்சைக் கேளாமல், வேலைக்காரனை

நோக்கி, "முதலியாரை வாசகசாலை அறைக்கு அருகில் உள்ள சிறு அறைக்கு அழைத்துச் செல்," என்றாள். அதைக் கேட்டதும் பாலகிருஷ்ணனுக்கு மனக்கலக்கம் ஏற்பட்டது. முகம் களையை யிழந்து, பார்க்க விசனமாக இருந்தது.

மகனுடைய கரத்தைப் பற்றிக்கொண்டு, இந்திரா அவ்வறையை விட்டும் நீங்கினாள். வழியில் பாலகிருஷ்ணனை சேடி பங்கஜக்கிடம் ஒப்புவித்துவிட்டு, வக்கீலைக் காணப் புறப்பட்டாள்.

வக்கீல் மோகனரங்கம் இருந்த அறைக்குள் நுழைந்தாள்.

மோகனரங்கம் ஜெமீந்தாரின் "குடும்ப நண்பர்". ஜெமீந்தாரனிக்கும் மிகப் பழக்கமானவர். இந்திரா அறைக்குள் வந்ததே அவர் வந்தனம் செய்து நின்றார்.

இந்திரா ஒரு நாற்காலியைக் காண்பித்து, அதில் அவரை உட்காருமாறு சைகை செய்தாள். தான் சிறிதுதூரத்தில் ஒரு சோபாவில் சாய்ந்து கொண்டாள். அவள் ஜெமீந்தாரனியன்றோ?

"மோகனரங்கம், நீங்கள் இன்று வந்தது எனக்குச் சந்தோஷமே. இனிமேல் இங்கு வரக்கூடாது," என்று இந்திரா கூறினாள்.

"அம்மா!" என்று கதிகலங்கியவன்போல் மோகனரங்க முதலியார் எழுந்திருந்தார்.

"முதலியாரே, நீங்கள் ஒரு பெரிய கனவான்தான். இரண்டு தினங்களுக்கு முன்பு நீங்கள் என்னை அவதூறாகப் பேசியதை நான் அறியவில்லையென்றா நினைத்தீர்? நீங்கள் கொடுத்த விருந்திற்கு நான் வரமுடியாததைத் தெரிவிக்க பங்கஜத்தை அனுப்பினேன். அவள் உம்மைப் பார்க்குமுன் நீங்கள் பல கண்ணியம் மிக்க சீமாட்டிகளோடு சேர்ந்து என்னை விபசாரி என்று திட்டினீர்களாம். என்னோடு பேசும்பொழுது ஆழ்ந்த விஸ்வாசம் கொண்டவர்போல் பேசுகிறீர்! அதிலும் "குடும்ப நண்பர்" இப்படி கபடநாடகம் நடிப்பதா?" என்று இந்திரா சிறிது சீற்றத்தோடு கூறினாள்.

"அம்மா, நீ உண்மையை அறியாய். அவர்கள் பேசிக்கொண்டால் நான் அவர்கள் சொல்வதைத் தடுத்துப்பேசினால் பெரிய அசங்கிமாயன தர்க்கம் எழும். அதனால் அவர்கள் சொல்லியதற்கு "உம்" போட்டுக் கொண்டிருந்தேன். அதை நீ மறந்துவிடு. நான் உன்னை இத்தனை தினங்களாகக் காதலித்து வருவதை நீ அறியாத விஷயம் அல்லவே," என்று வக்கீல் மோகனரங்கம் மொழிந்தார்.

"மோகனரங்கரே, நீங்கள் என்னைக் காதலிப்பதாகச் சொல்லுகிறீர்கள். என்ன பிரயோஜனம்? நான் உம்மைக் காதலிக்கவில்லை. அது ஒரு பொழுதும் நடக்கக்கூடாத காரியம். இனிமேல் நீங்கள் பேசுவதை நான் கேட்க முடியாது. எனது புருஷனே என்னைச் சட்டை செய்யவில்லை. எனக்கு யாரும் உண்மையான சிநேகிதர்கள் இல்லை. நீர் உண்மையான தோழர்போல் நடித்தீர். உமது நல்ல பேச்சில் முதலில் நான் ஏமாந்து போனேன். நீர் என்பொருட்டு நல்ல வார்த்தைகளை உரைத்தீர். கணவன்

செய்த அக்ரமங்களைப்பற்றி காலேஜ் உபாத்தியாயரைப் போல் சொற்பொழிவுகள் செய்தீர்! நான் மனோவேதனையும் கஷ்டமும் அனுபவிப்பதைக்கண்டு மனம் இரங்கினீர்! இவற்றால் நான் உம்மை ஒரு பெரிய— உண்மையான சிநேகிதர் என்று கொண்டேன். நயவஞ்சக நரியின் நடிப்பைக்கண்டு அபலை யான் ஏமாந்துபோனேன். ஆனால் இப்பொழுது எனது தனிமையையும் கஷ்டத்தையும் ஆதாரவாகக் கொண்டு, என்னிடம் காதல் வார்த்தை பேசினீர்கள். ஐயோ! எல்லாம் எனது கஷ்டகாலம்," என்று இந்திரா மனம் நொந்து பேசினாள்.

வக்கீல் மோகனரங்கம் இந்திரா சொல்வதை மறுத்துப் பேச முடியவில்லை. இந்திரா மறுபடியும் வக்கீலை நோக்கிப் பேசலானாள்:—

"நான் நீர் செய்த முதல் குற்றம் அல்லது தப்பிதத்தைப் பொருட்படுத்தாமல் இருந்தேன். நீங்களும் எனது குழந்தையுடன் சிநேகபாவமாக இருப்பதாகக் காண்பித்து, என்னோடு சகஜமாகப் பேசி வருவதை வழக்கமாக வைத்துக் கொண்டீர். பழைய விஷயத்தைப் பற்றிப் பேசுவதில்லை என்று உறுதி மொழியும் கொடுத்தீர்கள். அதன் மேல் நான் உமது சகவாசத்தில் சந்தோஷமும் மனவமைதியும் பெற்று விட்டதாகச் சில சமயங்களில் நினைத்தது உண்டு. உம்மைக் காணும் பொழுதெல்லாம் சகோதரத்துவம் கொண்டாடினேன். நான் செய்தது தவறு. நான் மட்டும் என் பிரியப்படி நடந்து, உம்மைப் பகிஷ்கரித்திருந்தால் நீங்கள் தனிமையில் கஷ்டப்படும் என்னிடம் காதல் வார்த்தைகள் பேசியிருக்க மாட்டீர்கள். சரி, இனிமேல் நீங்கள் இங்கு வரவேண்டாம்."

"இந்திரா, உன்னை நான் மனதாரக் காதலிக்கிறேன்," என்றார் மோகனரங்கம்.

"நீங்கள் போய் விடும்."

"இது முடியாத காரியம். இந்திரா நீ இன்னும் என் நிலையை அறிந்து கொள்ளவில்லை. எத்தனை பிரியத்தோடு நான் உன்னை நேசிக்கிறேன். தெரியுமா? இரண்டு வருஷங்களாக நான் காதலைப்பற்றிக் கூறவே இல்லை. அதை உன்னிடம் தெரிவியாமல் வைத்துக் கொண்டிருந்தேன். அதற்கு எத்தனை பெரிய திடச்சித்தம் வேண்டும் என்பதை நீ அறியமாட்டாய். உன் புருஷன் உன்னை சட்டை செய்வதில்லை. நீ தனிமையில் காலத்தைக் கழிப்பது எனக்குப் பிடிக்கவில்லை."

இந்திரா எழுந்து போய் விட யோசனை செய்து நின்றாள். கதவருகில் வக்கீல் போய் நின்று கொண்டார்.

"இந்திரா, நீ போகக் கூடாது. நான் சொல்வதைக் கேள். பிறகு நான் எத்தகைய மனிதன் என்பதை அறிந்து கொண்டு, என்னை நேசிக்க ஆரம்பிப்பாய். நீ ஏன் காதலிக்கக் கூடாது? நாம் இருவரும் ஏன் காதலர்களாய் இருக்கலாகாது? உன் புருஷன்! அவன் "ஜலதூதனில்" மடிந்து விட்டான் என்று முதலில் எண்ணி யிருந்தாய். ஆனால் இப்பொழுது எங்கே யிருக்கிறான் அவன்? ஏதாவது கடிதம் உனக்கு எழுதுகிறானா? உலக சஞ்சாரம் செய்கிறான். உன்னை அவன் சட்டை செய்வதே

இடையாது. நீ இப்போது பூரண சுயாதீனம் பெற்று இருப்பதால் என்னைக் காதலிக்கலாம்.''

''ஐயா, நான் போகிறேன். நீர் எனக்கு வழி கொடாவிடில் எனது சேவகர்களைக் கூப்பிட நேரிடும். இங்கே கலவரம் செய்யவா வந்தீர்? உமக்குப் பைத்தியம்போலும். போக வழி விடும்......''

வக்கீல் மோகனரங்கம் அவளுக்கு வழிவிடாமல், அவள் காத்தைப் பிடித்துக் கொண்டு, ''இந்திரா, உன்னைக் காதலிக்கிறேன்'' என்றார். ஜெமீந்தாரிணி தப்பித்துக் கொள்ள முயன்றும் அவர் கையை விடுவதாகக் காணோம். அவர் அவளைக் கட்டியணைத்துக்கொண்டு முத்தம் இட முயன்றார். அந்த அம்மாள் தன்னை விடுவித்துக்கொள்ள முடியாமல் தயங்கினாள். சேலைக்குச் சொருகும் தங்க ஊசியால் இந்திரா அவருடைய கன்னத்தைக் குத்திவிட்டாள். அதனால் வலி பொறாமல், வக்கீல் அவளை திடீரென்று விட்டுவிட்டார்.

''என் அழகே, உன் இஷ்டப்படி நீ நடக்கலாம் என்று நினைக்காதே! உன்னை நான் எப்படியும் என் வழிக்கு கொண்டுவர முடியும்'' என்று உறுமினார், வக்கீல் மோகனரங்க முதலியார்.

அப்பொழுது மோகனரங்கம் கனவானைப்போல் காணப்படவில்லை. ராட்சசன்போல் வஞ்சம் தீர்த்துக்கொள்ளப் பிரியப்படும் கொடிய பாதகனைப்போல் இருந்தார். வல்லமை மிக்க இராஜாளியின் பிடியில் சிக்கிய கிளியைப்போல் இந்திரா நடுங்கினாள். ஆட்களைக் கூப்பிட்டுவிட எண்ணி சாளரத்தின் வாயிலாக நோக்கினாள். சேடி பங்கஜம் தன் குழந்தை பாலகிருஷ்ணனோடு போவதைக் கண்ணுற்றாள். கூப்பிட வாயைத் திறக்க எண்ணிய பொழுது வக்கீல் மோகனரங்கம் அவளைப் பேசக்கூடாது என்று கட்டாயப்படுத்தினார்.

இந்திரா ஒரு ஆசனத்தில் உட்கார்ந்து கொண்டாள். அவள் வதனம் கோபம் கொண்டு இருந்ததால் சிறிது அச்சம் கொடுப்பதாகவும் தோற்றியது.

''பாலகிருஷ்ணனைப் பற்றிப் பேசப்போகிறேன்,'' என்றார் வக்கீல்.

''அவனைப் பற்றி என்ன?'' என்று பிரமிப்பும் திகிலும் கலந்த குரலில் செங்கோட்டை ஜெமீந்தாரிணி கேட்டாள்.

''இந்திரா, நீ என்னைக் கண்டு பயம்கொள்ளாதே. நீ ஊசி கொண்டு குத்துவாய் என்று நினைக்கவில்லை. நீ அப்படிச் செய்தது தவறு. நான் உன்னை அன்புடனும் சிநேகத்தோடும் நேசித்தேன்......''

''அயோக்யத்தனம் என்று சொல்,'' என்றாள் இந்திரா.

(தொடரும்.)

இடியால் மணல் உருகிக் கண்ணாடியாகும் விந்தை

அமெரிக்காவில் டெக்ஸாஸ் என்னுமிடத்தில் அடிக்கடி இடியிடித்து மணலில் விழுகிறதாம். அவ்விதம் தாக்கும் இடியின் உஷ்ணத்தினால் மணல் உருகிக் கண்ணாடியாக மாறுகிறதாம்.

***

மீனுக்குள்ள மூளை சக்தி

கேம்பிரிட்ஜ் புரொபசர் ஜேம்ஸ்கிரே என்பார், மனித மூளைக்கு எவ்வளவு சக்தியுண்டோ அவ்வளவு சக்தி மீனின் மூளைக்கும் உண்டென்று தமது ஆராய்ச்சி வாயிலாகத் தெரிவித்திருக்கிறார். விஷயங்களை நினைத்தல், விஷயங்களைச் சேகரித்தல், புதிய எண்ணங்களை எண்ணுதல், உணர்ச்சி பெறுதல் ஆகிய மனித மூளைக்குள்ள விசேஷ செயல்கள் நான்கும், மீனின் மூளைக்கு அமைந்திருக்கிறதாம். மணியடித்ததும் இரை தின்ன வருவதற்கு சில மீன்கள் பழக்கப்பட்டிருக்கின்றனவாம்.

***

பதி பிரேதத்தைப்பிரிய மனமில்லா மங்கை

நியூயார்க் நகரில் எமிலிக்யூடாஸ் என்ற மங்கை, பிராங்க் என்னும் பெயருடைய கணவர்மீதுள்ள அன்பினால், அவர் இறந்துவிட்ட பின்னரும் அவரது பிரேதத்தைக் கட்டிக்காத்து பதினொரு மாதங்கள் இரவுபகலாக அதனுடனே உண்டு உறங்கிக் காலங்கழித்து வந்தனராம். அக்கம்பக்கத்திலுள்ளார் கணவனைப்பற்றிக் கேட்டால், அவர் நோய்வாய்ப்பட்டுப் படுக்கையாகக் கிடப்பதாகக் கூறி வந்தாராம். எனினும், உண்மை எப்படி போலீஸாருக்குத் தெரிந்து, அவர்கள் வீட்டில் நுழைந்து பிரேதத்தை அப்புறப்படுத்தினராம். சில தசைகளையொட்டிய எலும்புக்கூடாக அப்பிரேதம் காட்சியளித்ததாம். அம்மங்கை பைத்தியக்காரியென கருதப்பட்டு ஆஸ்பத்திரிக்கு அனுப்பப்பட்டாராம்.

***

பாடும் தூண்கள்

விஜயநகரத்தில் பழைய ராஜ்யத்தின் ஞாபகார்த்தக் கட்டிடங்கள் இருக்கின்றன. அவற்றில் ஒன்று வித்தலசாமி கோயில். அக்கோயிலில் ஏழு கல்தூண்கள் இருக்கின்றனவாம். அவைகளில் எந்த தூணையாகிலும் இரும்புக் கம்பிகொண்டு ஓங்கியடித்தால் அது ராகாலாபனை செய்யத் தொடங்கி விடுமாம். இந்திய இசைக்கு முக்கிய எழுத்துக்களான 'ஸரிகமபதநி' என்பவைகளை ஏழு தூண்களும் குறிக்குமாம். ஏழு தூண்களும் சேர்ந்து பாடினால் கேட்பதற்குக் கர்ணாமிர்தமாய் இருக்குமாம்.

"ஆனந்தபோதினி" பஞ்சாங்கம்.

ஈசுவர௵ கார்த்திகைமீ—கலியுகாதி 5039, சாலிவாகனம் 1860,
பசலி 1347, கொல்லமாண்டு 1113, ஹிஜரி 1356,
இங்கிலீஷ் 1937௵ நவம்பர்மீ—டிசம்பர்மீ

கார்த்திகை	நவம்பர்மீ	வாரம்.	திதி.	நக்ஷத்திரம்	யோகம்.	விசேஷங்கள்.
1	16	செவ்	திர53-25	ரே6-53	சித்60	பிரதோஷம், முடவன் முழுக்கு, கரிநாள்
2	17	புதன்	ச○27-28	அஸ்1-15 பர54-30	மர1-15சி	பௌர்ணமி. வைகாநஸ தீபம், சிவ தீபம்
3	18	வியா	பவு18-38	கி✲47-18	மர60	கி✲, பாஞ்சராத்திர தீபம், கார்த்திகை தீபம், அண்ணாமலை தீபம்
4	19	வெள்	பிர8-43	ரோ40-8	மர40-8சி	கார்த்திகபகுளம்
5	20	சனி	துதி0-20 திரி51-48	மிரு33-15	சித்60	
6	21	ஞா	சது44-15	திரு27-10	சித்60	
7	22	திங்	பஞ்37-48	புன22-5	அ22-5சித்	
8	23	செவ்	சஷ்32-50	பூச18-25	சித்60	
9	24	புதன்	சப்29-30	ஆயி16-20	சித்60	
10	25	வியா	அ27-50	மக15-53	அ15-53சி	
11	டிசம்பர் 26	வெள்	நவ27-58	பூர17-10	சித்60	
12	27	சனி	தச29-48	உத்20-10	மர60	
13	28	ஞா	ஏகா33-3	அஸ்24-33	அ24-33சி	
14	29	திங்	து37-30	சித்30-5	பிர30-5அ	தானியஞ் செலவிட
15	30	செவ்	திர43-0	சு36-33	சி36-33ம	பிரதோஷம் [மழை
16	1937௵ 1	புதன்	சது49-13	வி43-48	சித்60	மாசசிவராத்திரி 10-க்குள்
17	2	வியா	●55-53	அ51-28	சி51-28பி	சர்வத்திர அமாவாசை
18	3	வெள்	பிர60	கே59-18	ம59-18அ	திருதினைபிருக்
19	4	சனி	பிர3-28	மூல60	சித்60	மார்க்கசிர சுத்தம், சந்திர
20	5	ஞா	துதி9-18	மூல7-3	அமி7-3சி	சுபமுகூர்த்தம் [தரிசனம்
21	6	திங்	திரி15-33	பூரா14-25	மர60	கணிதாரம்பம் செய்ய
22	7	செவ்	சது21-5	உத்21-3	அ21-3சித்	மாச சதுர்த்தி விரதம்
23	8	புதன்	பஞ்25-40	திரு26-48	சி26-48பி	மஹா சஷ்டி, சம்பாசஷ்டி
24	9	வியா	சஷ்28-50	அவி31-10	சி31-10ம	சஷ்டி, மித்ர சப்தமி
25	10	வெள்	சப்30-23	சத34-0	சித்60	சுப முகூர்த்தம் செய்ய
26	11	சனி	அஷ்30-8	பூர35-5	மர35-5சி	ஏற்றம் ஸ்தாபிக்க
27	12	ஞா	நவ28-3	உத்34-25	அமி60	கிருஷியாரம்பம் செய்ய
28	13	திங்	தச24-0	ரே31-55	சித்60	விவாகம், சுப முகூர்த்தம்
29	14	செவ்	ஏகா18-25	அஸ்27-43	சித்60	சர்வ, மத்வ ஏகாதசி, மச்ச, அகண்ட துவாதசி

சனி		கே	
செ குரு	13-தனு-புத 16-விரு-சுக் 27-கும்-செ		
	சூ-பு ராகு	சுக்	

PRINTED & PUBLISHED BY N. MUNISAWMY MUDALIAR,
AT THE "ANANDA BODHINI" PRESS,
No. 6, LAWYER CHINNATHAMBI MUDALI STREET, MADRAS.



இந்த கிலிட் லீவர கைக்கெடியாரம் பார்வைக்கு அழகாயிருக்கும். சரியான டைம் காட்டும். சிலிண்டர் கெடியாரங்களைப்போல் கொஞ்ச நாளைக்குள் நின்று போவதல்ல. கெடியார கைச் சங்கிலி இனாமாகச் சேர்த்து அனுப்பப்படும். இனாம் சங்கிலியுடன் கடியாரம் விலை ரூபா 5—12—0. தபாற்கூலி வேறு.

டேபில் டைம்பீஸ் இனாம்!

எங்கள் கிலிட் ரோல்ட் கோல்ட் "கோல்டன்" கைக்கெடியாரம் வாங்குகிறவர்களுக்கு மேஜையின் பேரில் வைக்கக்கூடிய ஒரு அழகான டேபில் டைம்பீஸ் இனாமாய் சேர்த்து அனுப்பப்படும்,

விலை ரூபா 6—4—0. தபாற்கூலி பிரத்தியேகம்.





ரோல்டு கோல்டு கிலிட் கைக் கெடியாரங்கள்.

இதிற் கண்டபடி எந்தஷேப் வேண்டுமானாலும் அனுப்படும். வேலைப்பாடு மிகவும் உறுதி. கையில் கட்டிக்கொண்டால் தங்க ஆபரணம்போல் இருக்கும். ஒவ்வொரு கடியாரத்திற்கும் ரோல்டு கோல்டு கிலிட் கைச் சங்கிலி இனாமாய் சேர்த்து அனுப்பப்படும். விலை ரூபா 6—4—0.

வி. பி. சார்ஜ் வேறு.

130 சாமான்கள் அடங்கிய பெட்டி

விலை ரூபா 2—12—0

அழகிய நிப்புள்ள பவுண்டன் பேனா 1; இமிடேஷன் வைர மோதிரங்கள் 2; ஷர்ட் பொத்தான்கள் 12; கல்லிழைத்த புரூச் 1; ஜப்பான் பொம்மைகள் 6; முகம் பார்க்கும் கண்ணாடி 1; தந்த சீப்பு 1; மடிப்புள்ள கத்தி 1; சோர்த்தியான கத்தி 1; காம்பினேஷன் சாவி வளையமும் செயின் 1; பென்சல்கள் 12; பென்சல் கிளிப்புடன்கூடிய கவர் 1; பென் ஹோல்டர்கள் 6; நிப்புகள் 12; மணிபர்ஸ் 1; இங்கி புட்டி 1; இங்கி மாத்திரைகள் 12; செண்ட் புட்டி 1; தேசீய டிரான்ஸ்பர் படங்கள் 32; சேப்டி பின்கள் 25 ஆக 130 சாமான்கள் அடங்கியது.

சுபீரியர் வாட்ச் கம்பெனி, தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

8

மதன கோலாகல தங்கமாத்திரை

இம்மருந்து தாதுபுஷ்டியைத் தருவதில் நிகரற்றது. இதில் கஞ்சா, அபின் முதலிய லாகிரி வஸ்துக்கள் சிறிதும் சேர்க்கப்படவில்லை. வயது முதிர்ந்த காரணத்தாலும், வரம்பற்ற போக நுகர்ச்சியாலும், இழந்த பலத்தை இம்மருந்து ஆச்சரியப்படத்தக்க விதமாய் உண்டாக்கி ஒருவிதமான சுறுசுறுப்பையும் கொடுக்கும். இதுவன்றி வேறு எந்த நோயினாலுண்டான பலவீனமும் இம்மருந்தினால் நீங்கும். இரத்த விருத்தியையுண்டாக்கி நரம்புகளுக்கு உறுதியைக் கொடுக்கும் தன்மையில் இது கைகண்ட மருந்து. வயோதிகமே தெரியாது. களைப்பும் தோன்றாது. சோர்வையும் சோம்பலையும் நீக்கித் தேக பலத்தைக் கொடுக்கும்.

இது, தங்கம், வெள்ளி, முத்து, அயம், காந்தம் முதலிய உயர்ந்த உலோகச் சரக்குகளும், சஞ்சீவிக்கு நிகரான பல மூலிகைகளும் சேர்க்கப்பட்டு சிறந்த கைபாக செய்பாகங்களாய் தயாரிக்கப்பட்டது.

இதனை ஒருமுறை வாங்கி உபயோகித்தால் இதன் மேலான குணம் தானே தெரியும். 20-மாத்திரைகொண்ட சீசா 1-க்கு விலை ரூபா 2.

சீதபேதி (டிசென்டரி) பவுடர்

இரத்தபேதி, சீதபேதி, சீதமும் இரத்தமும் கலந்த பேதி, மலத்துடன் இரத்தம் வருதல், மூலக் கடுப்பு அடிவயிற்று நோய் முதலான வியாதிகள் குழந்தைகள் முதல் பெரியோர் வரையில் யாருக்கிருந்தாலும் 4-வேளையில் இது அவற்றைத் தப்பாமல் தடுக்கும்.

ஒரு புட்டியின் விலை அணா 8.

குழந்தை கக்கிருமல் நிவாரணி

இம்மருந்து கக்குவானால் கஷ்டப்படும் பிள்ளைகளுக்கு ஓர் ரக்ஷிணி. இது வெகு நேர்த்தியாகவும், சுகமாகவும், குழந்தைகள் சாப்பிடுவதற்கு இனிப்பாக இருக்கும். இரண்டு மூன்று நாட்களில் கக்கிருமல் நேரம் பொறுத்து கொஞ்சம் கொஞ்சமாக வந்து சில நாளைக்குள் பூர்த்தியாக குணத்தைத் தரும். இதை உபயோகிக்கும் விதம் மருந்துடன் அனுப்பப்படும்.

புட்டி 1-க்கு விலை ரூபா 1—4—0. தபாற்செலவு பிரத்தியேகம்.

நாக்குப்பூச்சியை நாசமாக்கும் பில்லை

இந்த பில்லைகள் ஒரு வருடத்துக் குழந்தைகட்கு அரை பில்லையும், மற்றவர்கட்கு 1 அல்லது 2 பில்லைகளும் கொடுத்தால் வயிற்றிலுள்ள சிறு கிருமிகள் யாவற்றும் பந்து பந்தாய் வந்துவிடும். 8-பில்லை விலை அணா 6.

தனலட்சுமி கம்பெனி, நெ. 6, வெங்கடேச மேஸ்திரி தெரு, மதராஸ்.

மானிடர்க்கு மகிழ்ச்சியைத்தரும்

மகா சந்தனாதித் தைலம்

அன்பர்களே! வெயிற்காலத்திற்கு இன்பந்தரும் இந்த மகா சந்தனாதித் தைலம், சிறந்த பல மூலிகைகளாலும், உயர்ந்த சந்தனக்கட்டைச் சத்தினாலும், பசும்பால் முதலிய சிரேஷ்டமான கற்க வகைகளினாலும் சித்த ஆயுர்வேத முறைப்படி பெரும் பிரயாசையின்மேல் செய்யப்பட்டு இப்போது வெளிவந்திருக்கிறது.

நூற்றுக் கணக்கான பணச் செலவின்மேல் தீர்க்க வேண்டிய வியாதிகளையெல்லாம், இந்த சந்தனாதித் தைலத்தினால் தீர்த்துக்கொள்ளலாம்; இதற்குப் பல கனவான்கள் அநேகம் நற்சாக்ஷிப் பத்திரங்கள் அனுப்பியிருக்கின்றனர்.

இத்தைலத்தை வாரத்திற்கு இரண்டு முறையாக, சிரசில் தேய்த்துச் சிகைக்காயிட்டு வெந்நீரில் ஸ்நானஞ் செய்து வருவதால் கண்ணெரிச்சல், கண்களில் நீர் வடிதல், காதுநோய், தலைப்பாரம், மூளைக் கொதிப்பு, ஒற்றைத் தலைவலி, மண்டையிடி, சாலேச்வரம், பித்த பாண்டு, காமாலை, அஸ்தி சுரம், நாவரட்சி, கைகால் எரிவு, தேக வெளுப்பு, மேக ரோகங்கள், அதிக வெட்டையினாலுண்டான துர்நாற்றங்கள், சொறி, சிரங்குகள், நமைச்சல், பீனிசம், கபால சூலை முதலிய வியாதிகள் நீங்கித் தேகத்திற்குச் சுகமுண்டாக்கும்; ஞாபக சக்தி அதிகப்படும்; கண்ணிற்கு நல்ல ஒளியுண்டாகும்.

இதைத் தேய்த்து நீடித்து ஸ்நானஞ் செய்து வருவதால் மூளையில் கொதிப்பு நீங்கிக் குளிர்ச்சி யுண்டாகும்; மூளை அதிர்ச்சி, துடி துடிப்பு, தலை நமைச்சல் முத்லியவைகளும் நீங்கும்; மற்ற ரோகம் அறவே ஒழிந்துவிடும்; பித்தத்தினால் நரைத்த உரோமங்கள் கருமை யடையும்.

இத்தைலம் தேய்த்து ஸ்நானஞ்செய்த தினத்தன்று சீதள பதார்த்தங்களையும், தயிர் மோர் முதலியவற்றையும், பகல் நித்திரை, ஸ்திரீ சம்போகம் முதலியவைகளையும் நீக்கவேண்டும்.

இதன் விலை 1 சேர் தைலம் அடங்கிய டின் ரூபா 1-12—0
,, ½ ,, ,, 1—0—0

இமயகிரி சஞ்சீவித் தைலம்

இது உள்ளுக்கும் மேலுக்கும் உபயோகிக்கக்கூடிய சிறந்த ஔஷதம். ஜலதோஷம், தொண்டை நோய், தலைவலி, கழுத்து நோய், ஜுரம், ஜன்னி, பிடிப்பு, வாந்திபேதி, ஈழை இருமல், இரைப்பு, அஜீர்ணம், வயிற்றுவலி முதலான வியாதிகளை உடனே கண்டிக்கும். இதன் சிறந்த குணத்தை அனுபோகத்தில் தெரிந்துகொள்ளலாம்.

புட்டி 1-க்கு விலை அணா 8. புட்டி 3-க்கு விலை ரூபா 1—4—0

தனலட்சுமி கம்பெனி, நெ. 6, வெங்கடேச மேஸ்திரி தெரு, மதராஸ்.

அயக்காந்த சத்தின் திராவகம்

இந்தத் திவ்ய ஔஷதம், விஷ சுரம் முதலிய எத்தகைய ஜுரத்தினாலும் தேகம் மெலிந்து வெளுத்துப்போனவர்களுக்கும், வேறு பல வியாதிகளால் தாக்கப்பட்டுப் பலமற்றுப் போனவர்களுக்கும், தாது விருத்தி நாட்டங்கொண்டு பல மருந்துகளைச் சாப்பிட்டு குணமடையாதவர்களுக்கு இது ஒரு அமிர்தமாகும் என்றே நிச்சயமாகக் கூறுவோம். இம்மருந்தை உட்கொள்வதால் மல ஜலம் தாராளமாய்க் கழிந்து பசியின்மையைப் போக்கி ஜீர்ண சக்தியைக் கொடுத்துப் பரிசுத்த இரத்தத்தைப் பெருக்கும். தாது விருத்தி உண்டாகும். தேகம் சிவப்படைந்து முகம் வசீகரமாகும்.

இம்மருந்தைச் சாப்பிடுகிறவர்கள் தேக திடத்தைப் பெற்று, வலிவுள்ள மககளைப் பெறுவார்கள். சகல இன்பங்களையும் அநுபவிக்கலாம். ஆண்பெண் இருபாலரும் எப்பொழுதும் உபயோகிக்கலாம்.

பெரியவர்கள் ஒரு அவுன்ஸ் தண்ணீர் அல்லது பசும் பாலில் 10, 12 துளி வரையிலும், சிறியவர்கள் 2-முதல் 6, 7 துளிகள் வரையிலும் காலை மாலை இரு வேளையும் சாப்பிடவேண்டும். இதற்கு யாதொரு பத்தியமுமில்லை. எல்லா ஏழைகளும் வாங்கி உபயோகிக்கும்பொருட்டே மிகக் குறைந்த விலைக்கு விற்கிறோம். ஒரு மாதம் சாப்பிடக்கூடிய மருந்தின் விலை அணா 12. தபாற் செலவு வேறு.

சிவப்பிரகாச பல் பொடி

இந்தச் சிவப்பிரகாச பல் பொடி மற்ற இதர பல்பொடிகளைப் போலிராமல், அதிக சுகந்தமாகவும், பல்வலி, பல்லில் சொத்தை, ஈறு வளர்ந்திருத்தல், வாய் ரணம், வாய் நாற்றம், பல்லாட்டம் முதலிய வியாதிகளை நீக்குவதுமல்லாமல், பல் நன்றாய்த் துலங்கும்படிச் செய்யும். வாயில் சதா கம கம வென்னும் மணத்தை உண்டாக்கிக் கொண்டிருக்கும். ஒரு மாதத்திற்கு உபயோகிக்கக்கூடிய பல் பொடி டப்பி 1-க்கு விலை அணா 2.

6 டப்பிகள் அணா 10.

ஜீவாதார சஞ்சீவி திராவகம்

இது தங்கம், அயம், மற்றும் சில சத்துப் பொருள்களைச் சேர்த்து அநுபோக முறையில் தயார் செய்யப்பட்டதாகும். சரீரத்திலுள்ள தச நாடிகளும் தளர்ந்து பலங் குறைந்து அகால மரணத்துக்குள்ளாகும் கொடிய விபத்துக்கு இத்திராவகம் கைகண்ட சஞ்சீவியைப் போன்றது. இது சரீரத்திற்கு சுகத்தைக் கொடுத்து, ஆயுளை விருத்திசெய்து, பலவீனம், கைகால் ஓய்ச்சல், சோம்பல், தேகம் மெலிதல், ஜீரணக் குறைவு, புளியேப்பம், பசியின்மை, ஞாபகக் குறைவு, தைரியமின்மை, தாது நஷ்டம், கண்டமாலை, மலச்சிக்கல், நரம்புத் தளர்ச்சி, மார் நோய், சரீரம் வெளுத்தல் முதலிய வியாதிகளை ஒரு வாரத்திற்குள் மாந்திரீகம்போல் குணப்படுத்தும். இது வரையில் எந்த வைத்தியர்களாலும் கண்டுபிடிக்கப்படாத அவுஷதம் இதுவே என்பதை இதை உட்கொண்ட ஐந்து நிமிஷத்தில் தெரிந்து கொள்ளலாம். குழந்தைகள் முதல் பெரியோர்கள் வரையிலும் உபயோகிக்கலாம். புட்டி 1-க்கு விலை ரூ. 1. புட்டி 3-க்கு விலை ரூ. 2—8—0.



மோஹினி பரிமள

கூந்தல் தைலம்

5-வித இனாம் சாமான்கள்
சேர்த்தனுப்பப்படும்.

இந்தத் தைலத்தை கூந்தலில் தடவிக்கொண்டால் அன்று மலர்ந்த புஷ்பங்களின் வாசனைக்கு நிகராயிருக்கும். கூந்தலுக்கு வளர்ச்சியைத் தருவதுடன் தலைக் கொதிப்பையும் அடக்கி தேகத்திற்கு ஆரோக்கியத்தைத் தரவல்லது. இதன் விலை அணா 12.

இனாம் சாமான்கள் :—1-செண்டு புட்டி, 1-பெட்ரூம் படம், 1-ஜவ்வாது பில்லை, 1-கலர் சாந்து, 1-சிறிய கண்ணாடி.

வாத ஜீர்ணபி லேகியம்

இந்த லேகியத்தை கெச்சைக்காய் பிரமாணம் காலை, மாலை சாப்பிட்டால் அக்னி மந்தம், வயிற்றுவலி, குன்மம், வாதம் முதலிய அநேக ரோகங்கள் தீரும். பத்திய விவரம் மருந்துடன் சேர்த்து அனுப்பப்படும்.

டப்பி 1-க்கு விலை ரூபா 1. தபால் செலவு வேறு.

காப் கியூர் என்னும் க்ஷய அரி

கப இருமல், இரைப்பு அல்லது மந்தகாசம், க்ஷயம், சளி இருமல், கக்குவாய் இருமல், பெருத்த இருமல், தொண்டை நோய், சுவாசகாசம், கடினமான ஜலதோஷம், அபாயமான ஈழை இருமல், தொண்டை யெரிச்சல், தொண்டைக் கரகரப்பு, இருமலினால் தூக்கம் பிடியாமை, குளிர்ச்சியான வஸ்துவைச் சாப்பிடுகிறதினாலும் பனியில் நனைவதினாலும் உண்டாகும் சாதாரண இருமல் முதலான வியாதிகளை நாலு தினத்தில் இது கண்டித்துக் கோழையை வெளியில் தள்ளி நன்றாய் அவ்வியாதி கொண்டிருந்தவரை தூங்கச் செய்யும். புட்டி 1-க்கு விலை ரூபா 1.

கள்ள நோய் நிவாரணி

இது 3-தினத்தில் குணப்படுத்தும்

மேக உஷ்ணம் என்பது வரம்பற்ற ஸ்திரீ போகத்தினால் தாது கெட மூலத்தில் அக்னி அதிகரிப்பதனால் ஏற்படும் கள்ளநோய். நீரடைப்பு, சதையடைப்பு, பவுத்திரம், அரையாப்பு முதலியன இந்த நோயின் மூலமாய் ஏற்படும். நீர்க்கடுப்பும், குத்தலும், எரிச்சலும் காண்பதுண்டு. இவைகளை நீக்கி நல்ல சுகத்தைக் கொடுக்கக்கூடிய அநுபவ மருந்து இது. பத்தியம் கிடையாது. இதனை உபயோகிக்கும் விவரம் மருந்துடன் அனுப்பப்படும்.

புட்டி 1-க்கு விலை ரூபா 1. தபாற்கூலி வேறு.

மயிர் போக்கும் சூரணம்

இந்த சூரணத்தை ஜலத்தில் கலந்து, மயிர் போக்கவேண்டிய விடத்தில் தடவி உலர்ந்த பின் உடனே 5-நிமிஷம் பொறுத்து கழுவினால் மயிர் போய்விடும். புட்டி 1-க்கு விலை அணா 8.

மயிர் போக்கும் சோப்

இது ஒவ்வொருவருக்கும் மிகவும் அத்தியாவசியமானது. சரீரத்தின் எந்தப் பாகத்திலுமுள்ள மயிரை இந்த சோப்பின் உதவியால் பிரயாசையின்றி வெகு சுலபமாய் போக்கிவிடலாம். மயிரைப் போக்கவேண்டிய இடத்தில் கொஞ்சம் ஜலத்தைப் பூசி, அதன்மேல் இந்த சோப்பைத் தேய்த்து ஐந்து நிமிஷம் கழித்து காகித கார்டினாலாவது, ஓலைத் துண்டினாலாவது வழித்தால் அவ்விடத்திலுள்ள மயிர் யாவும் கழிந்து போகும். அந்த இடம் பிறகு மழமழப்பாக விருக்கும். இந்த சோப்பில் துர்நாற்றம் முதலியவை இரா. 3-சோப் கொண்ட பாக் 1-க்கு விலை அணா 14.

தனலட்சுமி கம்பெனி, நெ. 6, வெங்கடேச மேஸ்திரி தெரு, மதராஸ்.

அமெரிக்கன் ரிங்வொரம் கிரீம்

சரீரத்திலும், இடுப்பிலும் மற்றப் பாகங்களிலும் தோன்றி அதிக தமைச்சலையும், தொந்திரவையும் உண்டுபண்ணும் சகல படைகளுக்கும் இது கைகண்ட அவுஷதம். முகத்தில் தோன்றும் தேம்பல், வங்கு முதலியவற்றை உடனே போக்கும். இதற்கு நிகரான மருந்து வேறே கிடையாது. சரீரத்தை மிருதுவாயும், அழகுடையதாயும் செய்வதில் இது இணையற்றது. புட்டி 1-க்கு விலை அணா 8. 3-க்கு விலை ரூ. 1—4—0.

ப்ரெஞ்சு லெட்டர்ஸ் என்னும்

ரப்பர் பெஸ்ஸாரிகள்

கருதரித்தலைத் தடுக்கும் பொருட்டுப் புருஷர்கள் உபயோகப் படுத்துவதற்கான ரப்பர் கருவிகள் யாவரும் உபயோகிக்கலாம். நெ. 1. ஜீத் 1-க்கு ரூ. 1–12–0. நெ. 2. ரூ. 1. நெ. 3. அணா 12. நெ. 4, விலை அணா 8.

பெண்களுக்கேற்ற கருவி

சாஸ்திர ஆராய்ச்சி செய்து கர்ப்பத் தடைக்கு இன்றியமையாததென்று கருதப்படுவதும் டாக்டர் மேரிஸ்டோப்ஸ் முதலானவர்களால் சிபார்சு செய்யப்படுவதுமான இந்த மெல்லிய பெஸ்ஸாரியை எந்த ஸ்திரீயும் கருத்தடைககாக உபயோகப்படுத்திக்கொள்ளலாம். உபயோகிக்கும் விதம் சேர்த்து அனுப்பப்படும். சிறியது விலை ரூபா 2. பெரியது விலை ரூ. 2—4—0.

கருணாநிதி டிபோ, நெ. 1/6, வெங்கடேசமேஸ்திரி தெரு மதராஸ்.

புதிய கொக்கோக வசனம்

(உண்மையான இன்ப நூல் இதுவே.)

இதைப்போன்ற பலவித புஸ்தகங்கள் வெளிவந்திருப்பினும், அவைகளின் விஷயங்கள் மனதிற் பதியுமாறு எழுதப்படவில்லை. ஆனால் இச்சிறு நூலில் ஆண் பெண் இருபாலரும் சிற்றின்ப சம்பந்தமாகவும், இல்வாழ்க்கை சம்பந்தமாகவும் அறியவேண்டிய பல விஷயங்களும், மர்மங்களும் தெளிவான நடையில், சுருங்கச்சொல்லி விளங்கவைக்கப்பட்டிருக்கிறது. இப்போது ஆறும் பதிப்பு வெளியானதாலேயே இதை மக்கள் எவ்வாறு விரும்புகிறார்களென்பது தெரிகிறது. சட்டைப் பையில் அடங்கும்படியான அளவு புஸ்தகம் விலை ரூபா 1.

கொக்கோகம் விலை ரூபா 1.

திருவிளையாடல் விலை ரூபா 1.

பி. சார்ஜ் வேறு.

புக் டிபோ, திருவல்லிக்கேணி, மதராஸ்.

நூதன தமிழ் நாவல்களும் கதைப் புத்தகங்களும்.

ஆரணி-குப்புசாமி முதலியார் இயற்றியவை.

	ரூ.	அ.
ஞானசெல்வாம்பாள் 5பாகம்	9	10
கற்பகச் சோலையின் அற்புதக் கொலை ...	1	4
கடற்கொள்ளைக்காரன்2பாகம்	3	4
மதனாம்பாள் 2-பாகம் ...	3	0
லோகநாயகி ...	1	0
விளையாட்டுச் சாமான் ...	1	6
பவளத்தீவு 2-பாகங்கள் ...	3	0
தபால்கொள்ளைக்காரர்கள்...	0	14
அமராவதி 2-பாகங்கள் ...	4	0
மஞ்சள் அறையின் மர்மம் ...	1	8
கற்கோட்டை ...	2	0
பூங்கோதை ...	0	10
வீரநாதன் ...	0	12
கனகபூஷணம் 2-பாகமும் ...	3	8
கமலசேகரன் ...	1	12
தினகரசுந்தரி ...	1	0
ரத்தினபுரிரகசியம் 8பாகமும்	16	2
சந்திராபாய் ...	2	0
இராஜாமணி ...	2	0
இரத்தினபாய் ...	1	12
மதனபூஷணம் ...	1	0
சுவர்ணாம்பாள் ...	0	12
தேவசுந்தரி ...	1	4
குணசுந்தரன் ...	0	12
பத்மாஸனி ...	0	14
ஆனந்தஸிங் ...	2	0
மின்சார மாயவன் ...	1	8
ஆனந்தசிங்கின் அஷ்டஜயங்கள்	1	12
அர்ஜுனஸிங், சுந்தர் ...	0	2
கைவல்லிய நவநீத வசனம்...	1	8
சகோதரவாஞ்சை ...	0	7

187534

	ரூ.	அ.
தத்வசங்க்ரஹ ராமாயணம்...	4	0
ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சருடைய சரித்திரமும் உபதேசங்களும்	1	12
விவேகானந்தர் ...	4	0
தமிழ் மெடீரியா மெடிகா ...	3	0
மாதவி மாதவன் 2-பாகம் ...	2	0
மலையாள பகவதி ...	1	0
அற்புத நவநீத ரம்பை ...	1	0
அகட விகட விலாச விநோதம்	0	10
தங்கக் குகை இரகசியம் ...	0	12

	ரூ.	அ
தயாராளன் கதை ...	0	12
பூலோக லக்ஷ்மி கதை ...	0	10
கனகரத்தினம் ...	0	8
கண்டிராஜா நாடகம் ...	0	12
நளின சுந்தரி ...	0	10
கம்பராமாயண வசனசங்கிரகம்	2	0
குசேலோபாக்கியான வசனம்	1	0
ஸ்ரீபாலன் ...	0	8
உதயணன் ...	0	7
தசக்கிரீவன் ...	0	14
போஜ சரித்திரம் ...	0	5
சதானந்தர் ...	1	4
ஜீவகன் வசனம் ...	1	[illegible]
கர்ணன் சரிதை ...	0	[illegible]
பீஷ்ம விஜயம் ...	0	10
சீர்த்திசிங்கன் ...	0	8
மூப்பெருந்தாசர் ...	0	10
அரிச்சந்திரன் சரிதை ...	0	8
நீலக்கொடி ...	0	5
மணவாளன் ...	0	3
பரசுராமன் ...	0	3
சிசுபாலன் ...	0	8
அங்கதன் ...	0	4
தசாவதாரம் ...	0	6
கிருஷ்ணன் தூது வசனம் ...	0	8
சண்டோபாக்யானம் ...	0	6
கருணாகரரும் சத்தியசீலரும்	0	8
சத்தியவசனி	0	4
விமலன் ...	0	4
கண்ணபிரான் ...	0	4
செய்யுட்பாடத்திரட்டு ...	0	4
நாலுமந்திரி கதை ...	0	4
மங்களேசுவரன் ...	0	6
தக்கன் ...	0	6
சீமந்தனி ...	0	8
நான்குகோடி ...	0	4
மதிமோசவிளக்கம் ...	1	0
மெய்க்காதலி ...	0	8
மேனுமிலுக்[illegible] ...	0	8
வீணைகா[illegible]	0	8
மடே[illegible] கதை	0	8
கே[illegible]லவி கதை	0	8
[illegible]லவி கதை	0	6
[illegible]ட்ட மறந்த க[illegible]	0	5

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால் [illegible]ட்டி நெ. 167[illegible]ஸ்.

அநேக நற்சாட்சிப் பத்திரங்கள் பெற்ற (ரிஜிஸ்டர்டு.)

"சகுந்தலா" கூந்தல் வளரும்

பரிமளத் தைலம்

அழகுக்கு எண்ணெய் அடைய

டின் 1-க்கு விலை அணா 12.

இத்தைலத்தின் பரிமளம் எவருக்கும் இன்பத்தை யளிக்கும். இது கூந்தலை நீளமாக வளரச் செய்யும். மூளையின் கொதிப்பைத் தணியச் செய்யும். கண்களுக்குக் குளிர்ச்சியைத் தரும். சிரசிலுள்ள பல வியாதிகளையும் நிவர்த்தி செய்யும். கண்களில் நீர்வடிதல், தலையில் புண், மயிர்வெடிப்பு, மயக்கம், தலைச்சுற்றல், தேக நமைச்சல், சொறி, சிரங்கு, கற்றாழை நாற்றம், மனோவியாகூலம், ஞாபகமறதி இவைகளைப் போக்கடித்துத் தேக ஆரோக்கியத்தைத் தந்து வாசனையை உண்டாக்கும். இந்தத் தைலம், பல வனமூலிகைகளால் சாஸ்திரப்படி தயார் செய்யப்பட்டது. இதில் ஒரு டின் தைலம் வாங்கிப் பார்த்தால் இதன் அருமை விளங்கும்.

கிருஷ்ண சஞ்சீவி

தலைநோய், பாரிச வாய்வு, சுளுக்கு, புண்கள், காயங்கள், வீக்கங்கள், கொப்பளங்கள், கட்டிகள், இருமல், மூச்சடைப்பு, தேள் கொட்டின விஷம் இவைகளைத் தீர்ப்பதில் இது முதன்மை பெற்றது. நோய்கண்ட இடத்தில் இந்த கிருஷ்ண சஞ்சீவியைத் தடவி நன்றாய் இரண்டு மூன்று நிமிஷங்கள் வரை தேய்த்தால், அது மாயமாய் ஓடிவிடும். இளங்குழந்தைகளுக்குக் காணும் சைத்திய நோய்களுக்கும் இதை உபயோகிக்கலாம். இதன் புட்டிகள் ஆயிரக்கணக்காகச் செலவழிந்து கொண்டு வருகின்றன. ஒவ்வொரு குடும்பத்திலும், பிரயாணிகள் கையிலும் இந்த கிருஷ்ண சஞ்சீவி இருந்தே தீரவேண்டும். இதன் விலை புட்டி 1-க்கு அணு 8. டஜன் 1-க்கு ரூ. 5

[illegible] கம்பெனி, தபால் பெட்டி நெ. 167, மதராஸ்

"பிரசண்ட விகடன்"

மாதம் இருமுறை வெளிவரும்

ஒரு ஹாஸ்யப் பத்திரிகை.

இதில் சிறப்பாக அரசியல், சமூகவியல், சமயவியல் சம்பந்தமான எல்லா விஷயங்களும் விலாப் புடைக்கச் சிரிக்கச் செய்யும் தோரணையில் தமாஷாகவும், வேடிக்கையாகவும், விநோதமாகவும், கேலியாகவும் வெளிவரும். ஏராளமான அபூர்வ ஹாஸ்ய சித்திரப் படங்கள் பத்திரிகையை அலங்கரித்து வரும். தேச சமூக விருத்திக்கு உழைப்பது. இன்றே சந்தாதாரராகச் சேர முந்துங்கள்.

ஆண்டுச் சந்தா தபால் கூலி உட்பட உள் நாடு ரூ. 1—8—0.

வெளி நாடு ரூ. 2—8—0.

தனிப்பிரதி விலை அணா ஒன்று.

ஏஜண்டுகளாக விரும்புவோர் [illegible] விவரம் தெரிந்துகொள்ளலாம்.

ரயில்வே ஸ்டேஷன்களிலுள்ள ஹிக்கின்பாதம்ஸ் புஸ்தகசாலைகளிலும் "சுதேசமித்திரன்" புஸ்தக சாலைகளிலும், எல்லா ஊர்களிலுமுள்ள ஏஜண்டுகளிடமும் "பிரசண்ட விகடன்" ஒரு அணாவுக்கு விற்கப்படும்.

ஏஜெண்டுகள் இல்லாத ஊருக்கு ஏஜண்டுகள் தேவை.

மானேஜர், "பிரசண்ட விகடன்" ஆபீஸ்.
நெ. 6, லாயர் சின்னதம்பி முதலி தெரு, மதராஸ்.